

குக்கின் பதவி நீடிப்பு

பக்கம் 18

உதயன்

சுடர்: 29 கதிர்: 304 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 10, வெள்ளி 26.09.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்

யாழ். - 20/=

வன்னி - 20/=

தெளிவான வானிலை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h

ஈரப்பதம்: 48%

காற்றமுத்தம்: 1008 hPa

வெளிச்சத் தெளிவு: மிக நன்று

சூரியோதயம்: 05:23

சூரியஸ்தமனம்: 18:04


# பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதானவர்களை விடுவியுங்கள்

## யாழ்ப்பாணம் வந்திருந்த சட்டமா அதிபரிடம் சட்டத்தரணிகள் கூட்டாகக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.26

"விடுதலைப் புலிகள் அமைப்பு தற்போது இயங்காத காரணத்தால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும். அது போன்று பல ஆண்டுகளாக வழக்குத் தொடரப்படாது, தடுத்து வைத்திருப்பவர்களையும் பொதுமன்னிப்பு அடிப்படையில் விடுவிக்க வேண்டும். ஜே.வி.பியினரை விடுவித்தமை போன்று இவர்களை விடுவிக்க முடியும்"- என்று யாழ்ப்பாணம் வந்திருந்த சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர் சட்டத்தரணிகள். அவர்களின் கோரிக்கையைச் செவிமடுத்த சட்டமா அதிபர், அதுதொடர்பில் பரிசீலனை செய்யப்படும் என்று சட்டத்தரணிகளிடம் தெரிவித்தார்.

வடக்குக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சட்டமா அதிபர் பாலித பெர்னான்டோ, நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்குச் சென்றிருந்தார். அங்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் மற்றும் நீதிபதிகள், சட்டத்தரணிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அந்தக் கலந்துரையாடலின்போதே சட்டத்தரணிகள் மேற்கண்டவாறு அவரிடம் கோரிக்கை விடுத்தனர்.

"ஏனைய வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்களை நீதிபதிகள் பிணையில் விடுவிக்க முடியும். ஆனால் பயங்கரவா

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## சட்ட மா அதிபர் திணைக்கள அலுவலகம் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப் 26

சட்டமா அதிபர் திணைக்களத்தின் கிளை அலுவலகம் ஒன்று யாழ்ப்பாணத்தில் விரைவில் அமைக்கப்படவுள்ளது என்று தெரிவித்தார் சட்டமா அதிபர் பாலித பெர்னான்டோ. இந்த அலுவலகம் முற்றுமுழுதாக வடக்கு மாகாணத்துக்குரியதாக இயங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட சட்டமா அதிபர் நேற்று யாழ்.நீதிமன்றுக்குச் சென்று, அங்கு முற்பகல் 9 மணி தொடக்கம் சுமார் 2 மணித்தியாலங்கள் மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள நீதிபதிகள், யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமன்னசிங்கம் மற்றும் மாவட்டத்திலுள்ள சட்டத்தரணிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அதில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சுமதி தர்ம வர்த்தன, உதவி சொலிஸிட்டர் ஜெனரலும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான டபுள்யூ டீ.லிவேரா, சிரேஷ்ட அரச சட்டவாதி மாதவ

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## போக்குவரத்து நியதிச் சட்டம் அடுத்த அமர்வில்

யாழ்ப்பாணம், செப் 26

"வடக்கு மாகாணத்தினுள் நுழையும் கொழும்பு பஸ்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வடமாகாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்வதற்கான பஸ்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். அது உள்ளிட்ட பல விடயங்கள் கொண்டதாக வடமாகாண போக்குவரத்து அதிகார சபை உருவாக்கப்படவுள்ளது. அடுத்த மாகாண சபை அமர்வில் சமர்ப்பிக்கப்படும் போக்குவரத்து நியதிச் சட்டத்தில் அவை உள்ளடங்கும்"- என்று தெரிவித்தார் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

யாழ்.மாவட்டத்திலுள்ள தனியார் பஸ் சங்கங்களது தலைவர்கள், செயலாளர்களை யாழ். நாவலர் வீதியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். அந்தச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் அங்கு தெரிவித்ததாவது,

"யாழ்.மாவட்டத்தில் இருந்து

❖ 22 ஆம் பக்கம் பார்க்க



இலங்கை முப்படைகளும் சீனா, பாகிஸ்தான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், பிரேஸில் ஆகிய ஏழு நாடுகளும் இணைந்து மேற்கொண்ட கூட்டு இராணுவ ஒத்திகைக் கண்காட்சி நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் மட்டக்களப்பு மாவட்டத்தின் புன்னைக்குடாக் கடற் கரையில் இடம்பெற்றது.

## காணி அபகரிப்பு தொடர்பில் விசேட அமர்வு 9ஆம் திகதி

### வடக்கு மாகாண சபையில் முடிவு

யாழ்ப்பாணம், செப். 26

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்புக்கள் தொடர்பில் விவாதிப்பதற்காக, எதிர்வரும் 9 ஆம் திகதி வடக்கு மாகாணசபையில் விசேட அமர்வு நடத்தப்படவுள்ளது. வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் விடுத்த கோரிக்கையை ஏற்றே இந்த அமர்வு நடத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாணசபையில் நேற்று கேள்வி நேரத்தின் போது உரையாற்றிய, ஆளுங் கட்சி மாகாண சபை உறுப்பி

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## கார்த்திகை மாதம் மர நடுகை மாதம்

யாழ்ப்பாணம், செப். 26

தமிழர்களின் புனிதமான மாதமாக கார்த்திகை (நவம்பர்) மாதம் இருப்பதால், வடக்கு மாகாணத்துக்கான மர நடுகை மாதமாகக் கார்த்திகை மாதத்தை வடக்கு மாகாண விவசாய அமைச்சுப் பிரகடனப்படுத்தியுள்ளது. இது தொடர்பிலான பிரேரணை வடக்கு மாகாண சபையில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## புலி பதுங்குவது காரணத்துடன்தான்

### வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 26

வடக்கு மாகாண முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் தொடர்பிலான விவாதத்தின் போது, ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட நியதிச் சட்டத்திலிருந்து சில மாற்றங்களைச் செய்து ஆளுநருக்கு அனுப்புவது தொடர்பில் குறிப்பிடும்போது, புலி பதுங்குவது காரணமாகத்தான் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சபையில் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் தொடர்பில் வடக்கு ஆளுநர் அனுப்பி வைத்துள்ள பதிலை அவைத் தலைவர் வாசித்தார். அதில், முதலமைச்சர் நிதியம்

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் மீது அதிக அழுத்தங்கள்

### நியூயோர்க்கில் ஐ.நாவை கடுமையாகச் சாடினார் மஹிந்த

நியூயோர்க், செப். 26

இலங்கை மீது தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு பதிலாக, உள்ளூர் பொறிமுறைக்கு சர்வதேச சமூகம் ஆதரவு வழங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

"எங்கள் மீது தேவையற்ற அழுத்தங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக, எங்களது உள்ளூர் செயன்முறையான நல்லிணக்கம் - பொருளாதார அபிவிருத்திக்கு சர்வதேச சமூகம் பரஸ்பர உணர்வையும், ஆதரவையும் வழங்கும் என்று எதிர் பார்க்கின்றோம்.

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண ஆளும் கட்சி உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 26

வடக்கு மாகாண அமைச்சரவையில் எடுக்கப்படும் முடிவுகளை சபையில் தெரிவிப்பதில்லை என்று நேற்று மீளவும் ஆளுங்கட்சி உறுப்பினர்களால் நேற்றுக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. கடந்த ஏப்ரல் மாதம் இடம் பெற்ற அமர்விலும் இதே

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு, கிழக்கில் 50,000 வீடுகள் அமைத்துத் தர வேண்டும் இந்தியா

### வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், செப். 26

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு மேலும் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு இந்திய மத்திய அரசு உதவி செய்யவேண்டும் எனக்கோரும் பிரேரணை வடக்கு மாகாண சபையில் நேற்று ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில் 6 பிரேரணைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. இந்திய மத்திய அரசின் உதவியுடன் தற்போது இந்திய வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்குரிய பயனாளிகள் தெரிவில் சில குறைபாடுகள் இருப்பதன் காரணமாக, பாதிக்கப்

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## ஊவா மாகாண பதவியேற்பு 30 ஆம் திகதி

கொழும்பு, செப்.26

ஊவா மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எதிர்வரும் 30ஆம் திகதி பதவிப்பிரமாணம் செய்து கொள்ள உள்ளனர் என்று மாகாண ஆளுநர் நந்த மெதிவ் குறிப்பிடுகின்றார்.

பதவிப்பிரமாண வைபவம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று ஊவா மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். (ற)

# தொடர்கின்றது சித்திரவதை

## இலங்கை நிலைமை குறித்து ஐ.நாவுக்கு அறிக்கையிட்டது சர்வதேச மருத்துவர்கள் சங்கம்

கொழும்பு, செப்.26

இலங்கையில்போர் முடிந்தபின்னரும் தொடர்ச்சியாக சித்திரவதைகள் நடைபெறுகின்றன என்று அறிக்கையிட்டுள்ளது பாதிக்கப்பட்ட மக்களுக்கான மருத்துவர்கள் சங்கம்.

போர் முடிவடைந்த காலகட்டத்தில் நடைபெற்ற 40 கடுமையான சித்திரவதை சம்பவங்கள் தொடர்பில் இந்தச் சங்கம் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் பார்வைக்கு அறிக்கையொன்றை அனுப்பியுள்ளது.

கடந்த நான்கு வருடங்களில் சுமார் 160 சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பில் தமக்கு தகவல்கள் மற்றும் முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அல்லது அவ்வாறு சந்தேகிக்கப்படுவோர் மீது கடுமையான சித்திரவதைகள் கட்டவிழ்த்து விடப்படுவதாகவும் இந்தச் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது. அவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் என்றும், சித்திரவதைகள் தொடர்பில் மருத்துவ ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் இந்த அமைப்பின் அறிக்கை குறிப்பிடுகின்றது. இது தொடர்பில் தாம் தலையிடுவதற்கான அனுமதியை ஐ.நா.பெற்றுத்தர வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (ற)

## வழமைக்கு திரும்பியது ரயில் சேவை

கொழும்பு, செப்.26

ரயில் தடம்புரண்டதால் தடைப்பட்டிருந்த வடக்கு மார்க்க ரயில் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியுள்ளது.

கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில், மஹவ ரயில் நிலையத்துக்கு அருகில் தடம்புரண்டதால் வடக்குக்கான ரயில் சேவை தடைப்பட்டிருந்தது. தற்போது அந்தச் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(ற)

## இந்திய மீனவருக்கு மறியல் நீடிப்பு

வடமராட்சி, செப்.26

பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று தெரிவித்து கடந்த 12ஆம் திகதி கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 26 பேருக்கும் எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலை நீடிக்குமாறு உத்தரவிட்டுள்ளது பருத்தித்துறை நீதிமன்றம்.

கடந்த 12ஆம் திகதி அதி காலை சுமார் 61 அடி நீளமான படகொன்றில் பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்று தெரிவித்து இந்திய மீனவர்கள் 21 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அதேதினத்தில் படகு உடைந்ததால் நீந்திவந்த மேலும் 5 மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களை பருத்தித்துறை நீதிவான் கஜநிதிபாலன் முன்னிலையில் முற்படுத்தியபோது, அவர்களை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இந்தநிலையில் நேற்று குறித்த மீனவர்கள் மீண்டும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அதன்போது அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட படகை தொடர்ந்து கடற்படையினரின் பாதுகாப்பில் வைத்திருக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(ற-109)



ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா பயணமாகியுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோர், கடந்த செவ்வாய்க்கிழமை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் அவரது பாரியார் மிச்செல் ஒபாமா ஆகியோரை சந்தித்தனர். இந்த சந்திப்பின் போது நால்வரும் இணைந்து ஒளிப்படம் எடுத்துக்கொண்டனர்.

## நாடு கடத்தல் தொடர்பில் ரஷ்யாவுடன் உடன்படிக்கை

கொழும்பு, செப்.26

நாடு கடத்தல் விவகாரம் தொடர்பில் இலங்கை அரசுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வதற்கு ரஷ்யா இணக்கம் தெரிவித்துள்ளது.

நாடு கடத்தல் தொடர்பில் லாவோஸ் மற்றும் இலங்கையுடன் உடன்படிக்கை செய்வது தொடர்பான அறிவுறுத்தல்களை ஜனாதிபதி விளாடிமிர் புடின் ரஷ்ய நீதியமைச்சுக்கு வழங்கியுள்ளார் என்று அந்த நாட்டின் உத்தியோக பூர்வ அரச இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின் மூலம் தண்டனைக்குரிய குற்றவாளிகளை இரு நாடுகளுக்கும் இடையில் பரிமாற்றிக் கொள்வது தொடர்பில் திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து இரு நாடுகளுக்கும் இடையில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டதும் விரைவில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

நாடு கடத்தல் தொடர்பில் சீனா, இந்தியா, மொங்கோலியா, வட கொரியா, ஈரான், ஈராக், யெமன், வியட்நாம் மற்றும் ஆசிய நாடுகள் உட்பட சுமார் 30 நாடுகளுடன் ரஷ்யா ஏற்கனவே உடன்படிக்கை செய்துள்ளது. (ற)

## ஐரோப்பா செல்கின்றனர் மஹிந்த மற்றும் ரணில்



கொழும்பு, செப்.26

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 28 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார். அதன்பின்னர் அவர் இரு நாள்கள் கழித்து எதிர்வரும் முதலாம் திகதி உத்தியோக பூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இத்தாலி செல்ல உள்ளார்.

இத்தாலியின் ரோம் நகரில் அவர் இரண்டு நாள்கள் தங்கியிருப்பார் என ஜனாதிபதியின் செயலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் 28 ஆம் திகதி லண்டன் புறப்பட்டுச் செல்ல உள்ளார். அவர் அங்கு ஒருவாரம் தங்கியிருப்பார் என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. பிரிட்டனின் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலரை சந்தித்து பேசும் நோக்கிலேயே ரணில் லண்டன் செல்கின்றார் என்று அவரது அலுவலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் பிரித்தானியாவில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களையும் ரணில் விக்ரமசிங்க சந்திக்க உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.(ற)

# தேசிய செயன்முறைகளாலேயே டெங்கைக் கட்டுப்படுத்த முடியும்

## தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, செப்.26

இலங்கையில்டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு தேசிய செயன்முறைகளால் மாத்திரமே முடியும் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு நோயை கட்டுப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட நுளம்புகளை சுற்றாடலில் பரவவிடும் செயன்முறைகள் தற்போது சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்படுகின்றன. பிரேஸில், ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் இதனை முன்னெடுத்துள்ளன. இவ்வாறான நடைமுறை ஒன்றை இலங்கையில் மேற்கொள்ள முடியுமா? என்று கேட்கப்பட்டபோதே இவ்வாறு பதிலளிக்கப்பட்டுள்ளது.

"இந்த நோயை ஒழிப்பதில் உள்நாட்டு தேசிய செயன்முறையின் மீது மாத்திரமே நம்பிக்கை கொண்டுள்ளோம். ஏற்கனவே பீ.ரீ.ஐ. மூலம் டெங்கு நுளம்புகளை கட்டுப்படுத்த முயற்சித்த போதும், அது எதிர்பார்த்த பலனை கொடுக்கவில்லை"- என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (ற)



நவராத்திரி விழா நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று நடைபெற்றது. காலையில் நடந்த இந்த விழாவில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்களின் நடன நிகழ்வும் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை கழகம், கண்டி சத்தியசாயி கலாலயம் மாணவர்களினதும் நடன நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்த விழாவில் நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் சந்திமவீரக்கொடி, அமைச்சர்களான தினேஸ்குணவர்த்தன, வாசுதேவநாணயக்கார, திஸ்ஸ விதாரண, நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, அஸ்வர், ரவிகருணாநாயக்க, விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் மற்றும் நாடாளுமன்ற அலுவலர்கள் இந்து கலாசார திணைக்கள அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 10 வெள்ளி (26.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 304

# ஐ.நாவின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குக

### வங்கியிலிருந்து எடுத்த பணம் வீட்டு வாசலில் பறிபோனது

யாழ்ப்பாணம், செப். 26

வங்கியிலிருந்து பணத்தை எடுத்துச் சென்ற பெண் வீட்டு வாசலில் வைத்து அதனைப் பறிகொடுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் கிளிநொச்சி உதயநகர் மேற்

(19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையிடம் ஆணையாளர் அலுவலகம் கோரிக்கை

கொழும்பு, செப்ரெம்பர் 26

**இலங்கையின் நீண்ட கால நலன்களைக் கருத்தில்கொண்டு சர்வதேச விசாரணைக்குழுவுடனும், விசேட அறிக்கையாளர்களுடனும் ஒத்துழைக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.**

**ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் நேற்று இலங்கை குறித்து விடுத்துள்ள வாய் மூல அறிக்கையிலேயே இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாய்மூல அறிக்கையை புதிய மனித உரிமை ஆணையாளருக்குப் பதில் பிரதி ஆணையாளர் பிலேவியா பன்சியர் சமர்ப்பித்து உரையாற்றினார்.**

ஐ.நாவின் புதிய மனித உரிமை ஆணையாளரை இலங்கை வெளிவிவகார அமைச்சர் சந்தித்ததாகவும் விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்காவிட்டாலும் ஐ.நா. அலுவலகத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் என ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதது கவலை அளிக்கும் விடயம் எனத் தெரிவித்த அவர், இலங்கை அரசை ஆணையாளர் அலுவலகத்துடனான தொடர்பாடல் வழிமுறைகளைத் திறந்து வைக்குமாறு கோரினார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆணையை இலங்கை

(19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீனவர் ஏழு பேர் கைது

கொழும்பு,செப்.26

இந்திய ஆந்திராக் கடல் பகுதியில் எல்லைத்தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டதாக 7 இலங்கை மீனவர்களையும் அவர்களின் படகையும் இந்தியக் கடலோரக் காவல் படையினர் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

நீர்கொழும்பு பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் மீன்பிடிக்கச் சென்ற இலங்கை மீனவர்கள் ஆந்திராவுக்கு அண்மித்த கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது எல்லைப் பாதுகாப்பில் இருந்த கடலோரக் காவல் படையினர் மீனவர்களையும் அவர்களது

(19ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் என்ற தேசிய அடையாளத்தால் தொடர்ந்து இலக்கு வைக்கப்படுகிறோம்

### இதனை ஐ.நா அறிக்கை வெளிப்படுத்தவில்லை என ஜெனிவாவில் கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு




ஜெனிவா, செப் 26

தமிழர்கள், அவர்களது தமிழர்கள் என்கிற தேசிய அடையாளத்தினாலேயே தொடர்ந்தும் இலக்கு வைக்கப்படுகிறார்கள் என்பதை மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மொழிமூல அறிக்கை குறிப்பிடத் தவறியமையை நாங்கள் கவலையுடன் கவனத்தில் கொள்கிறோம் என ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் தமிழ்த்தேசியமக்கள்முன்னணி சார்பாகக் கலந்து கொண்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(19ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. விசாரணையை ஏற்றுக்கொள்ளாது அரசு

### இலங்கை பிரதிநிதி திட்டவட்டம்

கொழும்பு, செப்.26

இலங்கைக்குப் பிழையான நடைமுறையொன்றை ஆதரிக்கும் எண்ணம் இல்லை. அதனால், அது ஐ.நா விசாரணையை ஏற்றுக்கொள்ளாது என அரசு தெரிவித்துள்ளது.

ஜெனிவாவுக்கான இலங்கையின் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஐ.நா. விசாரணையை ஏற்கனவே நிராகரித்துள்ளது. அந்த நிலைப்பாடு தொடர்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (து-சி)

## மின்சார சபை ஊழியர் மாநாடு இன்று யாழில்

### மனித வலுவை நடைமுறைப்படுத்தக் கோரி

யாழ்ப்பாணம்.செப்.26

இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண ஊழியர்களை ஒன்றிணைத்து மனித வலுவை நடைமுறைப்படுத்தக் கோரிய மாநாடு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இது குறித்து தொழிற்சங்கத்தின் தலைவர் ஜெயதிலக தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்களையும் உள்ளடக்கி 350 இற்கும் மேற்பட்ட மனித வலுத் தொழிலாளர்கள் நிரந்தர நியமனம் பெறாமல் தற்போது தொழில் புரிந்து வருகின்றனர். இவர்களுக்கு நிரந்த நியமனத்தை வழங்கக் கோரி மாவட்ட ரீதியில் மாநாட்டை நடத்தி வரும் நிலையில் யாழ். மாவட்டத்தில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முக்கியமாக அடிமைச் சேவையை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தியும் மனித வலுவை நடைமுறைப்படுத்தக் கோரியும் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் பிர

(19ஆம் பக்கம் பார்க்க)

## 13 ஐ நடைமுறைப்படுத்த இந்தியா முழு ஆதரவு

### ஐ.நா. சபையில் அந்நாட்டு தூதுக்குழு நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, செப். 26

இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை தாம் ஆதரிப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இந்தியத் தூதுக்குழு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் இலங்கை மீது முன்னெடுக்கப்படும் போர்க்குற்ற விசாரணைகள் குறித்து சில கரிசனைகளை வெளிப்படுத்திய இந்தியத் தூதுக்குழு இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு கிடைக்கவேண்டும் என தாம் விரும்புவ்தாகக் குறிப்பிட்டுள்ளது. (து-சி)

## மஹிந்தவின் உரையை எதிர்த்து கறுப்புச்சட்டை அணிந்த தி.மு.க.

கொழும்பு, செப். 26

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பேசியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து. தி.மு.கவினர் நேற்று வீடுகளில் கறுப்புக்கொடி ஏற்றியுள்ளனர்.

சென்னையில் தி.மு.க தலைவர் கருணாநிதியின் கோபாலபுரம் வீட்டிலும் கறுப்புக்கொடி ஏற்றப்பட்டுள்ளதுடன் கருணாநிதி உள்ளிட்ட தி.மு.கவினர் அனைவரும் கறுப்புச் சட்டை அணிந்து தங்களின் எதிர்ப்புகளைத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் கருணாநிதி அறிக்கை மூலம் கறுப்பு தினம் கொண்டாட அழைப்பு விடுத்திருந்தார். இதனையடுத்து நேற்று தி.மு.க. தலைவரின் கோபாலபுரம் வீடு மற்றும் அனைத்து தி.மு.கவினர் வீடுகளிலும் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது.

தி.மு.க. தலைவர் கருணாநிதியும், மு.க.ஸ்டாலின் மற்றும் தொண்டர்கள் அனைவரும் கறுப்புச்சட்டை அணிந்து தங்களின் எதிர்ப்பைக் காட்டினர்.

கருணாநிதியின் முகநூல் ('பேஸ்புக்') முகப்புப் பக்கமும் நேற்றுக் கறுப்பாகக் காட்சியளித்தது. அந்த அளவுக்கு தி.மு. கவினர் நேற்று தங்களின் எதிர்ப்பைக் காட்டினர். (து-சி)

## மாகாண போக்குவரத்து ஒன்றியம் உருவாக்கப்படவுள்ளது விரைவில்

யாழ்ப்பாணம், செப் 26

வடக்கு மாகாணத்தில் தனியார் பஸ்களுக்கென விரைவில் போக்குவரத்து ஒன்றியம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

போக்குவரத்து தொடர்பான சகல பிரச்சினைகள், குழப்பங்கள் என்பன இந்த ஒன்றியம் மூலமாகக் கையாளப்படும். அதற்கு முன்னதாக யாழ்.மாவட்ட பஸ் உரிமையாளர்களுக்கான இணையம் அடுத்த வாரம் உருவாக்கப்படவுள்ளது என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள

(19ஆம் பக்கம் பார்க்க)

## பனை அபிவிருத்திச் சபையின் கைப்பணிக் கிராமங்கள் கிழக்கில்

யாழ்ப்பாணம், செப்.26

பனை அபிவிருத்தி சபையால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலம்பாவெளி, அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி ஆகிய கிராமங்கள் பனம் கைப்பணி மாதிரிக் கிராமங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த மாதிரிக் கிராமங்களைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 275 பெண்களுக்குப் பனம் கைப்பணி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

மயிலம்பாவெளி கிராமத்தில் 175 பேருக்கும், நாவிதன்வெளி கிராமத்தில் 100 பேருக்கும் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பயிற்சிகள் தொடர்ந்து ஆறு மாத காலத்துக்கு வழங்கப்படும்.

இந்தப் பயிற்சிநெறியை வழங்குவதற்குச் சபையின் போதனாசிரியர்கள், விரிவுரையாளர்கள் போன்றோர் மட்டக்களப்புக்குச் சென்று திரும்பியுள்ளனர்.

பனம் ஈக்கிலான சுளகு

(19ஆம் பக்கம் பார்க்க)

## வலி.கிழக்கு பிரதேச சபையின் உட்பூசலுக்குத் தீர்வு வேண்டும்

### மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

அச்சுவேலி, செப்.26

வலி.கிழக்குப் பிரதேச சபையின் உட்கட்சிப் பூசல் மற்றும் இழுபறி நிலை தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சரின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு வந்து உடனடியாகப் பொருத்தமான தீர்வு காணுமாறு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கோரிக்கை விடுத்துள்ளார்.

முதலமைச்சருக்கும் மாகாண சபை உறுப்பினருக்கும் இடையேயான சந்திப்பு புதன்கிழமை நடைபெற்றது.

இது தொடர்பாக மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி கருத்து தெரிவிக்கையில்;

வலி.கிழக்குப் பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கும் தவிசாளருக்கும் இடையே மீண்டும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 19 ஆம் திகதி

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஞானசாரதேரருக்கு பெண்ணுடன் தொடர்பு

## குற்றஞ்சாட்டுகின்றார் அமைச்சர் மேர்வின் சில்வா

கொழும்பு, செப்.26
பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் பிரான்ஸில் வாழும் பெண்ணொருவருடன் தொடர்பு வைத்துள்ளார் என்று தெரிவித்துள்ளார் பொது உறவுகள் மற்றும் பொது விவகார அமைச்சர் மேர்வின் சில்வா.
பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "அந்த பெண்ணுக்காக ஞானசார தேரர் ராஜகிரிய பிரதேசத்தில் வீடொன்றை கொள்வனவு செய்துள்ளார். ஞானசார தேரர் போன்றவர்கள் ஜனாதிபதி அல்லது நாட்டின் மரியாதைக்குரிய பதவிகளுக்கு மக்கள் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. அவரை விட சிறந்த கல்வி அறிவையும் மரியாதைகளையும் கொண்ட பிக்குமார் நாட்டில் உள்ளனர். ஞானம் என்ற பெயர் ஞானமுள்ள அறிவை குறிக்கின்ற போதிலும் அவ்வாறான ஞானம் ஞானசார தேரரிடம் இல்லை. ஞானசார தேரர், அவருடைய பெயரை அஞ்ஞான சார என்று மாற்றிக்கொள்ள வேண்டும். இவர்களை போன்ற கொள்கைகளை கொண்டுள்ளவர்களை அனைத்து மக்களும் நிராகரித்துள்ளனர்.
ஞானசார தேரர் தான் அணிந்துள்ள காவியை தவறாக பயன்படுத்துவது இங்குள்ள முக்கியமான பிரச்சினை. போர் நடைபெற்ற காலத்தில் ஞானசார தேரர் எங்கிருந்தார். அப்போது அவரை காணமுடியாதிருந்தது"- என்று தெரிவித்துள்ளார்.(ற)

## விடத்தற்பளையில் ஞாயிறன்று மருத்துவ முகாம்

தென்மராட்சி, செப்.26
மிருசுவில், விடத்தற்பளை கிராம மக்களுக்கான இலவச மருத்துவமுகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி தொடக்கம் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.
மருத்துவ பரிசோதனை முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்தம்,கண் பரிசோதனை உட்பட பல்வேறு நோய்களுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்படும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட வுள்ளன. அத்துடன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை பொது மருத்துவ நிபுணரினால் நீரிழிவு தொடர்பான கருத்துரைகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## அஞ்சலி நிகழ்வு

தென்மராட்சி, செப்.26
அண்மையில் லண்டனில் காலமான சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் ஆசிரியர் சங்க லண்டன் கிளையின் முன்னாள் தலைவருமான பொன்னம்பலம் விஜயராஜனுக்கு கல்லூரிச் சமூகம் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.
கல்லூரி அதிபர் அ.கயிலாய பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கல்லூரி சமூகத்தினர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தவுள்ள தாக கல்லூரி பழைய மாண வர் சங்க செயலாளர் யோ. ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.(வ-9)

## புனித ஆரோக்கிய அன்னை ஆலய திருவிழா ஆரம்பம்

கொழும்புத்துறை, செப்.26
யாழ்.போதனா மருத்துவ மனையில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.
ஆயத்த வழிபாடுகள் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.
நாளை மாலை 4.30 மணிக்கு சிறப்பு வழிபாடுகளும், நற்கருணை விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 7.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும்.
திருவிழாவுக்கு வரும் அடியார்கள் யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி வாயில் வழியாக வருகை தருமாறு யாழ். போதனா மருத்துவமனையின் ஆன்மிக அருட் தந்தை பிலிப் அடிகள் அறிவித்துள்ளார். (வ-135)

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ். நகருக்குச் சமீபமாக சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 3895395 (52431) (45.3.6)

**நாஹா மருத்துவ நிலையம்**
* எலும்புசார் வாதம், அதிகமூச்சு கஷ்டமான ஆஸ்மா,புண்கள், அல்சர் குணப்படல்.
* குழந்தையின்மைக்கான தெய்வீக மூலிகை மருந்தியல். (52431) (45.3.6)
வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வைரவர் கோயிலடி,
(ஜெகபதி வீடு), மானிப்பாய். 077 321 2740

## 'சோ.ப.75' மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.26
கவிஞர் சோ.பத்மநாதனின் பவள விழா தொடர்பாக 'சோ.ப.75' என்ற மலர் வெளியீடு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.
வாழ்த்துரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், கலாநிதி அருட்திரு ஜே.ஈ. ஜெயசீலன் ஆகியோர் நிகழ்த்துவர்.
மலர் வெளியீட்டுரையை திருமதி கோகிலா மகேந்தி ரன் வழங்குவார். மலரின் முதற்பிரதியை நோர்த் சென்ரர் ஹொஸ்பிற்றல் நிர்வாகி பெற்றுக் கொள்வார். ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வி.பரந்தாமன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோர் வழங்கு வர். (வ)

## தொழிற் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் அலுமினியம், கட்டுமானம், வீட்டு மின்னிணைப்பு மற்றும் நீர்க்குழாய் பொருத்துதல், குளிர்சாதன உபகரணம் திருத்துதல் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
இந்தப் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்பவர்கள் தேசிய தொழில் தராதரப் பத்திரச் (NVQ) சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும்.
மேற்படி பயிற்சி நெறிகளில் இணைய விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது பெயர், முகவரி உள்ளிட்ட சுய விவரப் படிவத்தை எதிர்வரும் 15.10.2014 இற்கு முன்னர் கரவெட்டி பிரதேசசெயலகத்தின் திறன் அபிவிருத்தி உதவியாளரிடம் சமர்ப்பிக்கு மாறு கேட்டுக் கொள் ளப்படுவதுடன் ஏனைய தொழிற் கற்கை நெறிகள் பயில்வது தொடர்பில் அதற்கான ஆலோசனைகளையும் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரிசளிப்பு விழா

நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் கல்லூரி அதிபர் செ.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் கல்வியியல் பிரிவின் தலைவருமான கலாநிதி ரி.கலாமணி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.
மாணவ, மாணவிகளுக்கான பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி கூவின் ஜெயசீலிகலாமணி வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (வ)

**ஓராண்டு நினைவுகளுடன்......**



அமரர்
சின்னத்தம்பி ஆனந்தவேல் (வெள்ளை)

தோற்றம் 20.08.1945
மறைவு 07.10.2013

ஆண்டொன்று ஆனாலும் ஆறமுடியவில்லை எம்மால்
இப்புவியில் ஐயா உம்மை நாம் இழந்த துயரை
ஈடுசெய்ய முடியாமல் தவிக்கின்றோம்
இன்றுவரை இனி யாரும் இல்லை எமக்கு - இப் புவியில்
எங்களுக்கு இழந்த துயரை நீக்க......
குடும்பத்தின் குலவிளக்காய்
பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் சிகரமாய்
வாழ்ந்த எம் குலவிளக்கே!
என்றும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டகலாது.

அன்னாரின் ஓராண்டு நினைவுநாள் நாளை (27.09.2014) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

7ஆம் கட்டையடி,
தொண்டமானாறு.
077 353 8086

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
(49784)(5.6.3)

**மரண அறிவித்தல்**

திருமதி செல்லம்மா கனகரட்ணம்



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி மற்றும் நுணாவில் மேற்கை வதிவிடங்களாகவும், சாவகச்சேரி, டச்சுவீதி, முதலாம் ஒழுங்கையை தற்காலிக வசிப்பிடமாவும் கொண்ட திருமதி செல்லம்மா கனகரட்ணம் 24.09.2014 புதன்கிழமை இறைபதமடைந்தார்.
அன்னார் நாகலிங்கம் தம்பதியரின் அன்பு மகளும், கணேசலிங்கம், பரமலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கனகரட்ணத்தின் (இளைப்பாறிய யாழ்.நூதனசாலை உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், வைகுந்தவாசன் (டென்மார்க்), விஜயவாசன் (பொது நூலகம் சாவகச்சேரி, விஜேந்திரா ஸ்ரூடியோ உரிமையாளர்), விஜயகுமாரி, ஜெயக்குமாரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அகிலாண்டேஸ்வரி (டென்மார்க்), காலஞ்சென்ற இந்திராணி, குபேந்திரராஜா, பாலரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியும், யனுசா (டென்மார்க்), யசோன் (டென்மார்க்) விஜயரூபன் (லண்டன்), சுயந்தினி (லண்டன்), விஜேந்திரன், விஜயரூபி (கனடா), பிரகலாதன் (கனடா), விஜயராஜ் விஜயதாஸ், நிறோஷனா (கொழும்பு), பிறேமகுமார் (கொழும்பு), காமிலா சுரேந்திரன் (கனடா), யநோயன், பிரசாந்தி, டிலக்ஷன், புவிகரன், பானுலக்ஷன் ஆகியோரின் அன்பான பேர்த்தியும், அகாணா, பிரியனா, அஸ்மிதா, அபிநயா, ஆதீஸ், திவானுஷன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2014) வெள்ளிக்கிழமை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் ஒழுங்கை,
டச்சு வீதி,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
வைகுந்தவாசன் (டென்மார்க்) - 004531853391,
விஜயவாசன் (பொது நூலகம், சாவகச்சேரி, விஜேந்திரா ஸ்ரூடியோ உரிமையாளர்) - 0776136575
விஜயகுமாரி - 077 641 0999
ஜெயக்குமாரி - 077 600 5311
(913962) (15.3.6)

**மரண அறிவித்தல்**

நடேசு தமிழ்மோகன்



அல்வாய் தெற்கு, தனத்தியவத்தையைப் பிறப்பிடமாகவும், அல்வாய் மேற்கு, மடத்துக் கடவையை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு தமிழ்மோகன் கடந்த 23.09.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசு-அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும்,காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-மரகதம் தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வபதியின் அன்புக் கணவரும், மோகன்ராஜ்(ஆசிரியர்,யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம்), செந்தூரன், யோகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,ஜெயநிதி(கனடா), ஜெயமலர், காலஞ்சென்றவர்களான சதாசிவம்,யோகேஸ்வரி, வைகுந்தசாமி, ஸ்ரீமதி ஆகியோரின் சகோதரரும், அன்னலஷ்மி, எதிர்வீரசிங்கம், வரதராணி, கிருஷ்ணராஜன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்- வடமாகாணம்), காலஞ்சென்ற அருமைராஜன்(பொறியியலாளர்), காலஞ்சென்ற சிவபாத சுந்தரம், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் லஷ்மிகாந்தன், வடிவம்மா, கலைமணி (சின்னக்கிளி-கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சத்தியநாதன் (ஓய்வுநிலை கணக்குப்பதிவாளர்- பனை அபிவிருத்திச் சபை),தெய்வேந்திரம் ஆகியோரின் சகலனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.09.2014 புதன்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.
இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்துக்கடவை,
அல்வாய் மேற்கு, அல்வாய்.
077 926 5065

தகவல்:
குடும்பத்தினர்.

## செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயத்தில் கடமைபுரியும் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலகத்தில் இடம்பெறும்.
செயலமர்வில் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், கோட்டக் கல்வி அலுவலர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

## சமய சந்நிதிகளில்

இணுவில் திருப்பதி பத்மாவதி தாயார் கோதை நாச்சியார் உடனுறை திருவேங்கடேஸ்வரர் ஆலய பிரமோற்சவ கால அலங்காரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது. எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (வ)

★ ★ ★

மடத்தார் பதியில் கோயில் கொண்டமைந்த சற்குரு ஸ்ரீ சீரடி சாயிநாதரின் 6 ஆவது வருட திவ்ய வசந்த திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது. எதிர்வரும் 7 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் மாலை 4.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (வ)

## புனித செபமாலை அன்னை ஆலயத் திருவிழா இன்று

கொழும்புத்துறை, செப்.26
கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தினமும் காலை 6 மணிக்கு நற்கருணை ஆராதனை இடம்பெறும்.
நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பேரணி நடைபெறும். கொழும்புத்துறை வீதியிலுள்ள திருவுளப் பணியாளர் சிறிய குருமடத்தில் இருந்து ஆரம்பமாகும் நற்கருணைப் பேரணி வீதிகள் வழியாகச் சென்று மூன்று இடங்களில் தரித்து வழிபாடுகள் இடம்பெற்று ஆலயத்தை வந்தடையும்
இறுதி 3 தினங்களான எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை மட்டக்களப்பில் இருந்து வருகை தரும் அருட் தந்தை போல் றொபின்சன் அடிகளார் தலைமையில் வழிபாடுகள் இடம்பெறும்.
திருவிழாத் திருப்பலி 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெற்று தேர்ப் பவனியும் திருச்சொரூப ஆசீரும் நடைபெறும். (வ-135)

## கண் பரிசோதனை முகாம் முதியோருக்கு உடுவிலில்

வலி.வடக்கு, செப். 26
உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் கொழும்பில் இருந்து வருகை தரவுள்ள அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றும் இணைந்து முதியவர்களுக் கான இலவச கண் பரிசோதனை முகாமொன்றை நாளை சனிக்கிழமை சுன்னாகம் மயிலணி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடத்தவுள்ளன.
குறிப்பாக 150 நோயாளர்களுக்கு மட்டும் இந்த சிகிசசை முகாமில் சிகிச்சை அளிக்கப்படவுள்ளதால் கண் குறைபாடு உடையவர்களை உடுவில் சுகாதார வைத்தியதிகாரி பணிமனையிலோ அன்றேல் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் மருத்துவ மாதுகளிடமோ தமது பெயர்களைப் பதிவு செய்யும் படி சுகாதார வைத்திய அதிகாரியால் வேண்டப் பட்டுள்ளனர்.
குறிப்பாக மூக்குக் கண்ணாடிகள் வழங்குதல் மற்றும் கண் வில்லைகள் வழங்குதல் உட்பட மற்றும் சத்திரசிகிச்சை தொடர்பாகவும் பரிசோதனை முகாமில் விளக்கங்கள் இடம்பெறவுள்ளன. (வ-86)

## நடமாடும் ஆயுள்வேத வைத்திய சேவை

வவுனியா, செப்.26
இலங்கை ஆயுள்வேத திணைக்களத்தின் அனுசரணையுடன் கலா ஆயுள்வேத வைத்திய பீடம் நடத்தும் நடமாடும் ஆயுள்வேத வைத்திய சேவை எதிர்வரும ஒக்ரோபர் மாதம் 4ஆம்,5ஆம் திகதிகளில் தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.
குறித்த வைத்தியசேவையில் ஆயுள்வேத வைத்திய நிபுணர்களினால் நீண்ட நாள்களாக பீடித்துள்ள பல நோய்களுக்கு சிகிச்சை வழங் கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (வ-421)

## பொதுக்கூட்டம்

அச்சுவேலி, செப்.26
வலி.கிழக்கு வட பகுதி (அச்சுவேலி) பல.நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
சங்கத்தின் தலைவர் இ.சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (வ-11)

## ஊட்டமுள்ள இன்சுவை கருத்தமர்வு சனியன்று

யாழ்ப்பாணம், செப். 26
பாடசாலை மாணவர்களுக்குப் போஷாக்கான உணவை வழங்கவேண்டும் என்ற நோக்கில் 'ஊட்டமுள்ள இன்சுவை' என்ற தொனிப்பொருளில் போஷாக்கு மேம்பாட்டு முக்கியத்துவம், போஷாக்கு உணவுகளின் செய்முறை தொடர்பான கருத்தமர்வு ஊர்காவற்றுறையில் நாளை சனிக் கிழமை இடம்பெறவுள்ளது.
ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் திருமதி என். அனந்தராஜா தலைமையில் ஊர்காவற்றுறை பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நாளை காலை 8.30 தொடக்கம் மாலை 4 மணிவரை இந்தக் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது.
இதில் ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 17 பாடசாலைகளிலிருந்து தலா 2 ஆசிரியர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு 34 பேரும் மாதர் சங்க உறுப்பினர்களும் என 50 பேருக்கு இந்தக் கருத்தமர்வு இடம் பெறவுள்ளது. (வ-4)

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியர்தின விழா

யாழ்ப்பாணம், செப் 26
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆசிரிய தினவிழா இந்த முறை பண்டாரவளையில் இடம்பெறவுள்ளது என்று சங்கம் தெரிவித்துள்ளது.
கடந்த முறைதிருகோணமலையில் இடம்பெற்ற இந்த விழா இந்த முறை சங்கத் தலைவர் ரி.சகாதேவராஜா தலைமையில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பண்டாரவளையில் இடம்பெறவுள்ளது. வடக்கு,கிழக்கு மாகாணங்களிலிருந்து பண்டாரவளைக்கு விசேட பஸ் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்முறை புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புகளுக்குப் பொறுப்பாக இருந்து மாணவர்களைச் சித்திபெற வைத்த ஆசிரியர்கள் விசேடமாகக் கௌரவிக்கப்படவுள்ளனர்.
அனைத்து ஆசிரியர்களையும்இதில்கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ-4)

## கலந்துரையாடல்

"ஸ்கொட்லாந்தின் அண்மைய பொதுசன வாக்கெடுப்பு தொடர்பான மீளாய்வு கலந்துரையாடல்" நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது. ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். முகாமையாளர் சம்மேளனம் கேட்டுக் கொண்டுள்ளது. (வ-ரி)

இணுவில் திருப்பதி
அருள்மிகு பத்மாவதித் தாயார்
கோதைநாச்சியார் உடனுறை
திருவேங்கடேஸ்வரர் ஆலய
பிரம்மோற்சவ கால
அலங்கார உற்சவம்
இன்று (26.09.2014) வெள்ளி

அடியார்களே!
ஈழமணித் திருநாட்டின் வடபால் சைவமும், தமிழும் செழித்து வளர்கின்ற இவ்விணுவையம்பதியிலே, ஆன்ம ஈடேற்றத்திற்கு ஆன்மீகமே சிறந்த வழி என்று ஹரிஹர பேதமின்றி வழிபாடாற்றிவரும் அடியார்கள் உள்ளத்தில் இருந்து தோன்றிய பத்மாவதித் தாயார், கோதை நாச்சியார் உடனுறை ஸ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமானின் எதிர்காலங்களில் நடைபெறப்போகும் பிரம்மோற்சவ காலங்களை இவ்வருடத்தில் அலங்கார உற்சவமாக ஜய வருடம் புரட்டாதி மாதம் 10ஆம் நாள் இன்று (26.09.2014) வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி, புரட்டாதி மாதம் 18ஆம் நாள் (04.10.2014) சனிக்கிழமை தீர்த்தவாரியும் புரட்டாதி மாதம் 19ஆம் நாள் (05.10.2014) திருக்கல்யாண வைபவத்துடன் நிறைவுற எம்பெருமான் திருவருள் துணைகொண்டு கைகூடப் பெற்றுள்ளது. எனவே அடியார்கள் யாவரும் கீழே தரப்பட்டுள்ள கிரியா காலங்களில் வந்து தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.
விசேட நிகழ்வாக மாலை 7.30 மணிக்கு சுவாமி திருவூஞ்சலில் ஆரோகணித்து தீபாராதனைகள் நடைபெற்று, வேத ஸ்தோத்திர ஆசீர்வாத சாற்று முறை நடைபெறும்.
இரவு 8.00 மணிமுதல் ஈழத்தின் தலைசிறந்த கலைஞர்களினால் இன்னிசை கலைநிகழ்வு ஆராதனை நடைபெற்று இரவு 9.00 மணிக்கு சமர்ப்பணமாகும்.

தினசரி நிகழ்வு
காலை 6.00 மணிமுதல் விஷேட அபிஷேகம்.
காலை 8.00 மணிக்கு விஷேட பூசை.
மாலை 6.00 மணிக்கு விஷேட பூசை.
மாலை 6.15 மணிமுதல் 7.15 மணிவரை ஸ்ரீகோவிந்த அகண்டநாம பஜனை.
மாலை 7.30 மணிமுதல் பகவான் திருவூஞ்சலில் ஆரோகணித்திருக்க விஷேட சோடசோப உபசார பூசை.
வேத ஸ்தோத்திர ஆசீர்வாத சாற்று முறை நடைபெறும்.
இரவு 8.00 மணிமுதல் 9.00 மணிவரை பகவானுக்கு யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற இசைக்கலைஞர்களினால் தினமும் இன்னிசைச் சமர்ப்பணம் நடைபெறும்.
பிரதம குருக்கள் : சோ.பிரஷன்ன குருக்கள் (வியாகரண சிரோமணி M.A)
ஆலய நித்திய அர்ச்சகர் : த.கோபிகிருஷ்ண சர்மா, ர.சபரீச சர்மா
அடியார்கள் தங்களால் இயன்ற பூ பால், தயிர், பழங்கள் முதலியவற்றை கிரியாகாலங்களில் கொடுத்து உதவி வேங்கடப்பெருமானின் அருளுக்கு பாத்திரமாகும் வண்ணம் வேண்டுகின்றோம்.
ஆதீனகர்த்தா www.inuvilthirupathi.org உபயகாரர்கள்
(52428)(7.6.3)

## சேவை நலன் பாராட்டு விழா

சாவகச்சேரி நகர் கிராம அலுவலராகக் கடமையாற்றி இளைப்பாறிய வி.சிவசரணநாதனுக்கு சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும், புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தினரும் இணைந்து நடத்தும் சேவை நலன் பாராட்டுவிழா நாளை சனிக் கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி ஐங்கரன் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆசியுரையை கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், தென்னிந்திய திருச்சபை சாவகச்சேரி தேவாலய போதகர் வண.பிதா ஏ.கே.செல்வநாயகம் அடிகள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.
கடமையாற்றிய காலத்தில் குறித்த கிராம அலுவலர் மேற்கொண்ட சேவைகள் தொடர்பாக பலர் வாழ்த்துரைகளையும் பாராட்டுக்களையும் நிகழ்த்தவுள்ளனர். (வ-9)

**கார் விற்பனைக்கு**
N.P.J.O - XXXX இலக்கம் கொண்ட நன்கு பராமரிக்கப்பட்ட நிலையில் A.Cயுடன் கூடிய மாருதிக் கார் விற்பனைக்குண்டு.
(52156) (12.3.6) தொடர்பு: 077 251 2039

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**
2 பொமேரியன் குட்டிகளும், 2 அல்சேசன் குட்டிகளும் விற்பனைக்குண்டு. (52425)(7.6.3)
தொடர்புகளுக்கு : 077 234 9930

**தவறிவிட்டது**
P.Amalan எனும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள Dialog Tuch எரிபொருள் மீள்நிரப்பு அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (52426)(7.6.3)
தொடர்புகளுக்கு : 077 237 5098

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
WP.ML 6xxx இலக்கம் உடைய 106 cc. silver நிறமுடைய yamaha, Libero இந்தியன் தயாரிப்பு நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
மழை நீர் சேகரிப்பு மையம்,
இல.09,7 ஆம் ஒழுங்கை,வைரவர் கோவில் வீதி,
வைரவபுளியங்குளம், வவுனியா.
தொடர்பு: 071 494 0051 (52157) (45.3.6)

## வாணி விழா

யாழ்ப்பாணம், செப்.26
கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் வாணி விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். இந்திய துணைத் தூதரக பதில் பிரதித் தூதர் சு.தட்சணாமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக வடமாகாண பிராந்திய மின் பொறியியலாளர் எஸ்.ஞானகணேசனும் கலந்து கொள்வர். (வ)



# வடக்கு மாகாண சபை அமர்வில் நேற்று சிங்களத்தில் கடும் வாதப்பிரதிவாதம்

## மொழிக்குச் சமவுரிமை என்று முதலமைச்சர் பாராட்டு

வடக்கிலும் எபோலா வைரஸ் போன்று எங்கள் நிலங்கள் தினம் தினம் விழுங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வடக்கு மாகாண சபை என்ன தூங்கிக் கொண்டிருக்கின்றதா? என்று ஆவேசமாகப் பேசிய சிவாஜிலிங்கம், அபிவிருத்தி என்ற எலும்புத் துண்டுக்காக அடிபட வேண்டாம் என்றும் மாகாண சபைக்குத் தெரிவித் தார்.

அத்துடன், வடக்கு மாகாண சபையில் சிங்கள மொழியில் நேற்றுக் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. உறுப்பினர்கள் சிங்கள மொழியில் தரக் குறைவான வார்த்தைகளைப் பிரயோ கித்தமையினால், சபையில் ஒலி வாங்கி நிறுத்தப்பட்டது. அதனை மீறியும் உறுப்பினர்கள் தங்கள் வாதத்தைத் தொடர்ந்து சிங்கள மொழியில் நடத்தினர்.

வடக்கு மாகாண சபையின் 16 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது. நேற்றைய அமர்வில் எட்டு உறுப்பினர்கள் கலந்து கொள்ள வில்லை.

**ஆளுநர் அங்கீகாரம்**

அவைத் தலைவரின் அறிவித் தலுன் கூட்டம் ஆரம்பமாகியது. நிதி நியதிச் சட்டம், முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம் என்பன வற்றுக்கு ஆளுநர் அங்கீகாரம் வழங்கியதை அவைத் தலைவர் தெரிவித்தார். முதலமைச்சர் வெளிநாடு செல்வதாக இருந்தால் ஆளுநரின் - அரசின் அனுமதி பெற்றுச் செல்ல வேண்டும் என்ற சர்ச்சை முடிவுக்கு வந்த நிலையில், ஆளுநர் நேற்றுப் புதுக் கட்டுப்பாடுகளை அவைக்கு அறிவித்துள்ளார்.

உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதானால் தனக்குத் தெரியப்படுத்தியே செல்ல முடியும் என்றும், முதலமைச் சர் செல்வதானால் ஜனாதிபதியின் அனுமதியைப் பெற்றுச் செல்ல வேண்டும் என்று ஆளுநர் பணித்துள்ளதாகப் புதுக் குண்டை தூக்கிப் போட்டார் அவைத் தலைவர்.

இதன் பின்னர் உறுப்பினர்களின் கேள்விகள் தொடங்கின. கடந்த கூட்டத்தில் முன் வைத்த கேள்விகளின் தொடர்ச்சியை ஆளுங்கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தொடர்ந் தார்.

**முடிவுகளை தெரியப்படுத்துக**

கொழும்பு அரசு கூட அமைச்சரவை முடிவுகளை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துகின்றது. ஆனால் எங்கள் அமைச்சரவையில் எடுக்கப்படும் முடிவுகள் இந்தச் சபைக்குத் தெரியப்படுத்தப்படுவதில்லை என்று ஆரம்பத் திலேயே கலகத்தைத் தொடக்கினார் லிங்கநாதன். இதற்கு அவைத் தலைவரும் தலைய சைத்[illegible] [illegible]களவியை நிறைய உறுப்பினர்கள் தன் னிடம் தனிப்பட்ட ரீதியில் கேட்ப தாகவும், சபையில் பேசாமல் இருந்து விடுவதாகவும் தெரி வித்தார்.

மாகாணத் திட்டமிடல் குழு வுக்கு நடந்தது என்ன என்றும், வடக்கின் வசந்தம் திட்டத்தை மாகாண சபைக்குள் உள்வாங்குவதற்கு எடுக்கப் பட்ட நடவடிக்கை தொடர்பிலும் லிங்கநாதன் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர், மாகாணத் திட்டமிடல் குழு பிரதம செயலாளரின் கட்டுப்பாட் டில் உள்ளது. இதனை விட வடக்கு மாகா ணத்தின் தேவை தொடர்பில் ஆராய்வதற்காக, கடந்த நவம்பர் மாதம் தொடக்கம், இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதியிடம் பலமுறை பேசியிருந்தோம். போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் தொடர்பில் மதிப்பீடு செய்வ தற்கான நடவடிக்கைகள் எம்மால் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதற்கிடையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஐ.நா பிரதி- நிதியுடன் நேரடியாகப்பேசி இது தொடர்பில் அவருடன் ஒப்பந்தம் செய்து கொண் டார்.

**மத்தியுடன் தான் ஒப்பந்தம்**

இது தொடர்பில் நாம் ஐ.நாவி டம் கேட்டதற்கு, தாம் மத்திய அரசுடன் தான் ஒப்பந்தம் செய்ய முடியும். மாகாண அரசுடன் ஒப்பந்தம் செய்ய முடியாது என்று பதில ளித்தனர். இதனை முன்னரே தெரிவித்திருக்கலாம் என்று கேட்டோம்.

இதன் பின்னர் ஜப்பான், தென் கொரியா, நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளை நான் சந்திக்கும்போது அவர்களுடன் இது பற்றிக் கலந்துரை யாடினேன். அவர்கள், இதற்குரிய நிதியை தாங்கள் தான் வழங்குவதாகத் தெரிவித்தார்கள். இந்த மதிப்பீட்டு நடவடிக்கை தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்கள். இது வந்த பின்னர் தான் வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் மிகப் பிரமாண்டமான திட்டத்தைதயாரிக்க முடியும் என்ற நீண்ட பதிலை வழங்கினார்.

**சூடான லிங்கநாதன்**

எமது சபைக்கு சகல அதிகாரங்களும் இருக்கின்றது. நாங்கள் ஆளுநரையோ, முதலமைச் சரையோ, அமைச்சர் களையோ மாற்ற முடியும் என்று தெரிவித்த லிங்கநாதன், மூன்று அமர்வுகளில் துணிந்து தீர்மானம் எடுத்தால் அதனை நாம் செய்யலாம் என்று சூடாகக் குறிப்பிட்டார்.

அமைச்சர் டெனீஸ்வரன், ஆளுங் கட்சி உறுப்பினர்கள் நாங்கள் எல்லோரும் சகல இடங்களிலும் வடக்கின் வசந் தம் திட்டம் மத்திய அரசின் திட்டம் என்று சொல்லி அதனை எதிர்த்துக் கொண்டிருக்கின்றோம். இவ்வாறான நிலையில் வடக்கின் வசந்தம் திட்டத்தை மத்திய அரசிடமிருந்து நாம் பெறுவது சரியா என்பதைப்பற்றி ஆலோசிக் கவேண்டும் என்று தெரிவித்து புதுக் குழப்பத்தை தொடக்கி விட்டார்.

**மஹிந்த சிந்தனையை நாம் ஏற்கவில்லை**

இதற்கு உடனடியாகவே பதிலடி கொடுத்தார் ஆளுங்கட்சி உறுப்பினர் லிங்கநாதன். நான் மஹிந்த சிந்தனையைப்பற்றிச் சொல்லவில்லை. வடக்கின் வசந்தத்தைப் பற்றியே சொல்கின்றேன். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வ தற்காகவே வடக்கின் வசந்தம் திட்டத்தைப் பெறவேண்டும் என்று தெரிவிக்கின்றேன். மஹிந்த[illegible] சிந்தனை[illegible] நாம் ஏற்கவில்லை என்பதை ஏற்கனவே கூறிவிட்டோம் என்று குறிப்பிட்டார்.

இதன் போது முதலமைச்சர், கடந்த ஜனவரி 2 ஆம் திகதி ஜனாதிபதியை நான் சந்தித்தபோது, வடக்கின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தையும் நாம் மேற்கொள்கின்றோம். அதற்கு ஒத்துழைப்பாக இருங்கள் என்று கேட்டதற்கு, அவர் சிரித்துக் கொண்டு போகப் போக ஒத்துழைக்கலாம் என்று பதிலளித்திருந்தார். தற்போதுதான் வடக்கின் ஜனாதிபதி செயலணியின் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் போது சீறி எழுந்தார் சிவாஜிலிங்கம். வடக்கில் எபோலா மாதிரி நில அபகரிப்பு நடந்து கொண்டிருக்கின்றது. நாங்கள் இங்கே அபிவிருத்தி பற்றி பேசிக் கொண்டிருக்கின்றோம். வடக்கில் தினம் தினம் நடக்கின்ற நில அபகரிப்பை பார்த்துக் கொண்டு வடக்கு மாகாண சபை தூங்குகின்றதா என்று கேள்வியெழுப்பினார். அத்துடன் அபிவிருத்தியை கைநீட்டிப் பெறுவதற்கு முண்டியடித்துக் கொண்டிருக்கவேண்டாம். எலும்புத் துண்டுகளுக்கு நாங்கள் அடிபட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை என் றார் சூடாக.

**ஒஸ்மானியா கல்லூரி அதிபர் இடமாற்றம்**

இதன் பின்னர் மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினர் அஸ்மின், ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் திடீரென்று ஆளுநரினால் இடமாற்றம் செய்யப்பட்டமை தொடர்பில் கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர், ஆளுநருக்கு உள்ள சிறப்புரிமையைப் பயன்படுத்தி அவர் இடமாற்றம் செய்ய முடியும் என்பதைச் சுட்டிக்காட்டினார். அத்துடன் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக அவர் இருப்பதால் அவரால் இதனைச் செய்யலாம் என்று குறிப்பிட்டு, ஆளுநரின் அழுங்குப் பிடியில் வடக்கு நிர்வாகம் இருக்கின்றது என்பதற்கு இதனை விட வேறு எந்த சம்பவமும் தேவையில்லை -என்றார்.

இதன் பின்னர் பிரேரணைக்குள் அவை நகர்ந்தது. அவைத் தலைவரினாலேயே முதலாவது பிரேரணை முன்வைக்கப்பட் டது. இந்திய மத்திய அரசிடம் மேலும் 50 ஆயிரம் வீடுகள் வடக்கு - கிழக்கு மக்களுக்கு வழங்குமாறு கோரும் பிரேரணை முன்வைக்கப்பட்டது. அதற்கு முதலமைச்சர் வரவேற்பு தெரிவித்துடன், இதில் மாகாண சபையின் பங்களிப்பும் இருக்கவேண்டும் என்று திருத்தமும் மேற்கொண்டார். இதன் போது சிவாஜிலிங்கம், மலையக மக்களும் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு 5 ஆயிரம் வீடுகளை இதில் வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டபோதும் அதற்கு எந்தப் பதிலும் அவையில் குறிப்பிடப் படவில்லை.

இதன் பின்னர் மன்னார் மாவட்ட ஆளுங்கட்சி உறுப்பினர் சிராய்வா, மன்னார் மாவட்டத்தில் தற்போது முன்னெடுக்கப்படும் இந்திய வீட்டுத்திட்டத்தின் குறைபாடுகளைப் பட்டியல்படுத்தினார். அங்குள்ள முஸ்லிம் அமைச்சர் ஒருவரினால் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு வீட்டுத்திட்டம் வழங்கப்படுவதையும், எந்த அடிப்படையில் கிராமங்கள் தெரிவு செய்யப்படுகின்றன என்ற ஒரு தெளிவு இல்லாமல் இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

**வீட்டுத் திட்டத்தில் பல குறைபாடுகள்**

இதன் பின்னர் கிளிநொச்சி மாவட்ட ஆளுங்கட்சி உறுப்பினர் பசுபதிப் பிள்ளையும், தற்போதைய வீட்டுத் திட்டத்தில் உள்ள குறைகளை அடுக்க, பொறுமையிழந்த அவைத் தலைவர், தற்போதைய வீட்டுத் திட்டத்தை விடுங்கள். அதில் பிரச்சினை இருப்பதால்தான் மேலும் 50 ஆயிரம் வீடுகளைக் கேட்கின்றோம். அதைப் பற்றி மட்டும் பேசுங்கள் என்று கட்டுப் போட்டார்.

இதன்பின்னர் அவைத்தலைவரின் அடுத்த பிரேரணை விவாதத்துக்கு வந்தது. இதன்போது ஆனையிறவு உப்பளம் விவாதப் பொருளாகியது. ஆனையிறவு உப்பளத்தில் ஈ.பி.டி.பி கட்சியினர் தமக்குத் தெரிந்தவர்களுக்கு மாத்திரமே வேலை வாய்ப்புக் கொடுப்பதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. பத்திரிகையில் முறைப்படி கோரிக்கை விடுத்து வேலை வாய்ப்பு வழங்கப்படாமல் நடைமுறைப்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதன்போது ஈ.பி.டி.பி சார்பில் அவையிலிருந்த ஒரே ஒரு உறுப்பினரான தவநாதன், எல்லாவற்றுக்கும் ஈ.பி.டி.பியை இழுக்கின்றனர். தேவையில்லாமல் தங்கள் அரசியல் பிழைப்புக்காக ஈ.பி.டியை இங்கு இழுக்கின்றனர் என்று குறிப்பிட்டார்.

இதன்போது ஆளுங்கட்சி உறுப்பினர் சுகிர்தன், ஆனையிறவு வேலை வாய்ப்பில் ஈ.பி.டி.பியினர் சம்பந்தப்பட்டிருப்பது உண்மை என்றும் அது தொடர்பில் தானே நேரடியாக ஆதாரங்களுடன் அறிந்து கொண்டதாகச் சபையில் போட்டுடைத்தார். இதன் பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் எதுவும் பேசவில்லை. ஆனாலும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன் பின்னர் ஆளுங்கட்சியின் ஒரேயொரு முஸ்லிம் உறுப்பினரான அஸ்மின் தனது பிரேரணையை முன்வைத்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் காலத்தில் ஒரு நியாயத்தின் அடிப்படையில் இங்குள்ள முஸ்லிம் மக்கள் வெளியேற்றப் பட்டிருந்தார்கள். ஆனால் அது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் காலத்திலேயே தவறு என்று உணரப்பட்டுப் பல தடவைகள் மன்னிப்பும் கேட்கப்பட்டது. ஆனால் தற்போது அதனைப் பயன்படுத்த சிலர் முனைவதாகக் குற்றஞ்சாட்டி னார். ஆனால் அவர்கள் யார் என்பதை அவர் வெளிப்படுத்தவில்லை.

**முஸ்லிம்களின் மீள்குடியமர்வுக்கு ஈ.பி.டி.பி தடை**

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்களின் மீள்குடியமர்வுக்கு. ஈ.பி.டி.பி தடையாக இருக்கின்றது என்று அஸ்மின் சபையில் நடந்த ஒரு சம்பவத்துடன் தொடர்புபடுத்தித் தெரிவித்தார். அத்துடன் இங்குள்ள முஸ்லிம் மக்களுக்கும் இந்திய வீட்டுத் திட்டத்தில் இடம் வழங்கப்படவேண்டும் என்ற பிரேரணையை முன் வைத்தார். அதனை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. இதன் பின்னர் சபை நடவடிக்கைகள் தேநீர் இடைவேளைக்காக நிறுத் தப்பட்டன.

தேநீர் இடைவேளையின் பின்னர் சபை நடவடிக்கைகள் மீள ஆரம்பமானது. இதன்போது வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு முல்லைத்தீவுடன் சட்டவிரோதமான முறையில் இணைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பிரதி அவைத் தலைவர் பிரேரணையை முன் வைக்க முயன்றார். இதன்போது குறுக்கிட்ட முதலமைச்சர், இது தொடர்பில் ஒரு சுற்றறிக்கை உள்ளது என்று [illegible] அதனை வாசித்தார். அதில் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு, பயங்கரவாத நடவடிக்கை காரணமாகவே அநுராதபுரத்துடன் இணைக்கப்பட்டது என்றும், பயங்கரவாத நடவடிக்கை முடிவுக்கு வந்துள்ளமையால் முல்லைத்தீவு மாவட்டத்துடன் மீள இணைக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**வெலி ஓயா விவகாரம்**

இதன் பின்னர் தொடர்ந்த அன்ரனி ஜெகநாதன், வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு வடக்குடன் சட்டரீதியாக இணைக்கப்படவில்லை என்பதற்கு அடுத்தடுத்து ஆதாரங்களை அடுக்கினார்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னர் இருந்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், அரச காணியில் தான் முறைகேடாகப் பெற்ற பணத்தைப் பயன்படுத்திச் சிற்றுண்டிச்சாலை அமைத்துள்ளதாகவும், அதனை தற்போது முஸ்லிம் நபர் ஒருவரின் பெயரில் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும், இதற்குச் சுகாதார அமைச்சர் அனுமதியளிக்கக் கூடாதென்றும், அதனையும் மீறி இந்த முறையற்ற செயற்பாட்டுக்கு அனுமதித்தால் முழு விடயங்கயையும் வெளிப்படுத்துவேன் என்று குறிப்பிட்டு அமர்ந்தார்.

பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதனால் கொண்டு வரப்பட்ட பிரேரணையை வழிமொழிந்த அமைச்சர் ப.சத்தியலிங்கம், வெலிஓயா தொடர்பில் மேலும் பல உண்மைகளை சபையில் போட்டுடைத்தார். முதலமைச்சரினால் சபையில் வாசிக்கப்பட்ட பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் கடிதம் முழுமையாகப் பொய்யானது என்று ஆரம்பத்திலேயே அதிர்ச்சி கொடுத்தார்.

ஒரு மாவட்டத்தின் எல்லையை மீள்நிர்ணயம் செய்வதற்குக் குழு இருக்கின்றது. மாகாணத்தின் எல்லையை மீள் நிர்ணயம் செய்வதற்கு குழு இருக்கின்றது. இவர்கள் இவ்வாறு மாகாணத்தின் எல்லையை மாற்றியமைப்பதாயின் அது தொடர்பில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பின்னர் அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதி பெறப்படவேண்டும்.

**80 வீதமான நிதி வெலி ஓயாவுக்கு**

ஆனால் இங்கு அவை எதுவுமே செய்யப்படவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 80 சதவீதமான நிதி, கேட்பாரின்றி வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவுக்கே சென்றது. வவுனியா வடக்குப் பிரதேசசபையின் மூன்று உறுப்பினர்கள், வெலிஓயாவைச் சேர்ந்தவர்கள். ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்தின் பிரதேச சபையில் எப்படி அங்கம் வகிக்க முடியும் என்று ஆதாரங்களை கேள்விகளாக அடுக்கினார்.

இதன் பின்னர் இந்த விடயத்திலும் சீறினார் சிவாஜிலிங்கம். வவுனியாவுடன் அநுராத புரத்தின் 3 சிங்களப் பிரதேச செய லாளர் பிரிவை அன்றைய காலத்தில் இணைக்க முற்பட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்த்ததாகவும், இதனாலேயே இன்று வவுனியா பறிபோகாமல் இருக்கின்றது என்பதையும் அவர் நினைவூட்டினார்.

இதன் பின்னர் வடக்கு முதலமைச்சர், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் வடக்கு மாகாணத்தின் பரந்தன் வரையிலான சில பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள வர்த்தகமானி அறிவித்தலை வாசித்துக் காட்டினார்.

**சிங்கள மொழியில் வாக்குவாதங்கள்**

இதன் பின்னரே கடுமையான வாதங்கள் சபையில் சிங்கள மொழியில் தொடங்கியது. எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதிலக எழுந்து பதிலளித்தார். அவர் இதன்போது, தாம் முன்னர் இருந்த இடங்களிலேயே தற்போது வந்து இருக்கின்றோம் என்றும், வெலி ஓயா பிரதேச செயலாளர் பிரிவு சட்ட ரீதியாகவே இணைக்கப்பட்டது என்றும், அதற்கான வர்த்தகமானி அறிவித்தல் இருப்பதாகவும் தெரிவித்து ஆளுங் கட்சியினருக்கு அதிர்ச்சி கொடுத்தார். அத்துடன் அடுத்த மாதம் ஜனாதிபதி மஹிந்த இங்கு வருவதாகவும், அதன்போது இந்தப் பிரச்சினைகளைப் பற்றி பேசுமாறும் தெரிவித்தார்.

இதன் பின்னர் முதலமைச்சர் பதிலடி கொடுத்தார்.

இராணுவத்தினர் வெளிமாவட்டங்களிலிருந்து வந்தவர்கள். அவர்கள் இங்கு இருக்கமுடியாது. வந்தகடமை முடிந்து விட்டது. அவர்கள் வெளியேற வேண்டும் என்று தெரிவித்தார். இதன் பின்னர் அஸ்மின், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தெரியாத ஜனாதிபதியுடன் பேசுமாறு சொல்கின்றீர்களே வெட்கம்கெட்ட உறுப்பினர்கள் என்று தெரிவித்தார்.

இதன் பின்னர் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களால் சபையில் அனல் பறந்தது. கன்னி அமர்வுக்குப் பின்னர் பேசாமல் இருந்த தர்மபால என்ற மற்றைய சிங்கள உறுப்பினரும் கடுமையாகத் தர்க்கம் புரிந்தார். அவைத் தலைவரின் அறிவிப்பை புறந்தள்ளி மோதல் தொடர்ந்தது. ஒரு கட்டத்தில் சபையில் ஒலிவாங்கி நிறுத்தப்பட்டும், அதனைப் பற்றிக் கவலைப்படாமல் ஆளுங்கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் கடுமையாக மோதிக் கொண்ட னர். சிங்கள மொழியில் நீண்ட நேரம் நடந்த சண்டை, இறுதியில் முதலமைச்சரால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. முதலமைச்சர் சிரித்துக் கொண்டே, ஏனைய மாகாண சபைகளில் இந்தளவு தூரம் மொழிக்குச் சமவுரிமை கொடுக்க மாட்டார்கள். ஆனால் இங்கு நாங்கள் கொடுத்திருக்கின்றோம். எதிர்க்கட்சி சிங்கள உறுப்பினர்களுடன், எங்கள் உறுப்பினர்கள் சரி சமமாகச் சிங்களத்தில் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். மொழிக்குச் சமவுரிமை கொடுத்ததை யிட்டு நான் பெருமைப்படுகின் றேன் என்று கூறி அமர்ந்தார். அத்துடன் பெரும் போர் முடிவுக்கு வந்தது.

இதன் பின்னர் முதலமைச்சர் நிதியம் தொடர்பில் ஆளுநர் அனுப்பி வைத்த கடிதத்தை அவைத் தலைவர் வாசித்துக் காட்டினார். அத்துடன், தற்போதுள்ளவாறு இல்லாமல், அதனை மாற்றியனுப்பலாம் என்று தெரிவித்தார். அதற்கு முதலமைச்சர் சம்மதம் தெரிவித்ததுடன், புலி பதுங்குவது காரணமில்லாமல் இல்லை என்று தெரிவிக்க, சிவாஜிலிங்கம் குறுக்கிட்டு, எவ்வளவு தூரத்துக்கு எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்துச் செல்வது. எல்லாவற்றுக்கும் ஒரு அளவிருக்கின்றது என்று கடுமையாகத் தெரிவித்தார்.

இதன் பின்னர் அவைத் தலைவர் அவையை ஒத்தி வைப்பது பற்றி தெரிவிக்க, ஆளுங்கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம், தனது பிரேரணை தொடர்பில், கேள்வி எழுப்பினார். இதன்போது முதலமைச்சர், கட்சியின் தலைமையின் முடிவு தொடர்பில் பிரஸ்தாபித்தார். அத்துடன் சிவாஜிலிங்கம் தனது பிரேரணையில் மாற்றத்தைச் செய்துள்ளார். அதனைப் பற்றி முடிவு சொல்வதற்குக் கட்சித் தலைமை கால அவகாசம் கேட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் பின்னர், சிவாஜிலிங்கம் பதிலுரைத்தார். அன்றிலிருந்து இன்று வரை நடப்பது இன அழிப்புதான் என்றும், இது தொடர்பிலான 117 பக்க ஆவணம் தன்னிடம் இருப்பதாகவும் அதனை இன்று சபாபீடத்தில் சமர்ப்பிப்பதாகவும் குறிப்பிட்டார். இதன்போது குறுக்கிட்ட அவைத் தலைவர், அதனை ஏன் இங்கு சமர்ப்பிக்கின்றீர்கள், அனுப்பி வையுங்களேன் என்று தெரிவித்தார். அதற்கு சிவாஜிலிங்கம் அதற்கு தனியாக அனுப்புவதாகவும், அதில் தான் பத்து பக்க சாட்சியத்தை வழங்கவுள்ள தாகவும் தெரிவித்தார். அவைத் தலைவரும், ஆளுங்கட்சி உறுப்பினர் சிவாஜலிங்கமும், வார்த்தைகளில் தெளிவாகவே விடயத்தைக் கையாண்டு கொண்டனர்.

இதன் பின்னர் அமர்வு முடிவில், ஆளுங்கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம் தான் கொண்டு வந்த சாட்சிய ஆவணங்களைச் சபையின் செயலாளரிடம் கையளித்தார். அத்துடன் சபை அடுத்த மாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

*தி.அமுதன்.*



காலநிலை மாற்றம் அமெரிக்காவின் நியூயோர் நகரில் ஞாயிறன்று நடைபெற்ற பேரணியில் ஒரு பெரிய பூமி மிதவை ஒன்று ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. இதன்போது ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் கலந்துகொண்டனர்.

# எண்ணெய்க் கிணறு ஜேர்மனியில் நாசம்

பேர்ளின், செப்.26

ஜேர்மனியின் லோயர் சாக்சனியில் உள்ள எண்ணெய்க் கிணறு ஒன்று வெடித்ததால் அதில் வேலை பார்த்து கொண்டிருந்த 4 தொழிலாளிகள் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஜேர்மனியின் லோயர் சக் சோனி நகரில் உள்ள எண் ணெய்க் கிணறு ஒன்றில் ஏற்பட்ட பழுதை 4 தொழி லாளிகள் சரி பார்த்துக் கொண்டிருந்தபோது திடீரென எரிவாயு கசிவால் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் அங்கு வேலை செய்து கொண்டிருந்த 4 தொழிலாளிகளும் படுகாயம் அடைந்துள்ளனர். பின்னர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற அம்புலன்ஸ் மற்றும் ஹெலி மூலம் காயம் அடைந்தவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

மேலும், 120 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள்



ஈடுபட்டு தீயை கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

அதையடுத்து நடைபெற்ற பொலிஸ் விசாரணையில், எரிவாயு கசிவு ஏற்பட்டிருந்த போது அடிபட்ட 4 தொழிலாளிகள் வெடிப்பு நடந்த பகுதிக்கு அருகில் இருந்ததாக தெரியவந்துள்ளது.

தற்போது இந்த விபத்துக்கான காரணத்தைக் கண்டறிய நிபுணர்கள் ஆய்வில் ஈடுபட் டுள்ளனர். (வ)

# போகோ ஹராம் தலைவன் சுட்டுக்கொலை

போகோ ஹராம் தீவிரவாத இயக்கத்தின் தலைவன் அபுபக்கர் ஷெகாவ் சுட்டுக் கொல்லப்பட்டதாக வெளியான தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தங்களது தோழர்களை விடுவிப்பதுடன், தனி நாடு பெற வேண்டும் என்பதற்காக நைஜீரியாவில் தாக்குதல்களை நடத்தி வரும் போகோ ஹராம் தீவி ரவாதிகள், அந்தநாட்டை சேர்ந்த 300 மாணவிகள் மற்றும் பல பெண்களையும் கடத்திச் சென்று துன்புறுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில் கடந்த 17 ஆம் திகதி நைஜீரிய எல்லைப் பகுதியில் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே நடந்த தாக்குதலில் போகோ ஹராம் அமைப்பின் தலை வனான அபுபக்கர் ஷெகாவ் சுட்டுக் கொல்லப்பட்டதாக அந்தநாட்டின் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில்;

ஏறத்தாழ 12 முறைக்கும் மேலாக அபுபக்கர் கொல்லப்பட்டதாக கூறப்பட்ட போதும் அவன் தொடர்ந்து உயிருடன் நடமாடி வருகின்றான் என்றும் தன்னைப் போன்ற உருவ ஒற்றுமை உள்ளவனை இறக்க வைத்து எதிரிகளை குழப்பும் கில்லாடியான அபுபக்கர், தற்போது உயிரிழந்திருப்பது உண்மை என்றும் கூறியுள்ளனர். (வ)

# ஒரே நாளில் 18 நாடுகளுக்கு பயணித்து மூவர் சாதனை



நோர்வேயைச் சேர்ந்த 3பேர், 24 மணி நேரத்துக்குள் 18 நாடுகளுக்குப் பயணித்து உலக சாதனை படைத்துள்ளனர்.

கன்னார் கார்ஃபோர்ஸ் (வயது-39), டே- யங் பாக் (வயது-42), ஒய்விண்ட் ஜுப்விக் (வயது-38) ஆகிய அந்த மூவரும் கிரீஸில் சனிக்கிழமை இந்தப் பயணத்தைத் ஆரம்பித்தனர். கொஸாவோ, செர்பியா, கிரோஷியா, போஸ்னியா, செக் குடியரசு, ஜேர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம், லக்ஸம்பர்க், பிரான்ஸ், சுவிற்ஸர்லாந்து உள்ளிட்ட 17 நாடுகளுக்குச் சென்ற அவர்கள், பல்கேரியாவில் தங்களது பயணத்தை முடித் தனர். ஒரே நாளில் 17 நாடுகளுக்குப் பயணம் சென்றதுதான் இதுவரை உலக சாதனையாக இருந்து வந்தது. (வ)

# தவிக்கிறது உலகு

## ஒழுங்கின்மைக்கும் ஒருங்கிணைப்புக்கும் இடையே

வொஷிங்டன், செப்.26



வன்முறைகளால் உலகின் பல நாடுகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஐ.நா.சபை பொதுக் கூட்டத்தில் அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:

போருக்கும் சமாதானத்துக்கும் இடையே உலகம் சிக்கித் தவிக்கிறது. ஒழுங்கின்மைக்கும் ஒருங்கிணைப்புக்கும் இடையே உலகம் சிக்குண்டுள்ளது.

ஈராக்-சிரியாவில் செயற்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு அழிக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் பொதுச் சபையும் அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை ஒழிக்க பாடுபட வேண்டும். இறப்பை ஒழிக்க ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை ஒழிக்க அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது.

கெடுபிடிப் போர் காலத்துக்குப் பிந்தைய நிலையை ரஷ்ய நடவடிக்கை மாற்றிவிட்டது. உக்ரைனில் ரஷ்யா நிகழ்த்தி வரும் செயல்கள் சவாலாக அமைந்துள்ளன.

மேலும், உக்ரைன் மக்களுக்கு உதவ அமெரிக்காவும் நட்பு நாடுகளும் உறுதி பூண்டுள்ளன. சிறிய நாடுகளைப் பெரிய நாடுகள் அச்சுறுத்தக் கூடாது என்றும் - தெரிவித்தார்.

வலுக்கட்டாயமாக எல்லையை மறுவரையறை செய்ய ரஷ்யா முயல்கிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (வ)

# நடிகரின் கட்-அவுட்டை திருமணம் செய்த பெண்




வொஷிங்டன், செப்.26

அமெரிக்காவைச் சேர்ந்த பெண் ஒருவர் ஹொலிவூட் நடிகர் ரோபர்ட் பான்டிசனின் கட்-அவுட்டை திருமணம் செய்து கொண்டுள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் லொஸ் வேகஸ் மாகாணத்தில் வசிக்கும் லாரன் ஆட்கின்ஸ் என்ற 25 வயதுடைய பெண் ஹொலிவூட் திரைப்படத்தில் ரத்தக்காட்டேரியாக நடித்த நடிகர் ரோபர்ட் பான்டிசனின் தீவிர ரசிகை.

நாளடைவில் ரோபர்ட் மீதான மோகம் இவருக்கு அதிகரிக்கவே, ரோபர்ட்டின் நிஜ உயரத்துக்கு காட்போர்ட் மட்டையில் கட்-அவுட் ஒன்றை செய்து, அதனுடன் சமீபத்தில் திருமணமும் செய்துகொண்டார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்: "எத்தனையோ பேர் என்னைத் திருமணம் செய்து கொள்ள வந்தார்கள். ஆனால் ஒருவரைக்கூட எனக்குப் பிடிக்கவில்லை.

எனவே எனக்குப் பிடித்த ரோபர்ட்டை திருமணம் செய்து கொள்ளலாம் என்று நினைத்த நான், அதை தற்போது செயற்படுத்தியுள்ளேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறியுள்ளார். (வ)

# ஆராய்ச்சியாளர் தலை துண்டித்துப் படுகொலை

பிரான்ஸ் ஆராய்ச்சியாளரின் தலையைக் கொடூரமாக துண்டித்து கொலைசெய்தனர் ஐ.எஸ்.ஐ.எஸ். அல்ஜீரியாவுக்கு பயணம் மேற் கொண்ட பிரான்ஸ் நாட்டின் ஆராய்ச்சியாளரை அங்கிருந்த ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் தலைதுண்டித்து கொடூர மாகக் கொலை செய்துள் ளனர்.



கடந்த சில தினங்களுக்கு முன்பு அல்ஜீரியா குகைகள் குறித்து ஆய்வு நடத்த சென்ற பிரான்ஸ் ஆராய்ச்சியாளர் ஹெர்வ் குயர்தெல் என்பவரை அங்குள்ள ஐ.எஸ். ஐ.எஸ். இயக்கத்துடன் தொடர்புடைய அல்ஜீரிய தீவிரவாதிகள் பணயக் கைதியாகப் பிடித்து வைத்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து பிரான்ஸ் ஐ.எஸ்.ஐ.எஸ். மீது நடத்தும் தாக்குதலை நிறுத்தாவிட்டால், ஆராய்ச்சியாளர் ஹெர்வின் தலை துண்டிக் கப்படும் என்று கடந்த 22 ஆம் திகதி இந்த தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்தனர். மேலும் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்ஸிஸ் ஹோலண் டேவுக்கு 24 மணி நேர கெடு விதித்தனர். எனினும் பிரான்ஸ் தொடர்ந்து தனது தாக்குதலை சிரியாவில் அரங்கேற்றி வருவதால் கோபமடைந்த தீவிரவாதிகள், நேற்று முன்தினம் ஹெர்வின் தலையை துண்டித்து கொடூரமாகக் கொலை செய்ததுடன், அந்தக் காணொலியையும் வெளியிட்டுள்ளனர். (வ)

# 2001 தாக்குதலில் இறந்தவர் இனங்காணப்பட்டார்

வொஷிங்டன், செப்.26


அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட இரட்டைக் கோபுரத் தாக்குதலில் உயிரிழந்த நபர் 13 வருடங்களின் பின்னர் அடையாளம் காணப்பட்டார்.

தாக்குதலில் உயிரிழந்த குறித்த நபரின் பெயர் பாட் ரைஸ் பிராட் என்பது மருத்துவப் பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

தாக்குதல் நிகழ்த்தப்பட்ட இடத்திலிருந்து 2001, 2002 ஆம் ஆண்டுகளில் கண்டெடுக்கப்பட்ட உடல்களில் மேற்கொள்ளப்படும் மரபணுப் பரிசோதனை மூலம் பாட் ரைஸ் பிராட் உயிரிழந்தமை உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்த 2,753 பேரில் 60 சதவீதத்தினர் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளனர். (வ)

# ஸ்னோடெனுக்கு 'மாற்று' நோபல்



வொஷிங்டன், செப்.26

அமெரிக்க உளவுத்துறையின் இரகசியங்களை அம்பலப்படுத்திய எட் வர்ட் ஸ்னோடென் 'நோபல் பரிசுக்கு மாற்று' என்று கூறப்படும் ரைட் லைவ் லிஹூட்' விருதுக் குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த விருதை பாகிஸ் தான் மனித உரிமை ஆர் வலர் அஸ்மா ஜஹாங்கீர் 'கார்டியன்' பத்திரிகை ஆசிரி யர் அலன் ரஸ்பிரிட்ஜர், ஆசிய மனித உரிமை ஆணையகத்தின் பாசில் ஃபெர்னாண்டோ, அமெரிக்க சுற்றுச் சூழல் ஆர்வலர் பில் மெக்கி பன் ஆகியோருடன் அவர் பகிர்ந்து கொள்கிறார்.

இந்த விருதுக்குரிய 2.1 லட்சம் டொலரை (சுமார் ரூ.1.28 கோடி) இந்த ஐவரும் பகிர்ந்து கொள்கின்றனர்.

நோபல் பரிசைப் பெறத் தவறிய, தகுதியுடைய நபர்களைக் கௌரவிக்கும் நோக்கில், சுவீடனில் ரைட் லைவ் லிஹூட்' அறக்கட்டளை இந்த விருதுகளை 1980 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கி வருகிறது. (வ)

# அசாஞ்சேயின் குற்றச்சாட்டுக்கு கூகுள் மறுப்பு

கூகுள் நிறுவனம், அமெரிக்க அரசின் உளவுக்கூட்டாளி என்று விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே சாடியதைக் கடுமையாக மறுத்துள்ளார் கூகுள் தலைவர். மேலும், விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே பீதியின் பீடிப்பில் பேசுவதாகக் கூகுள் நிறுவனத் தலைவர் எரிக் ஷ்மிட் சாடியுள்ளார். இணையத் தளத்தின் வெளிப்படைத் தன்மை என்ற விவகாரத்தில் அமெரிக்க அரசின் கூட்டாளியே கூகுள் என்று அசாஞ்சே சாடியிருந்தார். அசாஞ்சே தனது விக்கிலீக்ஸை கூகுள் சந்திந்தபோது. (When Google met Wikileaks) என்ற புத்தகத்தில் கூகுள் நிறுவனத்தின் செயற்பாடுகளைவிவரிக்கையில் இவ்வாறு கூறியிருந்தார்.

இந்த நூலின் அறிமுகத்தையொட்டி கூகுள் தலைவர் எரிக் ஷ்மிட் கூறுகையில்; "அசாஞ்சே பீதியின் பீடிப்பில் இவ்வாறு கூறுகிறார்- என்றார். அந்த நூலில் 2011 ஆம் ஆண்டு கூகுள் தலைவர் ஷ்மிட்டை, அசாஞ்சே சந்தித்த தருணம் விவரிக்கப்பட்டுள்ளது. அதாவது கூகுள் என் பது ஒரு தனியார் தேசிய (அமெரிக்க) பாதுகாப்பு முகவரகம் என்று அசாஞ்சே கடுமையாகச் சாடியுள்ளார்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டைக் கடுமையாக மறுத்த கூகுள் தலைவர், அசாஞ்சே மிகவும் பீதியடைந்த மன நிலையில் பேசுகிறார். தேசிய பாதுகாப்பு முகவரகத்துடன் கூகுள் ஒருபோதும் கூட்டுச் சேர்ந்ததில்லை. மாறாக தேசிய பாதுகாப்பு முகவரகத்தின் செயற்பாடுகளை கூகுள் எதிர்த்து வந்துள்ளது என்றார்.

மேலும், தேசிய பாதுகாப்பு முகவரகத்தினர் தங்களது அனைத்துத் தரவுகளையும் எடுத்துக் கொண்டனர் - என்றார். (வ)



இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பத்து நாள் பயணமாக நேற்று வியாழக்கிழமை அமெரிக்கா சென்றடைந்தார். பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணத்தை முன்னிட்டு நேற்று பத்து நாள் பயணமாக சுஷ்மா சுவராஜ் அமெரிக்கா புறப்பட்டார். நியூயோர்க்கில் இன்று நடைபெற இருக்கும் ஐ. நா. சபைப் பொது கூட்டத்தில் பங்கேற்கும் அவர், அமெரிக்காவில் பிரதமர் மோடியின் பங்கேற்புகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்கிறார். மேலும், இந்தப் பயணத்தில் பிரிட்டன், மாலைதீவு உள்ளிட்ட 7 நாடுகளுடன் பல்வேறு ஒப்பந்தங்கள் ரீதியிலான சந்திப்புக்களை அவர் அடுத்தடுத்து மேற்கொள்ளவுள்ளார். (வ)

# மோடி - ராஜபக்ஷ சந்திப்புக்கு எதிர்ப்பு

## பா.ம.க.நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்து

சென்னை, செப்.26

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஐ.நாவில் சந்திப்பதை இந்தியப் பிரதமர் மோடி தவிர்க்கவேண்டும்என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து அவரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'ஐக்கிய நாடுகள் பொது அவையின் 69 ஆவது கூட்டத்தில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திரமோடி நேற்று அமெரிக்கா பயணமானார். அரச பொறுப்பேற்ற பின்னர் முதன் முறையாக இந்த வரலாற்று சிறப்புமிக்க பயணத்தை மேற்கொள்ளும் பிரதமருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

அமெரிக்காவில் 100 மணித்தியாலங்கள் மட்டுமே தங்கியிருக்கும் பிரதமர் 50 நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வகையில் அவரது பயணத் திட்டம் வடிவமைக்கப்பட்டிருப்பதாகவும், அவரை சந்திக்கப் பல நாடுகளின் தலைவர்களும் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

உலகத் தலைவர்கள் பலரும் பிரத மரைத் தேடி வந்து சந்திக்கும் அள வுக்கு இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

அதேநேரத்தில் உலகின் மிகக் கொடிய இனப்படுகொலையை நிகழ்த்திய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவைச் சந்திக்க பிரதமர் நரேந்திர மோடி நேரம் ஒதுக்கியிருப்பதுதான் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கு அதிர்ச்சி கலந்த வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

> “ உலகின் மிகக் கொடிய இனப்படு கொலையை நிகழ்த்திய இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்க பிரதமர் நரேந்திர மோடி நேரம் ஒதுக்கியிருப்பது தான் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கு அதிர்ச்சி கலந்த வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த மே மாதம் 26 ஆம் திகதி டில்லி வந்த ராஜபக்ஷவிடம் தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு அளிப்பதற்காக 13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை உடனடியாக செயற்படுத்தும்படி பிரதமர் நரேந்திரமோடி வலியுறுத்தினார்.

அதன் பின் கடந்த மாதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் டில்லி வந்து பிரதமரை சந்தித்த போதும் இதே கோரிக்கையை மோடி வலியுறுத்தினார்.

ஆனால், இந்தக் கோரிக்கையை ஏற்க முடியாது என்று இலங்கை அரசு அறிவித்து விட்டது.

அதுமட்டுமன்றி, வங்கக் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களைக் கைது செய்வது, அவர்களது படகுகளை பறிமுதல் செய்வது உள்ளிட்ட செயல்களில் இலங்கை அரசு தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறது.

இவை இந்தியாவின் வலிமைக்கும், இறையாண்மைக்கும் சவால் விடுக்கும் நடவடிக்கைகள் ஆகும்.

எனவே ராஜபக்ஷவை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்தால், அதை வைத்தே இந்தியா தங்கள் பக்கம் இருப்பதாகக் கூறி ஐ.நா. போர்க்குற்ற விசாரணையை வலுவிழக்கச் செய்ய இலங்கை முயலும். அது ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாக அமையும்.

இலங்கையுடன் உயர்மட்ட சந்திப்புக்களை இந்தியா தவிர்க்க வேண்டும்; நியூயோர்க்கில் இலங்கை ஜனாதி பதியைச் சந்தித்துப் பேசும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி கைவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்'- என்றுள்ளது. (வ)

# உயிர் காக்கும் மருந்துகள் விலை உயரும் அபாயம்

டில்லி, செப்.26

இந்தியாவில் மத்திய அரசின் நடவடிக்கையால் உயிர்காக்கும் மருந்துகளின் விலை உயரும் அபாயம் ஏற்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எய்ட்ஸ், காச நோய், புற்று நோய் உள்ளிட்ட மருந்துகளை விற்பனை செய்ய மத்திய அரசு கடந்த வருடம் பதியக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

இதனால் தனியார் மருந்துகள் தயாரிப்பு நிறு வனங்கள் தங்கள் இஷ்டத்துக்கு மருந்துகளின் விலையை உயர்த்த முடியாத நிலை நிலவி வந்தது.

ஆனால் இப்போது உயிர் காக்கும் மருந்துகளின் விற்பனையைச் சர்வதேச காப்புரிமையின் கீழ் மத்திய அரசு கொண்டுவந்து, அதற்கான க்கட்டுப்பாடுகளையும் தளர்த்திக் கொண்டுள்ளது. (வ)

# 214 நிலக்கரி சுரங்கங்களின் உரிமம் ரத்து

சட்டவிரோதமாக ஒதுக்கப்பட்ட 214 நிலக்கரி சுரங்கங்களின் உரிமத்தை ரத்து செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நிலக்கரி சுரங்கங்கள் ஒதுக்கீடு குறித்த வழக்கின் விசாரணை நேற்று உச்சநீதி மன்றத்தில் நடைபெற்றது. அதை விசாரித்த நீதிபதி, 214 சுரங்கங்களின் உரிமத்தை ரத்து செய்து உத்தரவிட்டார். மொத்தமுள்ள 218 நிலக்கரி சுரங்கங்களில், மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களின் 4 சுரங்கங்களின் உரிமம் மட்டுமே செல்லும் என்றும், மீதமுள்ள 214 சுரங்கங்களின் உரிமம் ரத்து செய்யப்படுவதாகவும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார். உச்ச நீதிமன்றம் அனுமதித்துள்ள 4 உரிமங்களில் கோல் இண்டியாவின் 2 சுரங்கங்களும், என்.டி.பி.சி. மற்றும் சி.ஐ.எல்லின் தலா ஒரு சுரங்கமும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# மங்கள்யான் அனுப்பிய முதலாவது புகைப்படம்

டில்லி, செப்.26

செவ்வாய் கிரகத்தை ஆராய அனுப்பப்பட்ட மங்கள்யான் விண்கலம் எடுத்த முதல் புகைப்படத்தை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

இஸ்ரோவின் செவ்வாய்க் கிரக ஆராய்ச்சி மிஷனின் அதிகார பூர்வ பேஸ்புக் பக்கத்தில் முதலாவது புகைப்படம் வெளி யிடப்பட்டுள்ளது.

மங்கள்யான் விண்கலம், அதில் பொருத்தப்பட்ட வண்ணப் புகைப்பட கமராவைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட 10 புகைப்படங்களை நேற்றுவியாழக்கிழமைகாலை அனுப்பியுள்ளது. செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பை அது படம் பிடித்துள்ளது.

அந்தப் புகைப்படங்கள் முதலில் பிரதமர் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இஸ்ரோவின் மார்ஸ் மிஷன் பேஸ்புக் புக்கத்தில் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை காலை மங்கள்யான் விண்கலம் செவ்வாய் சுற்று வட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.



விண்கலம், சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்ட சில மணி நேரங்களில் விண்கலத்தில் இருந்தவற்றில் 5 உபகரணங்கள் இயக்கப்பட்டன.

அதில் ஒன்று வண்ணப் புகைப்பட கமராவாகும். அந்தக் கமரா செயற்படத் தொடங்கி, 10 புகைப்படங்களை அனுப்பியுள்ளது. மற்றைய இயந்திரங்களும், ஒன்றன்பின் ஒன்றாக செயற்படத்தொடங்கும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (வ)

# 'உயிருடன் புதைத்து' சிறுமியை கொலை செய்த சித்தி கைது

ஆக்ராவில் சிறுமியை 'உயிருடன் புதைத்து' கொலை செய்த அவரது சித்தி கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹரிபூர் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட சாஸ்திரிபுரம் பகுதியைச் சேர்ந்த சிறுமி சுமிக்ஷா. அவரது சித்தி அர்சனா. சிறுமி சுமிக்ஷா கடந்த ஞாயிற்றுக்கிழமையில் இருந்து காணவில்லை. அர்சனாவும் சுமிக்ஷாவை காணவில்லை என்று தனது கணவரிடம் தெரிவித்துள்ளார். ஆனால் சிறுமியை ஞாயிறு அன்று உயிருடன் மண்ணுக்குள் குழி தோண்டி புதைத்துள்ளார். சிறுமியின் வாயில் துணியை வைத்து அவரது சத்தம் வெளியே கேட்டகாத வண்ணம் கொடுமை செய்து கொலை செய்துள்ளார்.

அதன்பின்னர் அர்சனா இந்த விவகாரத்தை தனது உறவினரிடம் தெரிவித்துள்ளார். அவர் இதனைப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். உடனடியாக பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சிறுமியின் உடலை மீட்டனர். சிறுமி இறந்துவிட்டார். அவருடைய வாயில் இருந்து துணி கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக அர்சனாவை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சிறுமி கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சிறுமியின் உடலைப் பார்த்த கிராமத்தினர் கண்ணீர் விட்டு அழுதனர். (வ)

# தீவிரவாதிகளின் பதுங்கிடம் அழிப்பு

ஜம்மு, செப்.26

ஜம்மு-காஷ்மீரில் தீவிரவாதிகளின் பதுங்கிடம் பாதுகாப்புப் படையினரால் அழிக்கப்பட்டதுடன் அங்கிருந்து பயங்கர ஆயுதங்களும் வெடி பொருள்களும் கைப்பற்றப்பட்டன.

ஜம்மு-காஷ்மீரின் கர்சல்ங்கார் வனப்பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து இராணுவத்தினர் அந்தப் பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இதில், அங்கிருந்த பதுங்கிடம் கண்டிபிடிக்கப்பட்டு முற்றிலுமாக அழிக்கப்பட்டது. (வ)

# ஆ.ராசா, கனிமொழி மனுக்கள் நிராகரிப்பு

டில்லி, செப்.26

தங்களை 2ஜி முறைகேடு வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று ஆ.ராசா, கனிமொழி ஆகிய இருவரும் தாக்கல் செய்திருந்த மனுக்களை உச்ச நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்துள்ளது.




டில்லி சிறப்பு சி.பி.ஐ. நீதிமன்றத்தில் 2ஜி அலைக்கற்றை முறைகேடு வழக்கு நடைபெற்று வருகிறது. இந்த வழக்கிலிருந்து தங்களை விடுவிக்க வேண்டும் என்றும் - இந்த மனுவின் மீதான வழக்கு விசாரணை நடைபெற்று முடியும் வரை, சிறப்பு நீதி மன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணையைநிறுத்தி வைக்க வேண்டும் என்றும் தமது மனுவில் இருவரும் கேட்டுக் கொண்டிருந்தனர். (வ)




வரைந்ததை அனுப்புங்கள், தரம்கண்டு பிரசுரிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி
வரையுங்கள் கார்ட்டூன்
உதயன்,
இல. 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



வாரியபொல- ஹங்கிலிபொல ஆகிய திறந்தவெளிச் சிறைச்சாலைகளை பார்வையிடும் நோக்கில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர அண்மையில் பயணமொன்றை மேற்கொண்டார். சிறைச்சாலைகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளின் குறைநிறைகளைக் கண்டறியும் நோக்கில் மேற்கொண்ட இந்தப்பயணத்தின்போது கைதிகளின் சுகநலன்களையும் அமைச்சர் விசாரித்து அறிந்துகொண்டார். (ற)

## கிறிஸ்தவ ஆலயம் மீது கழிவு ஒயில் தாக்குதல்

கொழும்பு, செப்.26

ஹிக்கடுவையிலுள்ள கிறிஸ்தவ கல்வாரித் தேவாலயம் ஒன்றின் மீது கழிவு ஒயில் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது என்று தேவாலயத்துக்குப் பொறுப்பான பங்குத் தந்தை தெரிவித்துள்ளார்.

முன்னதாக 2012ஆம் ஆண்டு இந்த தேவாலயத்துக்கு எதிராக பொதுபல சேனா அமைப்பினர் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்தனர். அப்போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக தேவாலயம் கடும் சேதமடைந்திருந்தது.

இது தொடர்பான வ்ழக்கு நேற்றுமுன்தினம் காலி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே மீண்டும் தேவாலயம் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று தேவாலயத்தின் பங்குத் தந்தை குறிப்பிட்டுள்ளார். (ற)

## ஐ.தே.கவில் விரைவில் இணைகின்றார் டிரான்

கொழும்பு, செப்.26

மௌபிம பத்திரிகை நிறுவனத்தின் உரிமையாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டிரான் அலஸ் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையத் தீர்மானித்துள்ளார் என்று தெரியவருகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மற்றும்பிரதித் தலைவரின் அழைப்பின் பேரிலேயே அவர் இவ்வாறு அந்தக் கட்சியில் இணையவுள்ளார்.





டிரான் அலஸ், ஜனநாயக கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்து வருகிறார். பாடசாலை காலத்தில் இருந்தே சஜித் பிரேமதாஸவின் நெருங்கிய நண்பரான டிரான் அலஸ், ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்டிருந்த தலைமைத்துவ நெருக்கடிக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் வகையில் முயற்சிகளை மேற்கொண்டார். அதன் பயனாக சஜித் மீண்டும் கட்சியின் பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அதற்காக நேரடியாக நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் டிரான் அலஸ் ஆகியோர் மீது ஊடகங்கள் விமர்சனங்களை முன்வைத்திருந்தன.

இவ்வாறான விமர்சனங்களுக்கு மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஐக்கியத்துக்காகப் பாடுபட்டதன் காரணமாக டிரான் அலஸை பொரளை தொகுதியின் அமைப்பாளராக நியமிக்க அந்தக் கட்சியின் தலைவர் தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## ரூ.30 லட்சம் பெறுமதியான சிகரெட்டுகள் சிக்கின

கொழும்பு, செப்.26

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் அனுப்பும் பொதிகள் ஊடாக சட்டவிரோதமாக நாட்டுக்குள் சிகரெட்களைக் கொண்டுவந்து, விற்பனை செய்த இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாணந்துறை வலான மோசடி ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர் ஒருவர் கொட்டாவ பகுதியில் பத்தாயிரம் சிகரெட்டுகளுடன் கைதுசெய்யப்பட்டதாகப் பொலிஸார் குறிப் பிட்டனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, பாணந்துறைப் பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சம் சிகரெட்டுகளுடன் மற்றுமொரு சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். சுமார் 30 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட் கைப்பற்றப்பட்டுள்ளன என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (ற)

## மின்னலால் மாணவர்கள் பாதிப்பு

கொழும்பு, செப்.26

மின்னல் தாக்கத்தால் மாத்தளை விஜய வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் நால்வர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் தற்போது மாத்தளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற)

# சங்கடம்

## சந்திரிகாவின் கருத்தால்

### பாதுகாப்பு அமைச்சு கூறுகின்றது

கொழும்பு, செப்.26

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இராணுவம் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டு அரசியல் நோக்கம் கருதி அரசை சங்கடத்துக்கு உள்ளாக்கும் செயல் என்று குற்றஞ்சாட்டியுள்ளது பாதுகாப்பு அமைச்சு.

நாடு இராணுவத்தின் கைகளுக்குப் போய் விடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது என்று சந்திரிகா அண்மையில் தெரிவித்திருந்தார். பொதுமக்களின் வாழ்க்கையில் இராணுவம் தலையிடுகின்றது என்று கூறியே அவர் இவ்வாறு அச்சம் வெளியிட்டிருந்தார். இன்று வீதிகளைச் சுத்தப்படுத்தல் முதல், பாதையமைப்பு மற்றும் கான்களைச் சுத்தப்படுத்தல் போன்ற பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுகின்றனர். அத்துடன் தமது வீடுகளை ஒட்டுப் பார்ப்பதாகவும் தொலைபேசிகளை ஒட்டுக் கேட்கின்றனர் என்றும் சந்திரிகா மேலும் குறிப்பிட்டிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே பாதுகாப்பு அமைச்சு மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டியுள்ளது. இதுகுறித்து அந்த அமைச்சு மேலும் குறிப்பிடும்போது, "சில அரசியல்வாதிகள், போருக்கு பின்னர் இராணுவத்தின் செயற்பாடுகளை தேவையற்ற வகையில் சித்திரித்துள்ளனர். இலங்கை தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேறக்கோரும் நடவடிக்கை போன்றே சந்திரிகாவின் கருத்தும் அமைந்துள்ளது"- என்று தெரிவித்துள்ளது. (ற)

## 800 ரூபா பணத்துக்காக 103 வயது பாட்டி கொலை

### 13 வயதுச் சிறுவன் புரிந்த கொடூரம்

கொழும்பு, செப்.26

பலாங்கொட - ஏகொட - வலேகொட பிரதேச வீடொன்றில் நுழைந்த சிறுவனொருவன் மேற்கொண்ட தாக்குதலில் குறித்த வீட்டில் இருந்த நூறு வயதைக் கடந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது. உறவினர் எனக் கருதப்படும் குறித்த சிறுவன் வீட்டுக்குள் நுழைந்து வயோதிபப் பெண்ணிடம் 800 ரூபா பணம் கேட்டே அவரைப் பொல்லால் தலையில் தாக்கியுள்ளார். மூன்று தடவைகள் தலையில் பொல்லால் தாக்கப்பட்ட 103 வயதுப் பாட்டி பலாங்கொட வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். தரம் 8இல் கல்வி கற்கும் 13 வயது சிறுவன் ஒருவனே இவ்வாறு பாட்டியை பணம் கேட்டு தாக்கியுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளான் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## பதவி விலகுவார் உதய கம்மன்பில

### நம்பிக்கை வெளியிடுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, செப்.26

ஹரின் பெர்னாண்டோ ஊவா மாகாணத் தேர்தலில் 50 ஆயிரம் வாக்குகளுக்கு மேல் பெற்றால், பதவியிலிருந்து விலகுவேன் என்று உதய கம்மன்பில விடுத்திருந்த சவாலுக்கு அமைய அவர் அடுத்த மாகாண சபைக் கூட்டத்தின் போது பதவியில் இருந்து விலகுவார் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

இதுகுறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பன்னல பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் நிலந்த ஹேரத் தெரிவித்துள்ளதாவது:-



கம்பன்பில

"தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடைபெற்ற பகிரங்க விவாதத்தின்போது, ஹரின் 50 ஆயிரத்துக்கும் மேல் வாக்குகளை பெற்றால் பதவியிலிருந்து விலகுவேன் என்று உதய கம்மன்பில சவால் விடுத்திருந்தார். அவர் பொய் பேசாத பரிசுத்தமான நபர் என்றால், அவர் பதவியில் இருந்து விலகுவார்.

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர்களில் ஒருவரான அவர் பதவியில் இருந்து விலகாது போனால், பொய்யர்களின் கட்சி என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியை அழைக்க முடியும்"- என்று தெரிவித்துள்ளார்.

அமைச்சர் உதய கம்மன்பில விடுத்திருந்த குறித்த விவாதத்தில் அமைச்சர் விஜிதமுனி சொய்சாவும் கலந்துகொண்டிருந்தார். .(ற)

## ஜனாதிபதித் தேர்தலின் பரப்புரைக்கு குழுவை அமைக்கவுள்ளது ஸ்ரீ ல.சு.கட்சி

கொழும்பு, செப்.26

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி திடீரென நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலையொட்டிய பரப்புரை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக தேசிய செயலாக்க் குழுவொன்றை நியமிக்கவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் வெளியாகுமென எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்தக் குழு அமைக்கப்படுமெனத் தெரிய வருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் சுகாதார அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன, மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோருடன் வேறு சிலரும் இந்தக் குழுவில் இடம்பெறவுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்காவிலிருந்து திரும்பிய பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கூடி இந்த விடயம் தொடர்பாக ஆராயவுள்ளதாகவும் சுதந்திரக் கட்சிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் மேற்படி குழுவினர் பரப்புரைப் பணிகளை முன்னெடுத்துச் செல்லுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் திடீர் ஜனாதிபதித் தேர்தலை அரசு நடத்தவுள்ளதாக எதிர்பார்ப்புக்கள் நிலவி வரும் நிலையில் ஊவா மாகாண சபைத் தேர்தலில் பின்னடைவை எதிர்கொண்டதால் தனது தொகுதி அமைப்பாளர்கள் சிலரை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மாற்றியமைத்துள்ளது.

இதேவேளை-திடீர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று இடம்பெறுமாயின் அதனை எதிர்கொள்வதென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (க)

# எங்கே செல்கிறது உலகம்?

உலகிலுள்ள பல நாடுகளில் மக்கள் அன்றாட உணவுக் காக கூட வழி தேடிக்கொண்டிருக்கும் நிலையில் பணத்தை வீணடிப்பதற்காகவே சிலர் வழி தேடிக்கொண்டிருக்கின் றனர். தற்போதுள்ள நடைமுறை பழக்கங் களை பார்த்தால் உலகம் விரைவில் அழியத் தான் வேண்டும் போல் இருக் கின்றது.

பெண்ணொருவர் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிகழ்ச்சிக் காக 20 ஆயி ரம் அமெரிக்க டொலர் (இலங்கை மதிப்பில் 26 லட்சத்து 6 ஆயிரத்து 500 ரூபா) செலவு செய்து புதிய தொரு மார்பை பொருத்தியுள்ளார். அமெரிக்கா வைச் சேர்ந்த ஜெஸ் மீன் எனும் பெண்ணே இவ்வாறு வித்தியாசமானதொரு செயற்பாட் டில் ஈடுபட்டுள்ளார்.

எவ்வளவோ சாதனையைச் செய்த வைத்தியத்துறையினர், இவ்வா றான சத்திரசிகிச்சையைச் செய்ய முடியாது என்று கூறியுள்ளனர். கிட்டத்தட்ட 50 முதல் 60 வரையிலான வைத்தியர் களிடம் குறித்த பெண் சிகிச்சைக்காகச் சென்றுள் ளார். இருந்த போதிலும் வைத்தியர் களுக்கேயான நெறிமுறை களை மீறக்கூடாது என்ற காரணத் தால் இதனை செய்யமுடியாது என்று தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவிலுள்ள சிறந்த வைத் தியொருவரால் 2 வருடகாலமாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை யின் பின்னர் குறித்த பெண்ணுக்கு 3 ஆவது மார்பு பொருத்தப்பட் டுள்ளது. இதனால் ஜெஸ்மீனின் பெற்றோர் இவருடனான தொடர்பைத் துண்டித் துள்ளனர்.

நான்தொலைக்காட்சிநிகழ்ச்சிக் காகவே இவ்வாறு செய்வதற்கு முடி வெடுத் தேன். இதனை ஒரு அதிர்ஷ்ட அங்க மாக நான் நினைக்கின் றேன். பிரபல்யத்தை விரும்பு கின்றேன். எனக்கு ஆண் களுடன் நேரத்தை வீணடிப் பது பிடிக்காது. இவ்வாறான எனது தோற்றம் கவர்ச்சியற்ற தாகவே ஆண்களுக்கு தெரியும். அதனை நான் விரும்புகிறேன் - என்றுள்ளார்.



# அண்ட்ரியாவுக்கு அங்கீகாரம் கொடுத்த அரண்மனை




நடிகை, பாடகியாக இரண்டு முகம் வெளிக்காட்டிய அண்ட்ரியா, தரமணி படத்தில் பாடலுக்கு இசையமைத்து , இசை யமைப்பாளராகவும் தனது மூன்றாவது முகத்தை வெளிப் படுத்தியிருக்கிறார். இதற்கிடையே கமலுடன் விஸ்வரூபம் படத்தில் நடித்த அவர், அதற்கடுத்து விஸ்வரூபம் - 2, உத்தமவில்லன் ஆகிய படங்களிலும் நடித்து வரிசையாக கமலுடன் 3 படங்களில் நடித்த நடிகை என்ற பெயரையும் பெற்றி ருக்கிறார்.

இதுவரை 'ஏ' தர நடிகை என்ற பட்டியலிலேயே இருந்து வந்த அண்ட்ரியா தற்போது சுந்தர்.சியின் அரண்மனை படம் மூலம் 'பி' மற்றும் 'சி' தர ரசிகர்களையும் சென்றடைந்திருக்கிறார்.

அத்தோடு, "திகில் படங்களில் நடிக்காத நான் இந்தப் படத்தில் ஆவேசமான பேய் வேடத்தில் நடித்திருப்பது புதிய அனுபவத்தை எனக்குக் கொடுத்தது. அதனால் இனிமேல் மாறுபட்ட வேடங்களில் நடிப்பதில் கவனத்தைத் திருப்பியிருக்கிறேன்.

அண்ட்ரியா இந்த மாதிரி வேடங்களுக்கெல்லாம் பொருந்து வாரா என்று சந்தர்ப்பம் கொடுக்கத் தயங்கிய இயக்குநர்கள்கூட எனது நடிப்பைப் பார்த்து விட்டு பாராட்டுகிறார்கள்" என்று கூறும் அண்ட்ரியா, இதுவரை எத்தனை படங்களில் நடித்திருந்தாலும் அரண்மனை படம்தான் எனக்கு ரசிகர்கள் மத்தியில் பெரிய அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது - என்கிறார்.

## ரிலாக்ஸா வாசியுங்க

200 பேர்கள் கூடியிருந்த அரங்கத்தில் ஒரு பேச்சாளர் 500 ரூபாய் பணத்தைக் காட்டி "யாருக்கு இது பிடிக்கும்?" எனக் கேட்டார். கூடியிருந்த அனைவரும் தமக்குப் பிடிக்குமென கையை தூக்கினர். பேச்சாளர் "உங்களில் ஒருவருக்கு இந்த 500 ரூபாயைத் தருகிறேன். ஆனால் அதற்கு முன் என்று சொல்லி விட்டு, அந்த 500 ரூபாயைக் கசக்கி சுருட்டினார். பிறகு அதை சரி செய்து "இப்போதும் இதன் மீது உங்களுக்கு இன்னும் விருப்பம் இருக்கிறதா?" என்றார். அனைவரும் கைகளைத் தூக்கினர்.

அவர் அந்த 500 ரூபாத் தாளை தரையில் போட்டு காலால் நசுக்கி அந்த அழுக்கான தாளைக் காட்டி "இன்னும் இதன் மேல் உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா?" என்றார். அனைவரும் இப்போதும் கைகளைத் தூக்கினர்.

கேவலம் ஒரு 500 ரூபாய் தாள் பல முறை கசக்கியும் மிதிபட்டும் அழுக்கடைந்தும், அதன் மதிப்பை இழக்க வில்லை. ஆனால் மனிதர்களாகிய நாம் அவமானப்படும் போதும், தோல்விகளை சந்திக்கும் போதும் மனமுடைந்து போய் நம்மை நாமே தாழ்த்திக் கொள்கிறோம்.

நம்முடைய மதிப்பு என்றும் குறைவதில்லை. நீங்கள் தனித்துவமானவர். இந்த உலகில் உள்ள ஒவ்வொருவருக் கும் ஒவ்வொரு தனித்தன்மை இருக்கும். அதன் மதிப்பு என்றும் குறைவதில்லை. வாழ்க்கை என்ற பயிருக்கு தைரி யமும் தன்னம்பிக்கையும் தான் உரமும், பூச்சிக் கொல் லியும். எனவே தன்னம்பிக்கையை இழக்காமல் வாழுங்கள், என்று சொன்னார்.

# புனித ஏரி





உலகின் மிக சுத்தமான ஏரி நியூசிலாந்தில் உள்ளது. இதனை புனித தலமாகவும் மக்கள் கருதுகின்றனர். நியூசிலாந்தின் தெற்கு தீவில் அமைந்துள்ள நெல்சன் ஏரிகள் தேசிய பூங்காவில் நீல ஏரி அமைந்துள்ளது.

நீல ஏரி, அளவில் பூமரேங் வடிவில் சிறியதாக இருந்தாலும், ஏரியில் இருக்கும் தண் ணீர்தான் உலகத்திலேயே மிகவும் சுத்தமான நன்னீர் என்று கூறப்படுகின்றது. நன்கு காய்ச்சப்பட்ட சுத்தமான நீரைப் போல காட்சி அளிக்கும் இந்த ஏரியில் 80 அடி ஆழம் வரை அதாவது மலை உச்சியிலிருந்து 230 முதல் 260 அடி ஆழம் வரை ஏரியில் உள்ளதை நமது வெறும் கண்களால் காணமுடியும் என்பதே இதன் சிறப்பம்சம்.

நன்கு குளிர்ந்த நிலையில் காணப்படும் இந்த நன்னீர் ஏரியின் வெப்பநிலையானது, 5 முதல் 8 டிகிரி செல்சியஸ் வரை இருக்கின்றது. நெல்சன் தேசிய பூங்காவில் அமைந்துள்ள இந்த நீல ஏரியின் அருகே மலையேற்றம், மீன் பிடித்தல் போன்ற பல பொழுதுபோக்குக்கான அம்சங்கள் அமைந்துள்ளன. ஆண் டுக்கு 700 பேர் மலையேற்றத்துக்காக வந்து செல்லும் ஏரியின் அருகே தங்கும் வசதியும், உணவு வசதியும் பொதுமக்க ளுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நியூசிலாந்தில் வாழும் மாவோரி என்னும் இனக்குழுவினர் இந்த நீல ஏரியினை புனித தலமாகக் கருதுகின்றனர். எனவே, ஏரியில் குளிக்கவும், நீச்சல் அடிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# நவராத்திரி கொண்டாட்டம்

தென்னிந்திய தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஆயுதபூசை அன்று சிறப்புத் திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன. வடகறி, சரபம், கதை திரைக்கதை வசனம் இயக்கம் ஆகிய திரைப்படங்கள் ஒளிபரப்பாக உள்ளன.

அடுத்த வாரம் காந்தி ஜெயந்தி, ஆயுதபூசை என்று விடுமுறை தினங்கள் இந்தியாவில் வரிசையாக வருகின்றன. இந்த நாள்களில் தமிழ் தொலைக்காட்சி அலைவரிசைகளில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாக உள்ளன.

அன்றைய தினம் பல சிறப்புத் திரைப்படங்களும் ஒளிபரப்பாக உள்ளன. அண்மையில் வெளியாகிய புத்தம் புதிய திரைப்படங்களும் ஒளிபரப்பாக உள்ளன.

சீ தமிழில் வடகறி திரைப்படம் ஒக்ரோபர் 3 ஆம் திகதி திரையிடப்படவுள்ளது. கலைஞர் தொலைக்காட்சியில் சரபம் திரைப்படம், ஆயுதபூசையன்று சிறப்புத் திரைப்படமாக ஒளிபரப்பாக உள்ளது. ஆயுதபூசை சிறப்புத் திரைப்படமாக விஜய் தொலைக்காட்சியில் பார்த்தீபன் நடித்த கதை திரைக்கதை வசனம் இயக்கம் ஒளிபரப்பாக உள்ளது.



## ஐம்புலன் அடக்கம்

ஆமையைப் போல் ஐந்து புலன்களையும் அடக்கிய வருக்கு ஒரு பெரிய சுகம் உண்டாகிறது. வெளியிலே கண்டபடி அலைபவனுக்கு வீட்டிலே போய் நிழலில் சற்று நின்றால் மகிழ்ச்சியாக இருக் கும் அல்லவா? அதேபோல புலன்கள் வெளியிலுள்ள விட யங்களில் உழல்வதால் கவலை உண்டாகின்றது. அவை களை உள்ளே திருப்பும் பொழுது ஆனந்தமும், ஆறு தலும் உண்டாகின்றது.




## நச்சின்னு கடி

மூவர் மோட்டார் சைக்கி ளில் போய்க் கொண்டிருக்கிறா கள். அப்போது போக்குவரத்து பொலி ஸார் ஒருவர் கையைக் காட்டி நிறுத்தச் சொல்கின்றார். அப்போது மோட்டார் சைக்கிளில் இருந்த ஒருவர், கோபமாகச் சென்று, "யோவ்! ஏற்கனவே மூன்று பேர் இருந்து போறமே. இதில நீ வேற எங்க இருக்கப் போறாய்? உனக்கு மனசாட்சியே இல்லையா ?" என்று கேட்டான்.



# ஐபோன் 6 எப்படி?



அப்பிள் நிறுவனம் ஒரு வழியாக ஐபோன் 6 ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. பரவலாக கணிக்கப்பட்டது போலவே ஐபோன் 6, சற்றே பெரிய அளவில் ஐபோன் பிளஸ் ஆகியவற்றை இந்த நிறுவனம் அண்மையில் அறிமுகம் செய்துள்ளது. கூடவே அப்பிள் வாட்ச், சொல்போனில் பணம் செலுத்தும் வசதியும் அறிமுகப்படுத்தியுள்ளது. அப்பிள் வாட்ச் அடுத்த ஆண்டு தான் விற்பனைக்கு வருகிறது.

இது வரையிலான ஐபோன்களிலேயே சிறந்ததாக ஐபோன் 6 உருவாக்கப்பட்டுள்ளதாக அப்பிள் நிறுவனம் பெருமிதப்படுகிறது. அப்பிள் அபிமானிகளும் இதை ஏற்றுக் கொண்டுள்ளனர். ஐபோன் 6 மாதிரியை விட, அளவில் பெரிய (விலையும் அதிகம்) ஐபோன் பிளசுக்கு தான் அதிக மதிப்பு இருந் ததாகச் சொல்லப்படுகிறது எது எப்படியோ, ஐபோன் 6 மற்ற ஐபோன்கள் போல தாமத மாக அல்லாமல் சீக்கிரமாகவே சந்தைக்கு வரவுள்ளது.

# அனைவருக்குமான டேப்லெட் தயார்



இந்தியாவின் டேப்லெட் கணினி தயாரிப்பில் ஈடுபட்டுள்ள பினிக் டெக் நிறுவனம் ஒவ்வொருவரின் தேவைக் கேற்ப டேப்லெட் கணினியைத் தயாரித்துள்ளது. சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் மற்றும் தொழில்துறையினர் என ஒவ்வொருவரின் தேவைகளுக்கேற்ப தனித்தனியான டேப்லெட் கணினிகள் தயா ரிக்கப்படுவதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

பினிக் டேப் என்ற பெயரில் அறிமுகமாகும் இவற்றின் விலை இவற்றின் செயற்திறனுக்கு ஏற்ற வகையில் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எக்ஸிகியூடிவ் டேப், கிட்ஸ் டேப், பெண்கள் டேப், விளையாட்டு டேப், முதியவர்களுக்கான டேப் என பல்வேறு செயற்பாடுகளைக் கொண்ட தனித்தனி டேப் லெட்கள் அறிமுகமாகியுள்ளன. அறிமுக சலுகையாக டேப்லெட் கவர், இயர்போன், 3ஜி டொங்கிள் உள்ளிட்டவற்றை அளிப்பதாக இந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

# புதிய தொழில் நுட்பத்தில் ரவுட்டர்



இந்தியாவின் முன்னணி நெட்வோர்க் நிறுவனமான ஸ்மார்ட்லிங்க் நெட்வோர்க் சிஸ்டம் லிமிட்டெட் புதிதாக அடுத்த தலைமுறை தொழில் நுட்பத்திலான டியூயல் பேண்ட் வயர் லெஸ் ரவுட்டர்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஏசி 750 பிராட்பேண்ட் ரவுட்டர்கள் வீடுகள் மற்றும் சிறிய அலுவலகங்களுக்கு மிகவும் ஏற்றது. 2.4 ஜிகாஹெர்ட்ஸ் மற்றும் 5 ஜிகா ஹெர்ட்ஸ் அளவைக் குறிக்கும் இரண்டு தனித்தனி குறிப்பான்கள் இதில் உள்ளன.

இத்தகைய ரவுட்டர்கள் மூலம் அதிக விரைவான மிகப் பெரிய பைல்களை எளிதாக பதிவிறக்கம் செய்யலாம். பயர்வால் பாதுகாப்பு உள்ளிட்ட பன்முக பாதுகாப்பு அம்சங்களை இது உள்ளடக்கியது. இதைக் கையாள்வது எளிது என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.



# புளூடூத் வசதி கொண்ட பூட்டு

நகரங்களில் வசிப்பவர்கள் தங்களது வீட்டுக்கான சாவியை இரண்டு மூன்று என செய்து வைத்துக் கொண்டு ஆளுக்கு ஒன்றாக பயன்படுத்துவார்கள்.

சில நேரங்களில் யாருடைய சாவியாவது தொலைகிற பட்சத்தில் கொஞ்சம் சங்கடமான நிலை உருவாகிவிடும். இந்த நிலையில் இந்தப் பிரச்சினையை தீர்க்க நோக் எனப்படும் புதுவகை பூட்டு வந்துள்ளது.

இந்த பூட்டில் புளூடூத் வசதி உள்ளது. குறிப்பிட்ட கடவுச் சொல்லைக் கொடுத்து அந்த பூட்டை நமது கைத் தொலைபேசியுடன் இணைத்துக் கொள்ளலாம். கைத் தொலைபேசியில் உள்ள புளூடூத்தை இயக்கச் செய்வதன் ஊடாக அந்த பூட்டு திறந்துவிடும்.

# பேஸ்புக்குக்கு இனிக்கட்டணமா?

பயனாிடம் மாதம் தோறும் கட்டணம் வசூலிக்க உள்ளதாக வெளியான செய்தியில் உண்மை இல்லை என்று திட்டவட்டமாக பிரபல சமூக வலைதளமான பேஸ்புக் தெரிவித்துள்ளது. பேஸ்புக் நிறுவனம் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் பயனரிடம் தங்கள் பக்கங்களுக்காக மாதம் பணம் வசூலிக்க உள்ளதாக, நையாண்டிச் செய்திகளை வெளியிடும் இணையதள நிறுவனமான 'நஷனல் ரிப்போர்ட்' செய்தி வெளியிட்டது. மேலும், 'நிறைய யோசனைகளுக்கு பின்னர் இந்த முடிவை எடுத்துள்ளோம். மாதச் சந்தா வசூலிக்க வேண்டியது எங்களது நிறுவனத்துக்கு கட்டாயமாகிவிட்டது. இதனை தற்போது நடைமுறைப்படுத்தாவிட்டால், பேஸ்புக் நாளை இல்லாமல் போகவே வாய்ப்பு உள்ளது' என்ற மார்க் ஸக்கர்பெர்க் குறிப்பிட்டதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டது.

இந்தச் செய்தியை அடுத்து, பேஸ்புக் பயன்படுத்தோவோரிடம் கட்டணம் வசூலிக்கும் திட்டம் இல்லை என்றும், இது குறித்த செய்தி போலியானவை என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பேஸ்புக் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் ஆர்ஸ் டெக்னிக்கா கூறும்போது, எங்களுக்கு பயனரிடமிருந்து தொடர்ந்து இது குறித்து கேள்விகள் வந்துக் கொண்டே இருக்கின்றன. இது ஒரு பொய்ச் செய்தி.

இணையத்தில் வெளியாகும் நையாண் டிச் செய்திகளையும் உண்மைச் செய்திகளையும் மக்கள் பிரித்துப் பார்க்க தெரிந்து கொள்ள வேண்டும் என்றார். இதனிடையே, தங்களது செய்திகள் நையாண்டிக்காகவே வெளியிடப்பட்டவை என்றும், தங்களது இணையத்தளத்தில் இது போன்ற செய்திகள் வருவது சாதாரணம்தான் என்றும் 'நஷனல் ரிப்போர்ட்' தெரிவித்துள்ளது. அத்துடன் இனி, இதுபோன்ற செய்திகளில், பொய்ச் செய்தி என்பதற்கான குறியீடு வழங்க உள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# செல்பீ தொப்பி மூலம் படம் பிடிக்கலாம்

கணினி மற்றும் டேப்லெட் தயாரிப்பில் புகழ்பெற்ற ஏசர் நிறுவனத்தின் பிரிட்டன் பிரிவு செல்பீ தொப்பியை அறிமுகம் செய்துள்ளது.

புகழ்பெற்ற பேஷன் வடிவமைப்பாளர் ஒருவருடன் இணைந்து உரு வாக்கப்பட்டுள்ள இந்த அகண்ட தொப்பியில் இணைக்கப்பட்டுள்ள டேப் லெட்டை கொண்டு அழகான சுய படத்தை எடுத்துக் கொள்ள லாமாம்.

செல்பீ தாக்கத்தின் இன் னொரு அடையாளம், கமரா நிறுவனமான நிக்கான், செல்பீ வசதி கொண்ட கமராவை அறிமுகம் செய்துள்ளது. அதன் புதிய கூல்பிக்ஸ் கமராவை சுயபடம் எடுப்பதற்கான டச்ஸ்கிரீன் வசதி கொண்ட எல்.சி.டி. திரையைக் கொண்டுள்ளது. ஏற்கனவே, கேனானின் பவர்ஷாட் கமராவில் இதேபோல செல்பீ எடுக்கும் வசதி உள்ளது.



# வாகன நெரிசலை காட்டும் கருவி அறிமுகம்

வாகன ஓட்டுனர்களுக்கு இருக்கும் மிகப்பெரிய சிக்கல் வாகன நெரிசல்'எந்த இடத்தில் எப்போது சிக்னல் விழும் என்று தெரியாது.

இந்த நிலையில் காரில் சென்று கொண்டிருக்கும் போதே அடுத்த சிக்னலின் நிலையை சொல்லும் விதமாக புதிய கருவி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருவியை அமெரிக்காவின் விர்ஜினியா கல்வி நிறுவன ஆய்வு மாணவர்கள் கண்டு பிடித்துள்ளார்கள். கையளவு உள்ள இந்தக் கருவியில் திரை ஒன்றும் உள்ளது. இதைக் காரில் பொருத் திவிட்டால், அடுத்தடுத்து உள்ள சிக்னல் குறித்தும், நகரில் எந்தப் பகுதியில் வாகன நெரிசல் என்பதையும் எளிதில் அறிந்து கொள்ளலாம்.



# பயனரின் அந்தரங்கத்தை உளவு பார்க்கிறதா பேஸ்புக் மெசஞ்சர்?

புதிதாக தரவிறக்கம்; செய்யப்பட்டுள்ள பேஸ்புக் மெசஞ்சர் செயலி பயனர்கள் யாரோடு என்ன பேசுகிறார்கள் என்பதை உளவு பார்க்கும் வகையில் மறைமுக ஆணைகள் கொண்டுள்ளதாக இணைய பாதுகாப்பு நிபுணர்கள் சந்தேகிக்கின்றனர்.ஆனால் இதை மறுத்துள்ள பேஸ்புக்கின் செய்தித் தொடர்பாளர், பயனர்களின் அந்தரங்கத்தை காப்பாற்றுவதே எங்களது முதல் குறிக்கோள். மற்ற செயலிகளைப் போலவே, நாங்களும் அதன் பயன்பாட்டை கண்காணித்து, அதற்கேற்றவாறு மேம்படுத்துகிறோம் எனக் கூறியுள்ளார். ஆண்ட்ராய்ட் மொபைல்களில் செயற்படும் பேஸ்புக் மெசஞ்சர், இதுவரை 500 மில்லியன் முறைகளுக்கும் அதிகமாக பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நவீன நகராக முசலி

## திட்டத்தை முன்னெடுப்பதற்கு குழு நியமனம்

மன்னார், செப், 26
மன்னார், முசலி பிரதேசத்தை நவீன நகராக மாற்றியமைக்கும் திட்டத்தை முன்னெடுக்க நகர அபிவிருத்தி அதிகார சபை விசேட குழு ஒன்றை நியமித்துள்ளது.
வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக் குழு தலைவருமான அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கும், நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்குமிடையில் கொழும்பில் இடம்பெற்ற விசேட சந்திப்பை அடுத்தே குறித்த குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.
30 வருட கால உள்நாட்டுப் போர் காரணமாக மிக மோசமாக அழிவுகளைச் சந்தித்துள்ள முசலிப் பிரதேசத்தை நவீன நகராக மாற்றியமைக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பல வருட காலமாக முயற்சித்து வரும் நிலையிலேயே நகர அபிவிருத்தி அதிகார சபையும் தற்போது அமைச்சரின் அந்த வேலைத் திட்டங்களுக்கு உதவ முன்வந்துள்ளது.
நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரால் நியமிக்கப்பட்டிருக்கும் விசேட குழு இன்று வெள்ளிக்கிழமை மன்னார் முசலி பிரதேசத்துக்கு நேரடியாக பயணம் செய்து முசலி நவீன நகரத் திட்டமிடல் குறித்து ஆராய்வதுடன் அது தொடர்பான விரிவான திட்டப் பணிகளிலும் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சந்திப்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பணிப்பாளர், முசலி பிரதேச சபைத் தலைவர் எஹியா பாய் மற்றும் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் இப்ராஹிம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-10)



மன்னார் அஞ்சல் திணைக்கள ஊழியர்கள் இரத்த தானம் வழங்கிய போது....

## அஞ்சல் தினத்தையொட்டி மன்னாரில் இரத்த தானம்

மன்னார், செப். 26
உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு மன்னார் அஞ்சல் திணைக்களத்தில் மன்னார் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ஐ.சின்னப்பு தலைமையில் நேற்றுவியாழக்கிழமைகாலை 9 மணியளவில் இரத்த தான நிகழ்வுகள் இடம் பெற்றது.
குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அஞ்சல் திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 50 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கியுள்ளனர் என மன்னார் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ஐ.சின்னப்பு தெரிவித்தார்.
இதனை விட மன்னாரில் அஞ்சல் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் முனனெடுக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.
மன்னார் மாவட்டத்தில் அஞ்சல் சேவையை மக்கள் மத்தியில் ஊக்குவிக்கும் நடவடிக்கையாக விழிப்புணர்வுக் கருத்தரங்கு, வீதி நாடகம், துண்டுப் பிரசுரங்கள் விநி யோகம், ஊர்வலம், சிரமதானங்கள் ஆகியனவும் முன் னெடுக்கப்படவுள்ளதாக மன் னார் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் மேலும் கூறினார். (த-56)

## போர்ச் சேதம் திரட்டப்பட்டும் இதுவரை இல்லை இழப்பீடு

முல்லைத்தீவு, செப். 26
கடந்த காலப் போரின்போது ஏற்பட்ட சேத விவரங்கள் திரட்டப்பட்டுப் பல மாதங்களாகியும் முல்லை மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீட்டுத் தொகைகள் வழங்கப்படவில்லை மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் போரின்போது ஏற்பட்ட சொத்தழிவு விவரங்கள் அவசர அவசரமாக திரட்டப்பட்டுப் பல மாதங்கள் கடந்தும் இதுவரை இழப்பீட்டுக்கான நிவாரணம் வழங்குவதற்கான ஏது நிலைகள் எதுவும் தென்படவில்லை என முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கூறுகின்றனர்.
போரின்போது முல்லைத்தீவு மாவட்டம் கடுமையாகப் பாதிக்கப்பட்டமையால் போர் இழப்பீட்டுத் தொகையை விரைவில் வழங்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (த-500)

## நீண்ட நாள்களின் பின் கிளிநொச்சியில் மழை

கிளிநொச்சி, செப். 26
கிளிநொச்சி மேற்குப் பகுதி கிரா மங்களில் நேற்று முன் தினம் பிற்பகலில் நீண்ட காலத்துக்குப் பின்னர் கடும் மழை பெய்துள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தில் கடுமையான வறட்சியின் காரணமாக மக்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள நிலையில் நேற்று முன் தினம் பெய்த மழை காரணமாக மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
இரு மணித்தியாலங்கள் வரை இந்த மழை பெய்தமையால் கிளிநொச்சி மேற்கின் பல கிராமங்களில் வெள்ளம் வீதியைக் குறுக்கறுத்து ஓடியது. (த-18)



முல்லைத்தீவு வலயத்துக்குட்பட்ட கள்ளப்பாடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஆஸ்திரேலிய அரசின் உதவித் திட்டத்தின் கீழ் யுனிசெப் அனுசரணையில் கட்டி முடிக்கப்பட்ட வகுப்பறைகள் மற்றும் நிர்வாகப் பிரிவு, கலையரங்கம் போன்றவற்றின் திறப்பு விழா கடந்த 24 ஆம் திகதி பாடசாலை அதிபர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டார். (த-433)

## சமாதான தினம் வவுனியாவில்

வவுனியா, செப். 26
வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியமும், தமிழ் விருட்சம் சமுக ஆர்வலர்கள் அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த உலக அமைதி தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு வவுனியா குட்ஷெட் வீதியில் அமைந்துள்ள கருமாரி அம்மன் ஆலயத்தில் சிறப்பு பூசை வழிபாடுகளுடன் இடம் பெற்றது.
வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத் தலைவரும், இறம்பைக்குளம்நாகபூஷணிஅம்மன் ஆலயபிரதமகுருவுமான சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக் குருக்கள் தலைமையில் இடம் பெற்ற பூசை நிகழ்வுகளில் கருமாரி அம்மன் கோவில் பிரதம குருவும் அந்தணர் ஒன்றியச் செயலாளருமான சிவஸ்ரீ பிரபாகரக் குருக்கள், அந்தணர் ஒன்றியப் பொருளாளர் ராஜ்மோகன் சர்மா, ஆதி விநாயகர் ஆலய பிரதம குருவும் அந்தணர் ஒன்றிய நிர்வாக சபை உறுப்பினருமான சிவஸ்ரீ திவாகர குருக்கள், ஆலய பரிபாலன சபைத் தலைவர் மஞ்சுநாதன் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர். (த-421)

## மன்னாரில் கல்விக் கண்காட்சி

மன்னார், செப் 26
மன்னார் அல்-அஸ்ஹர் ம.வித்தியாலய தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு முதலாவது வருடம் பூர்த்தி யாகும் நிலையில் 'ஈ-ஸ்கோப்-14' என்னும் தொனிப் பொருளில் பிரமாண்டமான கல்விக் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளதாகப் பாடசாலை அதிபர் எம்.வை.மாஹிர் தெரிவித்தார்.
இந்தப் பாடசாலையின் ஆசிரியர்கள், பழைய பாணவர்களின் வழி நடத்தலில் மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட ஆக்கங்கள் கண்காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.
நாளை சனிக்கிழமை முதல் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை கண்காட்சி நடைபெறவுள்ளது.
மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இந்தக் கண்காட்சி இடம் பெறும். (த-56)

## மின் வெட்டால் வர்த்தகர்கள் பெரும் பாதிப்பு



மன்னார்,செப்.26
மன்னார் பிரதேசத்தில் அடிக்கடி மேற்கொள்ளப்படும் மின் வெட்டால் வர்த்தகச் செயற்பாடுகள் மிகவும் பாதிக்கப்பட்டு வருவதாக மன்னார் வர்த்தகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
மன்னார் நகர்ப் பகுதியில் இரு தினங்களுக்கு ஒருமுறை என்ற வகையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், இதனால் வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்புக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளும் பாதிக்கப்படுவதாக மாணவர்கள் தரப்பிலும், பெற்றோர் தரப்பிலும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-415)

## வவுனியா வடக்குப் பிரதேச கலை இலக்கியப் பெருவிழா



வவுனியா, செப். 26
வவுனியா வடக்கு பிரதேச செயலக கலை இலக்கிய பெருவிழா நேற்றுக் காலை நெடுங்கேணி கந்தசாமி ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.
வவுனியா வடக்கு கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் வவுனியா வடக்கு பிரதேச செயலர் க. பரந்தாமன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு காலை 9 மணிக்கு நெடுங்கேணி மகா வித்தியாலயமுன்றிலில் இருந்து பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம்பமாகியிருந்தது.
இதன்போது தமிழர்களின் பாரம்பரிய கலைகள், பொய்க்கால் குதிரை ஆட்டம், கரகாட்டம், வேடன் ஆட்டம், காவடி, கோலாட்டம் என்பவற்றுடன் தமிழ்வீரர்கள் மற்றும் பெரியார்களின் உருவப் படங்கள் தாங்கிய ஊர்தியும் பண்பாட்டுப் பேரணியில் இடம்பிடித்திருந்தது.
மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்ப மான இந்த நிகழ்வில் பல் வேறு கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.
இந்த நிழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கலை பண்பாட்டலுவல்கள் கல்வி அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் திருமதி உசா சுபலிங்கம் கலந்து கொண்டார்.
வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி எஸ். மதிதரன், வவுனியா வடக்குக் கல்வி பணிப்பாளர் திருமதி க. பராசக்தி, வவுனியா தமிழ் சங்கச் செயலாளர் தமிழருவி த. சிவகுமாரன், வவுனியா வடக்கு பிரதேச சபை செயலாளர் க. பிரபாகரன் உட்படப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (த-402)

## சாவகச்சேரி பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள்

தேசிய நூலக ஆவணவாக்கல் சபையினால் நடத்தப்பட்டு வரும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளை இம்முறை10 ஆவது ஆண்டு நிகழ்வாக நடத்துமாறு அறி விக்கப்பட்டதையடுத்து பொது நூலகங்கள் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மாணவர்கள், வாசகர்கள் ஆகியோரிடையே நிகழ்வுகளை நடத்துவதுடன் ஒக்ரோபர் மாதத்தில் அனுஷ்டிக்கப்படும் சர்வதேச சிறுவர் தினம், முதியோர் தினம் ஆகியவற்றையும் உள்ளடக்கக் கூடிய சிறுவர் முதியோர் கௌரவிப்பு நிகழ்வுகளையும் பொது நூலகங்கள் நடத்தவுள்ளன.

இதன் பிரகாரம் சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழிப் பொது நூலகத்தினர் எதிர் வரும் முதலாம் திகதி பி.ப. 3 மணிக்கு சர்வதேச சிறுவர் தினம், சர்வதேச முதியோர் தினம் ஆகியவற்றை அனுஷ்டிக்கும் வகையில் சிறுவர்கள், முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை நூலக மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

நாவற்குழி உப அலுவலகப் பொறுப்பதிகாரி நா.தங்கவேல் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு முதன்மை விருந் தினராக பிரதேச சபைத் தலைவர் இ.துரைராஜா கலந்து கொள்வார். (த-9)

## குப்பை கொட்டுவதற்கு இடம் தேடும் நல்லூர் பிரதேச சபை

யாழ்ப்பாணம், செப்.26

குப்பைகளைக் கொட்டுவதற்காக மாற்று இடம் ஒன்றைத் தேடிக் கொண்டிருப்பதாகவும், இது தொடர்பாக மாகாண சபையுடனும் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையுடனும் தொடர்பு கொண்டபோதும் கல்லுண்டாய் பகுதியில் குப்பைகளைக் கொட்ட வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை இன்னமும் அனுமதிக்கவில்லை எனவும் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

எனினும் இது தொடர்பாகத் தொடர்ந்தும் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்தப் பிரயத்தனப்படுவதாகவும், பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களை உணர்வதாகவும், பொதுமக்கள் கூடியவரை தற்போதைய நெருக்கடி பற்றிச் சிந்தித்து ஒத்துழைப்புத் தருமாறும் அவர் மேலும் கூறியுள்ளார்.

நல்லூர் பிரதேச சபைப் பகுதியில் குப்பைகளைச் சேகரிக்க முடியாதுள்ளது. குப்பைகளைக் கொட்டுவதற்குத் தகுந்த இடம் ஒன்றும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் பிரதேச சபையின் பல்வேறு பகுதிகளிலும் குப்பைகள் தேங்கி நோய்த் தாக்கங்களை உண்டு பண்ணும் அளவுக்குச் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகவும் பொதுமக்கள் பலர் 'உதயனு'க்குத் தொலைபேசியூடாக தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

இது விடயமாக நேற்று வியாழக்கிழமை பிரதேச சபைத் தலைவரிடம் தொடர்பு கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (த-7)

## புங்குடுதீவு மாணவர்களுக்கு போத்தல்களில் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம்,செப்.26

புங்குடுதீவு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஐந்து லீற்றர் அளவு கொண்ட குடிதண்ணீர் போத்தல்கள் நேற்றுமுன்தினம் புதன் கிழமை வழங்கப்பட்டது.

கொழும்பு பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகளின் உதவியுடன் ஹரித்தாஸ் நிறுவனம் இவற்றை வழங்கியது.

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ், ஹரித்தாஸ் நிறுவன இயக்குநர் வணபிதா ஜாவிஸ் அடிகள் ஆகியோர் மாணவர்களுக்கான குடிதண்ணீர் போத்தல்களை வழங்கி வைத்தனர். (த-7)



சட்டமா அதிபர் பாலித பெர்ணான்டோ வடபகுதிக்குப் பயணம் மேற்கொண்டு நேற்று யாழ். மேல்நீதிமன்றுக்கு வந்தார். அங்கு யாழ். மாவட்ட நீதிபதிகள், சட்டத்தரணிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அவருடன் அவரது செயலாளர் மற்றும் அரச சட்டத்தரணிகள் மூவரும் வந்திருந்தனர். (த-4)

# பற்றைக் காணிகளுக்கு செலுத்துவீர்கள் தண்டம்

### உள்ளூராட்சிச் சபைகள் அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.26

யாழ்.மாவட்டத்தில் டெங்கு பரவுவதற்கு ஏதுவான நிலையில் காணப்படும் பராமரிப்பற்ற - கைவிடப்பட்ட காணிகளைத் துப்புரவு செய்து அதற்கான செலவை அவற்றின் உரிமையாளர்கள் அல்லது பாதுகாவலர்களிடம் அறவிடுவதற்கு உள்ளூராட்சிச் சபைகள் தீர்மானித்துள்ளன.

எனவே அவ்வாறான காணிகளை உரிமையாளர்கள் அல்லது பாதுகாவலர்கள் உடனடியாகத் துப்புரவு செய்யுமாறு இறுதி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணிகளைத் துப்புரவு செய்வதற்கு ஏற்படும் செலவுத் தொகையைச் சோலை வரியுடன் சேர்த்து அறவீடு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள் ளது.

டெங்கு நோயின் தாக்கம் யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ளதை அடுத்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மாவட்டம் முழுவதும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பல இடங்களில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் காணிகளில் டெங்கு பரவக் கூடிய ஏதுநிலை உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உரிய பராமரிப்பு இல்லாமல் பற்றைக் காடுகளாகக் காணப்படும் இந்தக் காணிகளை உடனடியாகத் துப்புரவு செய்து டெங்குத் தொற்று ஏற்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு உள்ளூராட்சிச் சபைகள் கோரிக்கை விடுத்த போதும் குறித்த காணிகளின் உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் இது குறித்து அசண்டையீனமாக இருந்து வருகின்றனர்.

இதனை அடுத்தே குறித்த காணிகளைத் தமது பணியாளர்களைக் கொண்டு துப்புரவு செய்துவிட்டு அதற்கான செலவைக் காணி உரிமையாளர்களிடம் சோலை வரியுடன் சேர்த்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர எல்லைப் பகுதியில் இவ்வாறு அடையாளப்படுத்தப்பட்ட 132 காணிகளில் 67 காணிகள் மாநகர சபையால் துப்புரவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்கான செலவு சோலைவரியுடன் அறவிடப்படவுள்ளது என்றும் ஏனைய காணிகளை இரண்டு வாரங்களுக்குள் உரிமையாளர்கள் துப்புரவு செய்துவிட வேண்டும் எனவும் மாநகர சபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

அத்துடன் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் உள்ள பராமரிப்பற்ற காணிகளையும் இவ்வாறு துப்புரவு செய்வதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நேற்று இடம்பெற்ற சபையின் சுகாதாரக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நகர சபையினால் அறிவித்தல் வழங்கப்பட்டும் இதுவரை துப்புரவு செய்யப்படாத காணிகளுக்கு இறுதி அறிவித்தல் ஒட்டுவதெனவும், அதன் பின்னர் நகர சபை அதனைப் பொறுப்பெடுத்துத் துப்புரவு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (த-7-9)

## மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கிறது வலி. கிழக்கு பிரதேச சபை

அச்சுவேலி, செப்.26

வலி. கிழக்குப் பிரதேச சபை மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதற்கான கூட்டங்களைக் கிராம அலுவலர் பிரிவு வாரியாக நடத்தவுள்ளது.

கூட்டங்கள் இந்த மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 13ஆம் திகதி வரை 17 தினங்களுக்கு நடத்தப்படவுள்ளன.

கிராம அலுவலர் பிரிவு வாரியாக குறித்து ஒதுக்கப்பட்ட தினங்களில்பிற்பகல்3மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது.

மக்கள் பங்கேற்ற அபிவிருத்தித் திட்ட வேலைகள் மக்களின் விருப்பத்துக்கு அமைய தெரிவு செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவிருப்பதால் பொதுமக்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொண்டு தமது விருப்பங்கள் முன்னுரிமைகளை உரிய முறையில் தெரிவிக்குமாறு பிரதேச சபையின் செயலாளர் எஸ்.குணாளன் அறிவித்துள்ளார்.

மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரித்தலுக்கான கூட்டம் நடைபெறும் தினங்களதும் இடங்களதும் விவரம் வருமாறு:-

பத்தமேனி கிராம அலுவலர் பிரிவு, 27ஆம் திகதி சனிக்கிழமை இளங்கதிர் சனசமூக நிலைய மண்டபத்தில், அச்சுவேலி வடக்கு கிராம அலுவலர் பிரிவு, 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை- கதிரொளி சனசமூக நிலையத்தில், தம்பாலை, கதிரிப்பாய் கிராம அலுவலர் பிரிவு, 29 ஆம் திகதி திங்கட்கிழமை -ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில், சிறுப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர் பிரிவு, 29 ஆம் திகதி திங்கட்கிழமை- சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலையில், அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் பிரிவு, 29ஆம் திகதி திங்கட்கிழமை- பிரதேச சபை அச்சுவேலி உப அலுவலகத்தில், புத்தூர் வடக்கு கிராம அலுவலர் பிரிவு, 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை- புத்தூர் மெதடிஸ் த மிஷன் பாடசாலையில், இடைக்காடு கிராம அலுவலர் பிரிவு, அடுத்த மாதம் 1ஆம் திகதி புதன்கிழமை மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையத்தில், சிறுப்பிட்டி மேற்கு கிராம அலுவலர் பிரிவு, 1ஆம் திக்தி புதன்கிழமை சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலையத்தில், புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் பிரிவு, 1ஆம் திகதி புதன்கிழமை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில்.

அச்சுவேலி மேற்கு கிராம அலுவலர் பிரிவு, 2 ஆம் திகதி வியாழக்கிழமை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில், நவக்கிரி கிராம அலுவலர் பிரிவு, 2ஆம் திகதி வியாழக்கிழமை நவக்கிரி அமெரிக்க மிஷன் பாடசாலையில்.

நீர்வேலி தெற்கு கிராம அலுவலர் பிரிவு, 2ஆம் திகதி வியாழக்கிழமை ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில், வளலாய் கிராம அலுவலர் பிரிவு, 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில், அச்செழு கிராம அலுவலர் பிரிவு 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை -அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில், இருபாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவு, 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை கலைவாணி சனசமூக நிலையத்தில், ஆவரங்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவு, 4ஆம் திகதி சனிக்கிழமை ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாசாலையில், நீர்வேலி வடக்கு கிராம அலுவலர் பிரிவு, 4ஆம் திகதி சனிக்கிழமை காமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்தில், உரும்பிராய் மேற்கு கிராம அலுவலர் பிரிவு 4ஆம் திகதி சனிக்கிழமை திருக்குமரன் சனசமூக நிலையத்தில், வாதரவத்தை கிராம அலுவலர் பிரிவு, 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விக்கினேஸ் வரா வித்தியாலயத்தில், இருபாலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவு, 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கலைவாணி சனசமூக நிலையத்தில், ஆவரங்கால் மேற்கு கிராம அலுவலர் பிரிவு, 6 ஆம் திகதி திங்கட்கிழமை புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில், நீர்வேலி மேற்கு கிராம அலுவலர் பிரிவு 6ஆம் திகதி திங்கட்கிழமை இராசன் கடை மண்டபத்தில், உரும்பிராய் வடக்கு கிராம அலுவலர் பிரிவு, 6ஆம் திகதி திங்கட்கிழமை கணேசா சனசமூக நிலையத்தில், கல்வியங்காடு கிராம அலுவலர் பிரிவு, 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கலைவாணி சனசமூக நிலையத்தில், உரும்பிராய் தெற்கு கிராம அலுவலர் பிரிவு, 8ஆம் திகதி புதன்கிழமை உரும்பிராய் கிராம அபிவிருத்திச் சங்கத்தில், கோப்பாய் தெற்கு கிராம அலுவலர் பிரிவு, 9ஆம் திகதி வியாழக்கிழமை மாதா கோயில் மண்டபத்தில், உரும்பிராய் கிழக்கு கிராம அலுவலர் பிரிவு, 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லப்பா சனசமூக நிலையத்தில், கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவு 11 ஆம் திகதி சனிக்கிழமை வெள்ளெரு பிள்ளையார் சனசமூக நிலையத்தில்.

ஊரெழு கிராம அலுவலர் பிரிவு, 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முத்தமிழ் சனசமூக நிலையத்தில், கோப்பாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவு 13ஆம் திகதி திங்கட்கிழமை கண்ணகை அம்மன் சனசமூக நிலையத்தில். (த-1)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரிசி விலையேற்றம் தொடர்ந்தால் என்னதான் செய்யப்போகிறோம்?

அரிசி மற்றும் நெல்லை வைத்திருக்கும் ஆலை உரிமையாளர்கள் மற்றும் விற்பனை முகவர்கள் தமது கையிருப்பு விவரங்களை உடனடியாக வெளியிடவேண்டும் என்று யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலர் தனசேகரம் வசந்தசேகரன் அறிவித்திருக்கிறார். அப்படிச் செய்யத் தவறுவோரிடமிருந்து கைப்பற்றப்படும் அரிசி மற்றும் நெல் என்பன அரசுடைமையாக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.
திடீர் என்று இந்த அறிவிப்பு வெளியாகி இருப்பதற்குப் பின்னணி உண்டு. சந்தையில் அரிசியின் விலை கட்டுக்கடங்காமல் அதிகரித்து வருகின்றது. கடந்த சில வாரங்களில் அதன் விலை 30 ரூபாவுக்கும் மேல் அதிகரித்துச் சென்றுள்ளது. வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் ஒரு கிலோ அரிசி 100 ரூபாயை எட்டியிருக்கிறது. போர்க் காலத்தில் கூட அரிசி விலை இந்தளவுக்கு எகிறியதில்லை.
ஆறு மாதங்களுக்கு முன்னர் நிலைமை தலைகீழாக இருந்தது. கடந்த மார்ச் மாதத்தில் 50 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை, ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்திற்கு கொழும்பு அன்பளிப்புச் செய்திருந்தது. இன்றோ அரிசி விலையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக ஒரு லட்சம் மெட்றிக் தொன் அரிசியை கொழும்பு இறக்குமதி செய்திருக்கிறது. ஆனாலும் விலையேற்றம் நின்றபாடில்லை.
2013ஆம் ஆண்டில் 50 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை கொழும்பு ஏற்றுமதி செய்ததன் மூலம் 6 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டியிருந்தது. அந்த வருடத்தில் இலங்கையின் மொத்த நெல் உற்பத்தியின் அளவு 4.6 மில்லியன். கடந்த சில வருடங்களாகவே நெல் உற்பத்தி மட்டம் 5 விழுக்காடுகளால் தொடர்ந்து அதிகரித்து வந்திருக்கின்றது. அப்படி இருந்தாலும் இன்று சந்தையில் அரிசி தாராளமாக இல்லை. அதன் விலை வானுயரப் பறக்கிறது.
வறட்சிதான் இதற்கான முதன்மைக் காரணம் என்கிறர்கள். அத்தோடு சில அரிசி ஆலை உரிமையாளர்களும் விற்பனை முகவர்களும் நெல்லையும் அரிசியையும் பதுக்கிவிடுவதும் அதன் விலை ஏற்றத்துக்குக் காரணம் என்கிறார்கள். போதாக் குறைக்கு மதுபானங்களின் உற்பத்திக்கும் அதிகளவில் நெல் கொள்முதல் செய்யப்படுவதும் தட்டுப்பாட்டுக்கு ஒரு காரணம் என்கிறார்கள்.
காரணம் என்னவாக இருந்தாலும், சந்தையில் அரிசி வாங்கக்கூடிய விலையில் இல்லை. இப்போதே இப்படி என்றால், இனிவரும் 6 மாத காலத்திற்கு நிலைமை இன்னும் மோசமாகிப்போய்விடும். கடந்த சிறுபோக விளைச்சலும் நீரின்றிப் பாதிப் படைந்து போனதால், மேலும் தட்டுப்பாட்டையும் விலையேற்றத்தையும் தவிர்க்க இயலாது போய்விடும்.
இத்தகைய சூழ்நிலையில், ஏழை எளிய மக்களின் நிலைமை என்ன? அன்றாடம் உழைத்து கால் வயிற்றை நிரப்புவதற்கு அரிசியையே முதன்மையாக நம்பியிருக்கும் குடும் பங்கள் என்ன செய்யும்? அதிலும் குறிப்பாகப் போரால் பாதிக்கப்பட்டு, தங்கள் வாழ்வை மீளக் கடியெழுப்பப் போராடி வரும் வடக்கு - கிழக்கு மக்களின் நிலைமை என்ன? இதனைச் சமாளிப்ப தற்கு - எதிர்கொள்வதற்கு - மாகாண அரசுகள் என்ன செய்யப்போகின்றன? வருமானம் ஈட்டும் வழியும் அற்றிருக்கும் அவர்களுக்கு யார் நிவாரணம் கொடுக்கப்போகிறார்கள்? நீர்ப் பற்றாக்குறை காரணமாக வன்னியில் வயல் நிலங்களில் இப் போது மாற்றுப் பயிர்ச் செய்கை ஊக்குவிக்கப்பட்டுவரும் நிலையில், குறைந்தபட்சம் சாப்பாட்டுக்கான அரிசிக்கு என்ன செய்வது?
இந்தத் தட்டுப்பாட்டுக்கும் விலையேற்றத்துக்கும் வறட்சி மட்டுமேதான் காரணமா? இல்லையேல், போதிய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையின்மையும் காரணமா?
உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் பலவுள்ளன. தேவையான பொறிமுறைகள் விடக்கில் ஏற்படுத்தப்படுவதன் அவசியமும் உள்ளது. இது குறித்து மாகாண அரசு அக்கறை எடுக்க வேண்டும்.

# சீனா குறித்து எச்சரிக்கை தேவை

மூலம்: மவ்பிம -
தமிழில் வீ.எஸ்.ரி.

இன்றைய அரசை ஆட்சியிலிருந்து அகற்ற அமெரிக்காவும், அதன் தலைமையிலான மேற்குலக நாடுகளும் சதி செய்வதாக மஹிந்த தலைமையிலான அரசு குற்றஞ்சாட்டி வருகிறது.
அரசின் ஆட்சி அதிகாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் அமெரிக்காவுக்கோ, மேற்குலக நாடுகளுக்கோ என்ன இலாபம் கிட்டி விடப் போகிறது என்பது கேள்விக்கு உரியதொன்றே. ஒரு வகையில் ஐ.தே.கட்சியை ஆட்சி அதிகாரத்தில் இருத்த அமெரிக்கா விரும்புவதாகக் கொண்டாலும், ஐ.தே.கட்சி அரசு ஆட்சியில் இருந்த காலகட்டங்களில் அதனால் அமெரிக்கா என்ன இலாபத்தை ஈட்டிக் கொண்டது?
இது இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்புகள் குறித்த விடயம் தொடர்பான நிபுணரொருவரின் கருத்து. அவரது கருத்திலும் உண்மை உள்ளது. இலங்கையின் ஏற்றுமதிகளில் ஆடை உற்பத்திகள் உட்படப் பெருமளவானவற்றை அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளே கொள்வனவு செய்துள்ளன. அந்த நாடுகள் அவற்றின் இறக்குமதியை அந்த நாடுகள் நிறுத்திக் கொண்டால் அதனால் அவை பாதிப்பு அடையப் போவதில்லை. பெரும் பாதிப்பு இலங்கைக்கே. ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் அமெரிக்கா இலாபமீட்டத்தக்க நாடுகள் வேறு பல உள்ளன. குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அவற்றுள் முக்கியமானவை. அத்தகைய மாற்றத்தின் மூலம் அமெரிக்காவுக்குச் சவாலாய் அமைந்துள்ள இஸ்லாமிய தீவிரவாதிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகளை அழித்தொழிக்க அமெரிக்காவுக்கு வாய்ப்புக் கிட்டும். அதேபோன்று மத்திய கிழக்கு நாடுகள், பிலிப்பைன்ஸ், லத்தீன் அமெரிக்க நாடுகள் என்பவற்றின் முக்கியத்துவம் காரணமாக அந்த நாடுகளின் அரசுக்களை மாற்றியமைக்க அமெரிக்கா பில்லியன் கணக்கில் டொலர்களைச் செலவிடப் பின் நிற்காது. அதனால் அமெரிக்காவுக்கு நட்டமேதும் விளையாது. ஒரு வகையில் அது அமெரிக்காவுக்கு முதலீடு போன்றது. அதேவேளை - இலங்கை அரசில் மாற்றம் ஏற்படுத்துவதற்காக நிதியைச் செலவிடுவதால் அமெரிக்காவுக்கு எந்தவித பிரயோசனமும் கிடையாது.

### அதிகார மாற்றம் யாருக்கு அவசியம்

அவ்வாறானால் இலங்கையில் அரசை மாற்றுவதற்கான தேவை எவருக்கு உள்ளதென்பது குறித்து மஹிந்தவின் அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். உண்மையில் இன்று இலங்கையில் அதிகார மாற்றம் குறித்து அதிக அளவில் குழப்பமடைய வேண்டிய நாடு சீனாவே. ஏனெனில் சீனா இன்றுவரை இலங்கையில் மேற்கொண்டுள்ள முதலீடு, வழங்கியுள்ள கடன், ஆரம்பித்துள்ள வேலைத்திட்டங்களின் பெறுமதி கணக்கிட இயலாததொன்று. சீனாவுக்கு எதிரான அரசொன்று அமையுமானால் அப்பெருந்தொகை நிதி அத்தனையும் தண்ணீரில் போட்ட பணம் போன்று கைக்குத் திரும்பப் போவதில்லை. இதன் காரணமாக எந்தச் சூழ்நிலையிலும் தமது அரசை சீனா கைவிட மாட்டாதென மஹிந்தவின் அரசு நம்புவதாகத் தோன்றுகிறது.
இதேபோன்றுதான் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் தாம் பிரதமராகப் பதவி வகித்த 1960 - 65 ஆண்டுகள் காலப் பகுதியில் சீனாவுடன் நெருங்கிச் செயற்பட்டார். 1963 ஆம் ஆண்டில் சீனாவுக்கும் - இந்தியாவுக்கும் இடையில் போர் ஏற்பட்டவேளை அதனைத் தடுத்து நிறுத்தவென அதற்கான மத்தியஸ்த யோசனைகளுடன் சிறிமாவோ சீனாவுக்குச் சென்றிருந்தார். சீனாவில் அவரது அந்த முயற்சிக்கு வரவேற்பு இருந்த போதிலும், அவரது சமாதான யோசனைகள் இந்தியாவுக்குப் பாதிப்பானவை எனவும், அவை சீனாவுக்கும் பக்கச்சார்பானவை எனவும் இலங்கை அரசியலரங்கில் விமர்சிக்கப்பட்டன. தமது சமாதான யோசனைகள் மூலம் சிறிமாவோ இந்தியாவைப் பகைத்துக் கொள்ளப் போவதாக அவ்வேளைய எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி கண்டனம் தெரிவித்தது.
சிறிமாவோ இவ்விதம் சீனாவுடன் நெருங்கிச் செயற்பட முனைந்தமையை எதிர்த்து பௌத்த மத பீடங்களையும் தம்முடன் இணைத்துக் கொண்டு ஐ.தே.கட்சி வீதியில் இறங்கிப் போராட்டம் மேற்கொண்டது. 1965 ஆம் ஆண்டில் சிறிமாவோ வின் அரசு அதிகாரத்தை இழக்க ஐ.தே.கட்சி முன்னெடுத்த சீன விரோதப் போக்கு பெருமளவில் கைகொடுத்தது. இதன் காரணமாக 1965 ஆம் ஆண்டில் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஐ.தே.கட்சி அரசுடன் சீன அரசு நல்லுறவைக் கடைக் கொள்வதைத் தவிர்த்தே வந்தது.

### சீனா குறித்து சிறிமாவோ சந்தேகம்

1970 ஆம் ஆண்டில் ஐ.தே.கட்சி அரசு, பதவியிழந்து, மீண்டும் சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டு முன்னணி அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டதும் சீனா, இலங்கை அரசுடன் மீண்டும் நெருக்கமாகச் செயற்பட ஆரம்பித்தது. சீனாவுடனான உறவை மிக நெருக்கமாக வளர்த்துக்கொண்ட சிறிமாவோ, சீனா தனது அரசுக்குப் பாதுகாவலனாகச் செயற்படுமென எண்ணினார். ஆனால் 1971 ஆம் ஆண்டின் ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது, தாம் தமது அரசின் பாதுகாவலன் என நம்பிய சீனாவின் நிலைப்பாடு குறித்து சிறிமாவோவுக்குச் சந்தேகம் எழுந்தது. ஏனெனில் ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்கியொடுக்க அவர் வெளிநாடுகளின் உதவியைக் கோரிய வேளையில், இலங்கை அரசால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட அமெரிக்கா உட்பட பல வெளிநாடுகள் இலங்கை அரசுக்கு உதவ முன்வந்த போதும், சீனா மட்டும் உதவியளிக்கப் பின்னடித்தமை சிறிமாவோ வின் மனதில் சீனா மீதான சந்தேகத்தை அதிகரிக்க வைத்தது. அதுவுமன்றி அந்த வேளையில் சீனாவின் ஆயுதக் கப்பலொன்று கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந் தமை சிறிமாவோவின் சீனா குறித்த சந்தேகம் அதிகரிக்க வழி வகுத்தது. தன்சானியாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் கப்பல் எனக் கூறப்பட்டபோதிலும், ஜே.வி.பியினரின் கிளர்ச்சி இடம்பெற்ற வேளையில் அந்த ஆயுதக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தமை சிறிமாவோ அரசின் சந்தேகத்தை மேன் மேலும் அதிகரிக்க வைத்தது. அது குறித்து இலங்கை அரசு ஆராய முற்பட்டவேளையில் அந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை விட்டு வெளியேறிச் சென்று விட்டது. அதேவேளை ஜே.வி.பியினரின் கொள்கை நிலைப் பாடு மாஓசேதுங், கிம் இல் சுன் மற்றும் சேகுவேரா ஆகி யோரின் கொள்கை நிலைப்பாட்டை அடியொற்றி அமைந் திருந்தமை தெளிவாகியது. அந்த வேளையில் இலங்கைக் கான வடகொரிய தூதராலயம் ஜே.வி.பி. கிளர்ச்சியாளர் களுக்கு உதவுவதாக உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அந்தத் தூதராலயத்தை மூடி விடுமாறு சிறிமாவோ உத்தரவிட்டார். நான்கு இந்திய கடற்படைக் கப்பல்கள் இலங்கைக் கடற்படையினருடன் இணைந்து கொழும்புத் துறைமுகத்திலிருந்து இரகசியமாக வெளியேறிச் சென்று விட்ட சீன ஆயுதக் கப்பலைத் தேடிக் கண்டு பிடிக்க முயன்றன. இதனால் குழப்பத்துக்கு உள்ளான சீனத் தலைவர் சூ என் லாய், சிறிமாவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் இலங்கை-சீனா நாடுகளுக்கு இடையேயான் உறவைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் ஜே.வி.பி. கிளர்ச்சியை முறியடிப்பதில் சிறிமாவோ அரசு பெற்ற வெற்றியைப் பாராட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அது மட்டுமன்றி வட்டியின்றி 350 மில்லியன் ரூபா கடனை இலங்கைக்கு வழங்குவதாகவும் சீனத் தலைவர் குறிப்பிட்டிருந்தார். இத்தனைக்கும் ஜே.வி.பி. கிளர்ச்சி சிறிமாவோ அரசால் முறியடிக்கப்பட்டதன் பின்னரே சீனத் தலைவரின் அந்த அறிவிப்பு வெளியாகியிருந்தது.
இந்தச் சம்பவத்தை அந்த வேளையில் வயதில் இளைய நாடாளுமன்ற உறுப்பினராக அரச தரப்பில் செயற்பட்டு வந்த மஹிந்த மறந்திருக்க முடியாது. அண்மையில் இலங்கைக்கு சீன ஜனாதிபதி பயணம் மேற்கொண்டிருந்தவேளை, தமதும் தமது அரசினதும் பாதுகாவலனாக சீனா செயற்படுமென மஹிந்த மகிழ்ச்சி அடைந்திருக்கக் கூடும்.

### சீனாவின் இராஜதந்திரத் திட்டம்

வடகொரியாவின் கிம் ஜோன் உன் அந்நாட்டின் அதிகாரத்தைக் கையேற்ற வேளை இதே விதத்தில் தான் சீனா குறித்து சிந்தித்தார். அவரது பாதுகாவலர் போன்றே சீனாவும் செயற்பட்டது. ஆனால் அவர் அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகளைப் பகைத்துக் கொண்டதால் அவருடைய அதிகாரம் ஆட்டம் காண்பதை சீனா உணர்ந்து கொண்டது. அதனைப் பயன்படுத்தி அமெரிக்கா வடகொரிய ஆட்சியில் தலையிட்டால் வடகொரியாவில் தான் மேற்கொண்டுள்ள முதலீடுகள் அனைத்தையும் இழக்க நேருமென்பதை சீனா உணர்ந்து கொண்டது. எனவே அமெரிக்கா இந்த விடயத்தில் தலையி டுவதற்கு முன்னர் தாம் முந்திக் கொண்டு ஏற்கனவே மக்களது வெறுப்பைச் சம்பாதித்துள்ள கிம்யோன் உன்னைப் பதவி யிலிருந்து விரட்டி விட்டு தமக்கு ஆதரவாக இருக்கத்தக்க அவரது மூத்த சகோதரர் கிம் யோன் நாமிடம் பதவியைக் கையளிக்க சீனா திட்டமிடுகிறது. தற்போது கிம் யோன் நாம் சீன அரசின் பாதுகாப்பில் சீனத் தலைநகர் பீஜிங்கில் வாழ்ந்து வருகிறார். அவரை வட கொரியாவின் தலைவராக்கி, அவரது சகோதரரும் தற் போதைய தலைவருமான கிம்யோன் உல்லை சீனாவுக்குக் வரவழைத்து அரசியல் புகலிடம் வழங்க சீனா திட்டமிட்டு வருகிறது. அப்படிச் செய்வதன் மூலம் அமெரிக்கா வடகொரியாவில் தலையிடாது தவிர்த்துக் கொள்வதே சீனாவின் இராஜதந்திரத் திட்டமாகும். அமெரிக்காவும் ஏனைய நாடுகள் விடயத்தில் இத்தகைய போக்கையே கடைக்கொள்வது வழக்கமானதொன்று. பிலிப்பைன்ஸிலும் பாகிஸ்தானிலும் அமெரிக்கா இத்தகைய நடைமுறையை ஏற்கனவே கடைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மஹிந்த அரசுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், எதிர்காலத்தில் மஹிந்த அரசு மேன்மேலும் பின்னடைவு கண்டு அரசு வீழ்ச்சியுறும் சமிக்ஞை தென்படுமானால் சீனா மேற்குறிப்பிட்ட விதத்திலான நடவடிக்கையை மேற்கொள்ளச் சாத்தியமுண்டா?
அது குறித்துத் தற்போது எதுவும் எதிர்வு கூறிவிட இயலாது. ஆனால் ஒன்று. மஹிந்த வெளிப்படையான தனது எதிரிகளை விட, புரிந்து கொள்ள முடியாத கபடத்தனமான நண்பர்கள் குறித்து அவதானமாக இருப்பது நல்லது.


மவ்பிம
பத்திரிகையிலிருந்து
சரா

# ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் சாணக்கியமும் நரித்தந்திரமும்

டட்லி சேனாநாயக்கா என்றால் ஞாபகத்துக்கு வருவது டெடிகம தேர்தல் தொகுதிதான். அவரது திடீர் மறைவுக்குப் பின்னர் டெடிகம தொகுதி வெறுமையாகிப் போனதோடு ஐக்கிய தேசியக் கட்சியும் நல்லதொரு தலைவரை இழந்திருந்தது. கட்சியின் அடுத்த தலைவர் ஜே.ஆர். என்று அறிந்ததும். அன்றைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்கு அது வேம்பாகக் கசந்தது. தந்திரசாலியான ஜே.ஆர். தனது தலைமைத்துவத்தையும் பலப்படுத்திக் கொண்டு கட்சியையும் பலப்படுத்திக் கொண்டால் அது தமக்குப் பேராபத்தாகவே முடியுமெனச் சிந்தித்த அரசு ஜே.ஆர். தலைமையை ஆட்டம் காணச் செய்து கட்சியையும் சிதைத்து விடுவதற்குக். கங்கணம் கட்டிக் கொண்டது.

**டெடிகமவில் சதித்திட்டம்**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போன்றே பல்வேறு கட்சிகள் கொண்ட பொதுசன ஐக்கிய முன்னணி அரசின் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சூழ்ந்து கொண்ட அந்தக் கட்சிகளின் தலைவர்கள் ஜே.ஆரையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் வீழ்த்திவிடும் யோசனைகள் பலதையும் முன் வைத்தனர். அந்த யோசனைகள் இன்றைய அரசியல் வன்முறைகளுக்குச் சற்றுகுறைந்தவைகள் அல்ல. எப்படியும் டெடிகம தொகுதிக்கு இடைத் தேர்தலொன்றை நடத்தியே ஆக வேண்டியுள்ளதால் அந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியடைவதற்கு ஒரு போதும் இடமளிக்கக் கூடாது. ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களை ஓடஓட விரட்ட வேண்டும். குண்டர்களை ஏவி அவர்களை அடித்து நொருக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தால் கொன்று விடுவதாக கட்சிக்காரர்களை அச்சுறுத்த வேண்டும். ஐக்கிய தேசியக் க்ட்சியினர் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுவதற்கு இடமளிக்கக் கூடாது. அவர்களது தேர்தல் அலுவலகங்களை அடித்து நொருக்க வேண்டும். தீவைத்துக் கொளுத்த வேண்டும். அவர்களுக்கு எதிரான வன்முறைகள் எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்கு கட்டவிழ்த்து விட வேண்டும் என்பதே பொதுசன ஐக்கிய முன்னணித் தரப்பினரின் ஏகோபித்த முடிவாக இருந்தது. இறுதியாக டெடிகம தொகுதியில் ஆக ஆயிரம் மேலதிக வாக்குகளால்தான் டட்லி வெற்றியீட்டியிருந்ததை சுட்டிக்காட்டிய கட்சித்தலைவர்கள் ஜே.ஆரைத் தலைதூக்க விடாது முட்டுக் கட்டைகளைப் போட்டு விட்டால் நிச்சயம் வெற்றி எமக்கே என கட்சிக்காரர்கள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு மந்திரங்களை ஓதினார்கள். அதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்தி விடும்திட்டங்கள்வகுக்கப்பட்டன.



**ஜே.ஆரை எட்டியது தகவல்**

தன்னைக் கவிழ்த்து விடுவதற்கு இவர்கள் திட்டம் வகுப்பது பற்றிய தகவல் கணப்பொழுதில் ஜே.ஆருக்கு எட்டியது. ஜே.ஆர். சிந்தித்தார். டெடிகம தொகுதியைக் கைப்பற்றிக் கொள்வதற்கு அரசு தனது முழுப் பலத்தையும் பிரயோகிக்கும். அதற்கு இடமளிக்கக் கூடாது. அவர்கள் வென்றுவிட்டால் நாம் இன்னும் பல காலத்துக்குப் பின்னால் தள்ளப்படுவோம். எனவே எந்த விதத்திலாவது டெடிகம தொகுதியை வென்றே ஆக வேண்டும். ஜே.ஆர். தீர்மானமான முடிவொன்றுக்கு வந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக யாரை வேட்பாளராக நிறுத்துவது என்றொரு சவால் அவர் முன் விஸ்வரூபம் எடுத்து நின்றது.

**ஆளும்கட்சி களத்தில்**

இதனிடையே பொதுசன ஐக்கிய முன்னணி தீவிரமாகக் களத்தில் இறங்கியிருந்தது. இடத்துக்கிடம் சந்திப்புக்கள் நடத்தப்பட்டன. அவர்களது கருத்துக்கள் ஒரு விடயத்தையே சுற்றி வந்திருந்தன. அதாவது டட்லியின் இறுதிச் சடங்குக்கு மக்கள் கடல் போல் திரண்டிருந்தாலும் அவர்கள் அனைவருமே ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களாக இருப்பார்கள் எனக் கருத முடியாது.

அதுதவிர அவர்கள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாக்களிப்பார்கள் எனக் கருதுவது மடமைத்தனமே. மேலும் ஜே.ஆரைப் பற்றிக் கிராமத்தவர்கள் மத்தியில் அந்தளவுக்கு நம்பிக்கையில்லை. கடுமையாக முயன்றால் வெற்றி நிச்சயம் என்பதே சுதந்திரக் கட்சிக்காரர்களின் ஏகோபித்த கருத்தாக இருந்தது.

மறுபுறத்தில் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதில் ஜே. ஆர். குழப்பத்தில் இருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியல்லாத ஒருவரை நிறுத்தினால் அனைத்தும் குழம்பிப் போகலாம். ஒரு புறத்தில் டட்லியின் மகன் முறையான ருக்மன் சேனாநாயக்கா மறுபுறத்தில் ஜே. ஆரின் மனைவியின் உறவினரான ரஞ்சன் விஜேரத்ன என்ற இருவரும் ஜே.ஆரின் சிந்தனையில் தோன்றினர். இறுதியில் ருக்மன் சேனாநாயக்கவே அவரது தெரிவாகியிருந்தது.

**தேர்தலில் வன்முறைகள்**

தேர்தல் களம் சூடுபிடித்திருந்தது. போட்டி மிகக் கடுமையாகியிருந்தது. அரசின் அமைச்சர்கள் பொலிஸ் நிலையங்களையே ஆக்கிரமித்துக்கொண்டு தமது அதிகார பலத்தைக் காட்டிக் கொண்டிருந்தனர். போலி முறைப்பாடுகளைப் போட்டு ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்கள், ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சி அலுவலகங்கள் அடித்து நொருக்கப்பட்டன. தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. ஐ.தே.கட்சிக்கு வாக்களிப்போர் கொலை செய்யப்படுவார்கள் என மிரட்டப்பட்டனர். உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. பொலிஸாரும்கூட அரசு தரப்பினருக்குப் பக்கச் சார்பாகவே செயற்பட்டதால் ஐ.தே.கட்சிக்காரர்கள் வெளியே தலைகாட்டப் பயந்தனர். கையறு நிலையிலேயே அவர்கள் இருந்தனர். ஐ.தே.கட்சியின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் ஜே.ஆரைச் சூழ்ந்து கொண்டு ஒப்பாரி வைத்தனர்.

**களத்தில் இறங்கினார் ஜே.ஆர்.**

ஜே.ஆர். அவர்களுக்குத் தைரியமூட்டினார். நேரடியாகவே களத்தில் இறங்கி டெடிகம தொகுதிகள் உள்ள வீடொன்றைத் தனது தேர்தல் அலுவலகமாக மாற்றிக்கொண்டார். குக் கிராமங்களைக் கூடத் தவறவிடாது வீடு வீடாகச் சென்று கட்சிக்காரர்களின் ஆதரவாளர்களைச் சந்தித்துத் தைரியமூட்டினார். கைது செய்யப்படும் கட்சிக்காரர்களைப் பிணையில் எடுப்பதற்குச் சட்டத்தரணிகள் குழுவொன்றையே அமர்த்தினார். வாக்களிப்புக்கு முன்னர் இரவோடு இரவாக அரசு, தனக்கு வாக்குகள் கிட்டமாட்டாது என உணரப்பட்டிருந்த பகுதிகளுக்குச் செல்லும் போக்குவரத்துப் பாதைகள் மூடிவிடப்பட்டன. வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டனர். அரச தரப்பின் இந்தப் புதிய நிலைப்பாடு ஐக்கிய தேசியக் கட்சிக் காரர்களால் ஜே.ஆருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

**நரித் தந்திரம் வென்றது**

ஜே.ஆரின் மூளையில் நல்லதொரு நரித்தந்திரம் உதித்தது. விடிவதற்கு முன்னர் தனது திட்டத்தை செயலாக்கினார். கட்சிக்காரர்கள், ஆதரவாளர்களை இரகசிய மாகச் சந்தித்தார். அரசு தரப்பி னர் எது சொன்னாலும் தலையாட்டுங்கள். அவர்கள் தருவதை மறுக்காது வாங்கிக் கொள்ளுங்கள். வழமையைப் போன்று பச்சைநிற உடைகளுடன் வாக்களிக்கச் செல்வதைத் தவிருங்கள். நீல நிறத் தொப்பி அணிந்து நீலநிற உடையில் அரச தரப்புக் கட்சிக்காரர்களுடனேயே வாக்குச் சாவடிகளுக்குச் செல்லுங்கள். யானைக்கு நேரே புள்ளடி இடுங்கள். அமைதியாக வீடுகளுக்குத் திரும்புங்கள். நடப்பதை மறு நாள் தெரிந்து கொள்ளுங்கள் என்பதே ஜே.ஆரின் அந்த இரகசிய புத்திமதியாகியிருந்தது. விடிவதற்கு முன்னரே ஜே.ஆரின் இந்தத்திட்டம் டெடிகம ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களின் செவிகளுக்குச் சென்றிருந்தது.

விடிந்தது. வாக்களிப்பும் சுமுகமாக, அமைதியாக இடம்பெற்றிருந்தது. ருக்மன் சேனாநாயக்க 5.000 மேலதிக வாக்குகளால் டெடிகம தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருந்தார். அதுதான் ஜே.ஆரின் சாணக்கியமும் நரித்தந்திரமும்.

---

வாசகர் திருமுகம்

## மீதிப் பணத்தை தருவார்களா?

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் செல்லும் 769, 794 பாதைகளில் சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்தி பஸ்களில் சேவையில் கடமை புரியும் நடத்துநர்கள் மீதிப் பணத்தை ஒரு போதும் தருவதில்லை. உதாரணமாக சாவகச்சேரியில் இருந்து கொடிகாமம், சாவகச்சேரியில் இருந்து கைதடி செல்லும்போது இ.போ.ச.சபையினால் 17 ரூபா தான் கட்டணமாக நிர்ணயித்துள்ளனர்.

ஆனால் பிரயாணிகள் 20 ரூபாவைக் கொடுத்தால் மீதி 3 ரூபாவைக் கொடுக்காமல் தவிர்க்கின்றனர். ஏன் இவ்வாறு அபேஸ் செய்கிறார்களோ தெரியவில்லை. இதை ஒரு பிரயாணியிடம் 3 ரூபா படி பல நூறு ரூபாய்கள் சம்பாதிக்கிறார்கள் நடத்துநர்கள். இதற்கு சில்லறை காசு இருந்தும் மீதியைத் தருவதில்லை. இதற்கு என்ன செய்வது என்று புரியவில்லை. இதனை தனியார் சிற்றூர்தி சங்கத்தினர் தடுக்க வேண்டும். எனவே மிகுதிப் பணத்தை வழங்குமாறு நடத்துநர்களுக்கு உத்தரவிட ஆவன செய்வார்களா?

வி.ஜெகதீஸ்வரி.

## உணர்ந்து செயற்படுவார்களா?

"தீவுப் பகுதியில் மாரியில் நல்ல மழை பெய்கின்ற காலத்திலும், ஆடி தொடக்கம் புரட்டாதி வரை குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படுவது வழமையாகும். கடந்த வருடம் மாரி மழையோ ,அன்றி இந்த வருடம் சித்திரை மழையோ சரியானபடி பெய்யாதமையால் இந்த வருடம் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது வேலணைப் பிரதேச சபை எல்லைக்குள் குடிதண்ணீர் சாட்டியிலுள்ள நன்னீர்க் கிணறு மூலம் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. சாட்டியிலுள்ள கிணறுகளிலும் நீரூற்று மிகவும் குறைந்து விட்டது. இந்த நிலையில் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கு வருகின்ற அடியவர்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தில் மிகவும் கஷ்டமான நிலையை பிரதேச சபையும் கோயில் நிர்வாகமும் எதிர்கொள்கின்றன. மிகச் சிறிய அளவிலேனும் குடிதண்ணீர் பிரச்சினையைக் குறைக்க ஒரு வழியுண்டு. தீவுப் பகுதிக்கு வருகை தரும் உத்தியோகத்தர்களும் ஏனையோரும் விசேடமாக நாகபூஷணி அம்மன் கோயிலுக்கு வருவோர் ஒவ்வொருவரும் குறைந்தது ஒரு லீற்றர் தண்ணீரையாவது யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வந்தால் தமது குடிதண்ணீர்த் தேவையின் அரைவாசிப் பங்கை ஈடு செய்து கொள்ளலாம். அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

கே.தவராஜ்
நயினாதீவு.

## அமைதியும் சாந்தமும் நிறைந்த நிலையை அடைய முயற்சி செய்

சோம்பேறித்தனத்தை எந்த வழியிலும் துரத்தியாக வேண்டும். சுறுசுறுப்பு என்பதற்கு எதிர்ப்பு என்பது பொருள். எல்லாத் தீமைகளையும் எதிர்த்துப் போரிடு. எண்ணத்தில் ஏற்படும் தீமைகள், செயலில் ஏற்படும் தீமைகள் முதலிய எல்லாத் தீமைகளோடும் போரிட்டுக் கொண்டேயிரு. இப்படி எதிர்ப்பதில் நீ வெற்றி பெற்ற பிறகு தான் அமைதி உன்னைத் தேடி வரும். அத்துடன் யாரையும் வெறுக்காதே. தீமையை எதிர்க்காதே என்று சொல்வது மிகவும் எளிது. ஆனால் நடைமுறையில் பின்பற்றும் போதுதான் அது எவ்வளவு கடினமான காரியம் என்பது எமக்குத் தெரிய வரும். சமுதாயம் முழுவதும் எம்மைப் பாராட்டும் பொழுது நாம்பெரிய அகிம்சாவாதி போல நடிக்கலாம். ஆனால் எம்முடைய உள் மனம் நாம் அப்படிப்பட்டவர்கள் அல்ல என்று உள்ளிருந்தே கூறிக் கொண்டிருக்கும். இந்த நிலையில் மனதில் அமைதி இல்லா திருப்பதை நாம் உணர்கின்றோம். எதிர்ப்பது நல்லதெனத் தோன்றுகிறது. நீ பணம் சேர்க்க ஆசைப்பட்டாலும், உலகம் அத்தகைய குறிக்கோள் உடையவனை கொடியவன் என்று நினைக்கிறது என்று அறிந்தால் பணத்தை சேர்ப்பதற் காக நடத்த வேண்டிய போராட்டத்திலும் எதிர்ப்பிலும் இறங்கவே மாட்டாய். ஆனால் மனமோ இரவும் பகலும் பணம் சேர்ப்பதிலேயே அலைந்து கொண்டிருக்கும். அது அயோக்கியத்தனம். இதனால் பலனே இல்லை. இந்த உலகத்தில் இறங்கிப் போராடு இந்த உலகத்தில் படவேண்டிய வேதனைகளையெல்லாம் படு. இன்பங்களையெல்லாம் அனுபவி. அதன்பிறகு உன்னிடத்தில் தானாகவே துறவு உண் டாகும். அமைதி உண்டாகும். எனவே உன்னிடத்திலிருக்கும் பதவி ஆசையை நீ பூர்த்தி செய்து கொள். உன்னுடைய ஆசைகளையெல்லாம் நிறைவேற்றிக் கொண்ட பின்னரே அவை எல்லாம் மிகமிகச் சாதாரணமானவை என்பது உனக்குப் புரிய வரும். ஆனால் இப்படி இந்த ஆசைகளை எல்லாம் தீர்த்துக் கொள்ளாத வரையில், செயல்புரியும் நிலையைக் கடக்காத வரையில் ஆழ்ந்த அமைதியும் சாந்தமும் நிறைந்த நிலையை நீ அடைய முடியாது.

### விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



**நாளை**

**புரட்டாதி-11 சனிக்கிழமை | 27.09.2014**

திதி: திருதியை பி.ப. 2.24 வரை
நட்சத்திரம்: சுவாதி
மு.இ. 10.24 வரை

சுபநேரம்:03.02-04.32 வரை
இராகுகாலம்:09.02-10.32 வரை



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நல்ல பணப்புழக்கமும், பொருளாதார ஏற்றமும் இருக்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். எந்தப் பிரச்சினையையும் சந்தித்து முறியடிக்கும் வல்லமையைப் பெறலாம்.

**இடபம்:** காரியத்தடைகள் நீங்கி அனுகூலம் பிறக்கும். மதிப்பு மரியாதை சுமாராகவே இருக்கும். வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தின் தேவைகள் பூர்த்தியாகும். புதிய வீடு வாங்க வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** சிற்சில பிரச்சினைகள் வீரத்தான் செய்யும். எனவே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போகவும். அதே போல் உறவினர் வகையிலும் அதிக நெருக்கம் வேண்டாம். சிலர் தொழில் நிமித்தமாக குடும்பத்தை விட்டுப் பிரிய நேரிடலாம்.

**கடகம்:** உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். ஆனாலும் வருமானத்தில் எந்தக் குறையும் இருக்காது. உடன் பணிபுரிவோரிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும். சிலர் எதிர்பாராத இடமாற்றத்தைச் சந்திக்கலாம்.

**சிங்கம்:** சொந்தத் தொழில் புரிவோர் சிறிது சிரத்தை எடுத்து உழைக்க வேண்டியிருக்கும். கலைத்துறையினருக்கு முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். எதிர்பார்த்த புகழ், பாராட்டும் கிடைக்கும்.

**கன்னி:** பண விடயம் திருப்திகரமாக இருக்கும். ஆனால் எதிர்பார்த்த பதவி கிடைப்பதில் வாக்குவாதம் ஏற்படலாம். பெண்கள் குடும்ப ஒற்றுமைக்காக விட்டுக்கொடுத்துப் போக வேண்டியிருக்கும்.

**துலாம்:** எந்த வேலையிலும் உங்கள் தனித்தன்மை வெளிப்படும். தடைகளை முறியடித்து காரிய வெற்றி பெறலாம். வீடு, நிலம் ஆகியவற்றில் இருந்து வந்த தாமத நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்:** நண்பர்களிடத்தில் மனக்கிலேசம் ஏற்படலாம். எதிர்காலத்துக்குத் தேவையான முறையான சேமிப்புகளுக்கு ஏற்ற ஏற்பாடுகளைச் செய்வீர்கள். எதிரிகளின் இன்னல்கள் இருக்கும் இடம் தெரியாமல் போகும்.

**தனுசு:** பலவிதமான பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். பின்தங்கிய நிலையிருப்பவர்கள் முன்னேற்றப் பாதையில் செல்வார்கள். சிலருக்கு ஊர் விட்டு ஊர் செல்லும் நிலை ஏற்படலாம். நல்ல பணப்புழக்கம் இருக்கும்.

**மகரம்:** எடுத்த காரியம் அனுகூலத்தைக் கொடுக்கும். மதிப்பு மரியாதை சீராக இருக்கும். வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும். முயற்சிகளின் பேரில் சுபகாரியங்கள் தங்கு தடையின்றி நடைபெறும்.

**கும்பம்:** புதிய வீடு, வாகனம் ஆகியவற்றை வாங்கும் போது கவனம் தேவை. ஒருமுறைக்கு இருமுறை விசாரித்து வாங்குவது நல்லது. நண்பர்கள், உறவினர்கள் அன்னியோன்னியமாக இருப்பர்.

**மீனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். சற்று முயற்சி எடுத்தால் பதவி உயர்வு உங்களை வந்து சேரும். எதிர்பார்த்திருந்த பணி இடமாற்றம் உங்களை வந்து சேரும். மேலதிகாரிகளின் அனுசரணை இருந்துவரும்.



## சீனாவில் ஸ்மார்ட்போன் நடைபாதை

கையில் இருக்கும் கைபேசியைப் பார்த்துக்கொண்டே நடப்பதும், காரைச் செலுத்துவதும் நவீன கால பிரச்சினைகள். எப்போதும் ஸ்மார்ட்போனும் சாதாரண போனும் கையில் இருக்கும் பழக்கத்தின் விளைவான இந்த பிரச்சினைக்கு சீனாவில் புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளனர்- ஸ்மார்ட் போன் நடைபாதை தான் அது. ஸ்மார்ட்போனைப் பார்த்துக் கொண்டே நடக்கும் பழக்கம் கொண்டவர்களுக்காக என்று சீனாவின் சாங்கியிங் நகரில் உள்ள பிரபலமான பொழுது போக்கு பகுதியின் நடை பாதையில் இடம் ஒதுக்கியுள்ளனர். இந்தப் பாதையில் 50 மீற்றர் தூரம் ஸ்மார்ட் போனும் கண்ணுமாக இருப்பவர்களுக்காக ஒதுக் கப்பட்டுள்ளது.

குறத்த 50 மீற்றரில் செல் போன் பயன்படுத்தக் கூடாது. ஸ்மார்ட்போனை பாவிப்பதற்கான பாதையில் ஆங்கிலத்திலும் சீன மொழி யிலும், இதற்கான பொறுப்பு நீங்களே என்ற எச்சரிக்கை பாணியில் அறிவிப்பு எழுதப் பட்டுள்ளது. அருகிலேயே, சீனாவின் முதலாவது செல்போன் நடைபாதை என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. புதுமை யான இந்த யோசனையை செல்போனை பார்த்து கொண்டே நடப்பதில் உள்ள ஆபத்தை உணர்த் துவதற்காக என்றும் விளக்கம் அளிக்கப்பட் டுள்ளது. சில மாதங்களுக்கு முன் நஷனல் ஜியாக்ரபிக் தொலைக் காட்சி சார்பில் அமெரிக்காவில் பின்பற்றப்பட்ட சிந்தனையின் உந்துதலால் இந்தத் திட்டம் சீனாவில் நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. சீனாவின் டுவிட்டரான வெய்போவில் இளசுகள் பலரும் மூழ்கிகிடப்பதும் அவர்களில் பலர் நடந்து கொண்டே குறும்பதிவு அனுப்பும் வழக்கம் கொண்டிருப்பதும் இதற்கான முக்கிய காரணம் என்று சொல்லப் படுகிறது.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 5 | 8 | | 4 | | 1 |
| | | | 4 | | | 9 | | 5 |
| 4 | | | | 3 | 9 | | | |
| 5 | 7 | | 6 | 2 | | | 9 | |
| 6 | | 9 | | | | 5 | | 2 |
| | 8 | | | | | | 7 | 6 |
| | | | 8 | 4 | | | | 9 |
| 1 | | 6 | | | 2 | | | |
| 8 | | 5 | | 6 | 3 | | 4 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 6 | 4 | 9 | 8 | 7 | 5 | 1 |
| 9 | 5 | 4 | 1 | 7 | 3 | 2 | 6 | 8 |
| 7 | 8 | 1 | 5 | 6 | 2 | 9 | 3 | 4 |
| 4 | 3 | 9 | 6 | 1 | 7 | 5 | 8 | 2 |
| 6 | 1 | 8 | 2 | 3 | 5 | 4 | 7 | 9 |
| 2 | 7 | 5 | 9 | 8 | 4 | 6 | 1 | 3 |
| 8 | 9 | 2 | 7 | 5 | 1 | 3 | 4 | 6 |
| 1 | 4 | 7 | 3 | 2 | 6 | 8 | 9 | 5 |
| 5 | 6 | 3 | 8 | 4 | 9 | 1 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது.

3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. '(உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற் றிகரமாக் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# யங்கம்பன்ஸ், மனோகரா வெற்றி

கரணவாய்,செப்.26
கோல் போடுவதற்கு கிடைத்த அரிய சந்தர்ப்பங்கள் பலவற்றை எதிரணியினர் கோட்டை விட அவற்றைச் சாதகமாகப் பயன்படுத்திய கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம், அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

திக்கம் இளைஞர் விளையாட் டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டி கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகமும், வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக்கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கருணாகரன் அணி திறமையாக விளையாடிய போதும் கோல் போடுவதற்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பங்களை தழுவ விட்டுக்கொண்டே இருந்தனர். இருந்த போதும் யங்கம்பன்ஸ் அணியினர் கிடைத்த சந்தர்ப்பங்கள் இரண்டினைச் சரியாகப் பயன்படுத்தி கோலினைப் போட்டனர்.

முதற்பாதி ஆட்டத்தின் 9 ஆவது நிமிடத்திலும் இரண்டாவது பாதி ஆட்டத்தின் 45 ஆவது நிமிடத்திலும் ரதன் இரு கோல்களைப்போட்டார். இதனால் 2:0 என்ற கோல்கள் அடிப்படையில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த கட்டப் போட்டிகளுக்கு முன்னேறியது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகமும், கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகமும் மோதின. ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்தில் மனோகரா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த நிதுசன் ஒரு கோலைப்போட ஆட்டம் மேலும் சூடு பிடிக்கத் தொடங்கியது. இந்தச் சூழ்நிலையில் 11 ஆவது நிமிடத்தில் அதே அணியைச் சேர்ந்த அனோஜன் இரண்டாவது கோலையும் போட்டார். இதனால் 2:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமானதும் இரு அணிகளும் வியூகங்களை மாற்றி விளையாடிய போதும் மனோகரா அணியின் நிதுசன் மீண்டும் கோல் போட்டார். ஆட்டம் நிறைவடைய 3 நிமிடங்கள் இருக்கும் போது உதயதாரகை அணியைச் சேர்ந்த மணி கோல் ஒன்றைப் போட 3:1 என்ற கோல் கணக்கில் மனோகரா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (ரி-108)

## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம்,செப்.26
நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளை யாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவை சுடர் விளையாட்டுக் கழக அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மாதகல் சென். தோமஸ் யுத் விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன. (ரி- 23-108)

★ ★ ★

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் ஈ.கே குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான 11 பேர் பங் குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக் கிழமை மாலை 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதய சூரியன் விளையாட் டுக்கழக அணியும் மாலை 4.55 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக் கோட்டை யூனியன் விளை யாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன (ரி-23)

★ ★ ★

கரணவாய்,செப்.26
திக்கம் இளைஞர் விளையாட் டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நட்த்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் பாரதி விளையாட்டுக்கழகமும், அல்வாய் நண்பர்கள் விளை யாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ரி-108)

## தேசிய மட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.26
ஏறாவூர் அலிகார் மத்திய மகா வித்தியாலய அணியை வீழ்த்திய இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி உதைபந்தாட்ட அணி அரையிறுதியாட்டத்துக்கும், கூடைப்பந்தாட்ட அரையிறுதியாட்டத்தில் கொட்டோன கன்னியர் மடம் அணி இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை வென்று இறுதிப் போட்டிக்கும் முன்னேறியுள்ளன.

நேற்று முன்தினம் புதன் கிழமை வெள்ளவத்தை குரோ பார்க் மைதானத்தில் இடம் பெற்ற தேசிய மட்ட பாட சாலைகளுக்கு இடையிலான 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து ஏறாவூர் அலிகார் மத்திய மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

இதேவேளை தேசிய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதியாட்டத்தில் கொட்டோன கன்னியர் மடம் அணியை எதிர்த்து இராமநாதன் மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இந்த ஆட்டம் நேற்று முன்தினம் புதன் கிழமை நுகேகொடை சென். ஜோசப் மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது. இதில் கொட்டோன கன்னியர் மட அணி 59:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ரி- 23)



அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான தேசியமட்டப் பளுதூக்குதல் போட்டியில் 17 வயதுப் பிரிவில் முதலிடத்தைப் பெற்ற யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் தே.விதுஜனுக்கு கல்லூரி அதிபர் தயானந்தராஜா தங்கப்பதக்கத்தை அணிவிக்கிறார். (ரி)

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி



யாழ்ப்பாணம்,செப்.26
அடம்பன் ஐக்கிய விளையாட்டுக்கழகம் மீள் உருவாக்கல் செய்யப்பட்டதன் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் நாளை சனிக் கிழமையும், நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமையும் அடம்பன் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன. மேற்படி போட்டியில் 25 விளையாட் டுக் கழகங்கள் பங்குபற்றுவதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ரி- 23)

## நவிண்டில் உதைபந்தாட்டத் தொடர் அடுத்த சுற்றுக்கு முன்னேறிய அணிகள்

பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம், மற்றும் அராலி சென் ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம்.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்தும் அணிக்கு 7பேர் கொண்ட உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டி வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.



இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றிலே கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகமும் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகமும் மோதின. மிகவும் பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் மாறி மாறி கோல்கள் போட ஆட்டம் விறுவிறுப்படைந்தது. ஆட்டம் ஆரம்பமாகி 4 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணியும் 7 ஆவது நிமிடத்தில் மகாத்மா அணியும் ஒவ்வொரு கோலைப்போட ஆட்டம் 1:1 என்ற சமநிலையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக நடை பெற்றுக் கொண்டிருக்கையில் 10 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணி வீரர் பிரியதர்சன் ஒரு கோலைப் போட யங்கம் பன்ஸ் அணியினர் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தனர். ஆனால் அது நீண்ட நேரம் நீடிக்கவில்லை 12 ஆவது நிமிடத்தில் மகாத்மா அணி வீரன் லோகீஸ்வரன் பதில் கோல் போட 2:2 என்ற நிலையில் ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது. அதனை அடுத்து வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதை மூலம் மகாத்மா விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குமுன்னேறியது.

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் அராலி சென்ஜேம்ஸ் விளையாட்டுக்கழகமும், இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பலத்த போராட்டத்தின் மத்தியில் 10 ஆவது நிமிடத்தில் றெஜினோல்ட் போட்ட கோலே அவ்வணியின் வெற்றிக் கோலாக அமைந்தது. (ரி-108)

## 786 சம்பியன்

யாழ்ப்பாணம்,செப்.26
வவுனியா உதைபந்தாட்டச் சங்கம் நடத்திய அணிக்கு 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் 786 விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது. கடந்த வாரம் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யூனிபைட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து 786 விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் 786 விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சிறந்த் கோல்காப்பாளருக்கான விருது 786 விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த சதிரிக்கும். சிறந்த வீரருக்கான விருது அதே கழகத்தை சேர்ந்த நர்சத்கானுக்கும் வழங்கப்பட்டது. (ரி- 23)

## ஈ.கே. குமரையா ஞாபகார்த்த உதைபந்தாட்ட தொடர்; போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.26
ஈ.கே. குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும், அணிக்கு 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு பாரதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. அதில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியின் சிறந்த ஆட்டநாயகனாக வேணுகோபனும், ஊரெழு பாரதி விளையாட்டுக்கழக அணியின் சிறந்த ஆட்டநாயகனாக றொன்சனும் தெரிவாகினர். இரண்டாவது ஆட்டத்தில் பொற்பதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானகலா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஞானகலா விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதில் ஞானகலா விளையாட்டுக்கழக அணியின் சிறந்த ஆட்டநாயகனாக செந்தூரனும், பொற்பதி விளையாட்டுக்கழக அணியின் சிறந்த ஆட்டநாயகனாக நிசாந்தும் தெரிவானார்கள்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியின் சிறந்த ஆட்டநாயகனாக ஜோன்கீத்தும், அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழக அணியின் சிறந்த ஆட்டநாயகனாக விஜயதீபனும் தெரிவானார்கள். (ரி- 23)

# அரையிறுதியில் கொல்கத்தா



இரண்டு பந்துகள் மீதமிருந்த நிலையில் 3 இலக்குகளால் பேர்த் ஸ்கோர்சர்ஸ் அணியை வீழ்த்திய கொல்கத்தா அணி, தொடரில் ஹட்றிக் வெற்றியைப் பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

சம்பியன் லீக் தொடரின் ஏ பிரிவில் உள்ள கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், பேர்த் ஸ்கோர்சர்ஸ் அணியும் நேற்று முன்தினம் மோதிக் கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கோர்சர்ஸ் அணி நிர் ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 இலக்குகள் இழப்பிற்கு 151 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அதிரடியாக ஆடிய ஆரம்பத் துடுப்பட்ட வீரரும், அணித்தலைவருமான அடம் வோஜஸ் அதிக பட்சமாக 71 ஓட்டங்களையும், மற்றைய ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கிரைக் சிம்மன்ஸ் 39 ஓட்டங்களையும் பெற்றனர். மத்திய வரிசையில் வைற்மான் 21 ஓட்டங்களையும், இறுதியில் அர்பற் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ள ஏனையோர் சொதப்பலாக ஆடினர். கொல்கத்தா சார்பில், மீண்டும் அசத்திய சுனில் நரைன் 4 இலக்குகள்ளயும், குல்தீப் யாதவ் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

152 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு ஆடிய கொல் கத்தா அணியின் தொடக்கம் மோசமாக இருந்தாலும், இறுதி நேரத்தில் சூர்யகுமார் யாதவ் வழங்கிய அதிரடியின் உதவியுடன் அந்த அணி வெற்றி இலக்கை அடைந்து கொண்டது. இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்திலிருந்த சூர்யகுமார் யாதவ் 19 பந்துகளில் 4 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி உள்ளடங்கலாக 43 ஓட்டங் களைப் பெற்றுக் கொண்டார். மனிஷ் பான்டே 24 ஓட்டங்களையும், ரொபின் உத்தப்பா 23 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்டநாயகனாக பந்து வீச்சில் அசத்திய குல்தீப் யாதவ் தெரிவானர்.

இந்த வெற்றியின் மூலம் மூன்றாவது வெற்றியை ருசித் துள்ள கொல்கத்தா அணி, முதலாவது அணியாக அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்து கொண்டது. அத்துடன் 20 ஓவர் கிரிக்கெட்டில் கொல்கத்தா அணி தொடர்ச்சியாகப் பதிவு செய்துள்ள 12ஆவது வெற்றி இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி)

## இன்றைய CLT-20 ஆட்டங்கள்

மாலை 4 மணி

கேப் கொப்ராஸ் Vs பார்படோஸ் ரிடென்றஸ்

இரவு 8 மணி

நோர்தன் டிஸ்ரிக்ஸ் Vs கிங்ஸ் லெவன் பஞ்சாப்

# குக்கின் பதவி நீடிப்பு



உலகக் கிண்ணத் தொடர் வரை இங்கிலாந்து அணியின் தலைவராக அலஸ்டயர் குக்கே நீடிப்பார் என இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இதன் போதே குக்கின் தலைமைப் பதவி நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கைக்குச் செல்லவுள்ள இங்கிலாந்து அணி 7 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கவுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள இங்கிலாந்து அணியின் தலைவராக அலெஸ்டயர் குக் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரிலும் இங்கிலாந்து அணியை வழிநடத்தவுள்ளதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இத்தொடரில் பங்கேற்கும் 16 பேரை கொண்ட இங்கிலாந்து அணி விபரம் : அலெஸ்டயர் குக் (அணித்தலைவர்), மொயின் அலி, ஜேம்ஸ் அன்டர்சன், இயன் பெல், ரவி பொபாரா, ஜோஸ் பட்லர், ஸ்ரீபன் பின், ஹாரி கர்னே, அலெக்ஸ் ஹேல்ஸ், கிறிஸ் ஜோர்தான், இயன் மோர்கன், ஜோ ரூட், பென் ஸ்ரோக்ஸ், ஜேம்ஸ் ரெய்லர், ஜேம்ஸ் டிரட்வெல், கிறிஸ் வோக்ஸ். (ரி)

# டோனியின் சொல்லப்படாத கதை அடுத்தவருடம்




டோனியின் வாழ்க்கையை மையமாக வைத்து தயாராகும் 'டோனி- சொல்லப்படாத கதை' என்ற திரைப்படம் அடுத்த வருடம் திரைக்கு வரும் என அவரது மனைவி சாக்க்ஷி தெரிவித்துள்ளார்.

இயக்குநர் நீரஜ் பாண்டேயின் இயக்கத்தில் தயாராகும் குறித்த படத்தில் டோனியின் கதாபாத்திரத்தில் நடிகர் சுசாந்த் சிங் ராஜ்புத் நடிக்கவுள்ளார். இந்தப் படம் பற்றிய செய்திகள் ஏற்கனவே வெளியாகியிருந்த நிலையில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தது. மேலும் டோனியின் ஓய்வுக்கு பின்னர் வேண்டுமானால் குறித்த படத்தை வெளியிடுமாறு தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் தனது டுவிட்டர் பக்கத்தில் குறித்த படத்தின் "போஸ்டரை" வெளியிட்டுள்ள சாக்ஷி, சில தினங்களாக வந்த எல்லா வதந்திகளும் முடிந்து விட்டது எனக் கருத்தும் தெரிவித்துள்ளார். (ரி)

# சகோதரனுக்காக சண்டை போடும் கம்ரன்



அணியில் இருந்து ஓரங்கப்பட்டுள்ள பாகிஸ்தான் அணியின் இலக்குக் காப்பாளரான கம்ரன் அக்மல், தனது சகோதரரும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரருமான உமர் அக்மலின் கிரிக்கெட் வாழ்க்கையை, பாகிஸ்தான் அணியின் தெரிவாளர்கள் கெடுப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

உமர் அக்மல்தான் 20 ஓவர் மற்றும் ஒருநாள் ஆட்டங்களில் இலக்குக் காப்புச் செய்யும் பணியில் ஈடுபட வேண்டும் என்ற பாகிஸ்தான் அணியின் பிடிவாதம் தனக்கு அதிருப்தி அளிப்பதாகத் தெரிவித்த கம்ரன் அக்மல் மேலும் கூறுகையில், இது நியாயமற்றது. ஏனெனில் உமர் அக்மலுக்கு அணியில் இரு பணிகளைச் செய்வதில் ஆர்வம் இல்லை. உமர் அக்மல் சிறந்த துடுப்பாட்ட வீரரே தவிர, அவர் ஒரு இலக்குக் காப்பாளர் கிடையாது என்றார்.

2010ஆம் ஆண்டு பாகிஸ்தான் டெஸ்ட் அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டுள்ள கம்ரன் அக்மல், கடந்த ஆண்டிலிருந்து ஒருநாள் அணியிலும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

# உலகக் கிண்ணத்துடன் ஓய்வுபெறும் மலிக்



அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொட ரோடு ஓய்வு பெற உள்ளார் பாகிஸ்தான் அணியின் சகலதுறை வீ ரான சொய்ப் மலிக்.

சிறிது காலமாகப் பாகிஸ்தான் அணியில் சேர்க்கப்படாமல் இருக்கும் தனக்கு மீண்டும் அணியில் வாய்ப்பு கிடைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்த அவர், அடுத்தாண்டு நடைபெற உள்ள உலகக் கிண்ணத் தொடருடன் ஓய்வு பெறப்போவதாகவும் மலிக் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, தெரி வாளர்கள், அணித்தலைவர் ஆகியோர் எனது கோரிக்கையை பரிசீலிப்பார்கள் என்று கருதுகிறேன். மீண்டும் தேசிய அணியில் விளையாட வாய்ப்பு கிடைத்தால், தொடர்ந்து நல்ல ஆட்டத்தை வெளிப்படுத்துவேன். கிரிக்கெட் எனக்கு உயிர்நாடி. ஆட்டம் சரியாக வராவிட்டால் அறையில் சென்று ஒதுங்கிக்கொள்ளும் ஆள் நான் கிடையாது. மீண்டும் ஆட்டத்தில் கவனத்தை குவிப்பதற்காக, இசையை கேட்பது, நீச்சல் அடிப்பது, குடும்பத்தாருடன் பேசுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவேன் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(ரி)



# ஓரங்கட்டப்படும் யுனிஸ்

ஆஸ்திரேலியா அணிக்கு எதிராக ஐக்கிய அரபு இராச்சியத்தில் விளையாடும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் மூத்தவீரர் யுனிஸ்கான் இடம் பெறவில்லை.

ஆஸ்திரேலிய அணிக்கெதிரான தொடரில் விளையாடவுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர்களின் பட்டியலை நேற்று வெளியிட்டுள்ளது. ஒக்டோபர் 5ஆம் திகதி ஒரு ரி- 20 ஆட்டம் நடைபெறவுள்ளது. அதற்கு அடுத்த வாரங்களில் ஆஸ்திரேலியாவுடன் 3 ஒரு நாள் ஆட்டங்களில் பாகிஸ்தான் விளையாட உள்ளது. அதன் பின்னர் டுபாயில் ஒக்டோபர் 22ஆம் திகதி டெஸ்ட் தொடர் தொடங்குகிறது.

254 ஒரு நாள் ஆட்டங்களில் விளையாடியுள்ள யுனிஸ்கான், கடந்த வருடம் மார்ச் மாதத்தில் இருந்து தெரிவுக் குழுவினரால் ஓரங்கட்டப்பட்டு வந்தார். இந்த நிலையில், தெரிவுக் குழுத் தலைவரான மொயின் கான் நிருபர்களிடம் கூறும்போது, வருங்காலத்தை கவனத்தில் கொண்டு யுனிஸ்கான் அணியில் சேர்க்கப்படவில்லை. ஆனால் அவருக்கான கதவுகள் மூடப்படவில்லை. உலகக் கிண்ணத் தொடர் தொடங்குவதற்கு குறைந்த காலமே உள்ளதால் தெரிவுக் குழுவினர் புதிய மற்றும் இளைய வீரர்களுக்கு வாய்ப்பு அளித்தும் மற்றும் அவர்களது திறமைகளை வெளிக் கொண்டு வரவும் முடிவு செய்துள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள யுனிஸ்கான், உலகக் கிண்ணத் தொடரில் விளையாடும் நம்பிக்கையைத் தான் இழக்கவில்லை என்று கராச்சியில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

(ரி)

# சென்னை ஓபனில் டிப்சரேவிச்

சென்னை ஓபன் ரென்னிஸ் போட்டியில் முன்னாள் சம்பியனான செர்பியாவின் ஜான்கோ டிப்சரேவிச் பங்கேற்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டுக்கான சென்னை ஓபன் ரென்னிஸ் போட்டி எதிர்வரும் ஜனவரி 5 முதல் 11ஆம் திகதி வரை சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்.டி.ஏ.டி ரென்னிஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. 2015 தொடரை சென்னை ஓபனில் இருந்து தொடங்குகிறார் டிப்சரேவிச். 7ஆவது ஆண்டாக சென்னை ஓபனில் பங்கேற்கவுள்ள அவர், 2013இல் இங்கு சம்பியன் பட்டம் வென்றார். முன்னதாக 2012இல் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் மிலோஸ் ரயோனிச்சிடம் தோல்வி கண்ட டிப்சரேவிச், இரட்டையர் பிரிவில் பயஸுடன் இணைந்து சம்பியன் பட்டம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு ரென்னிஸ் சங்கத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஹிட்டேன் ஜோஷி வெளியிட்டுள்ள அறிக்கையில், டிப்சரேவிச் காயத்திலிருந்து மீண்டு ரென்னிஸுக்கு திரும்பியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. 2015 தொடரின் தொடக்கப் போட்டியான சென்னை ஓபனில் பங்கேற்பதை அவர் உறுதி செய்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரி)

## தொடர்ச்சிகள்

### தமிழர்

தெரிவித்தார்.

இந்தக் கூட்டத் தொடரில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாகக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

அங்கு உரையாற்றிய கஜேந்திரகுமார் மேலும் தெரிவித்ததாவது:-

மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் சிறிலங்கா தொடர்பான வாய்மொழி மூல அறிக்கையை எமது அமைப்பு வரவேற்கிறது. குறிப்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைக் குழுவானது பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து நேரடியாக தகவல்களை பெறுவதற்கும் அதனை வலி[illegible]ப்படுத்துவதற்கும் முன்னுரிமை கொடுப்பதாகக் குறிப்பிட்ட ஆணையாளரின் அறிக்கையை வரவேற்கிறோம்.

இந்த விசாரணைக்கு நேரடி சாட்சியங்களை வழங்கக்கூடிய மிகப் பெரும்பான்மையானோர் இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழர்கள் என்பது மனித உரிமை ஆணையாளர் அறிந்ததே. தொடர்ந்தும் பாதிக்கப்படும் மக்கள் என்றவகையில் இந்த விசாரனைக்கு தமது சாட்சியங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்பதில் தமிழர்கள் பெருதும் விருப்புக் கொண்டிருக்கிறார்கள்.

களத்தில் வாழுகின்ற பாதிக்கப்பட்ட மக்களின் சாட்சியங்களை பதிவு செய்யாதவிடத்து அவ்விசாரணை முழுமையானதாகவோ தீர்க்கமானதாகவோ அமையாது. ஆகவே, பாதிக்கப்பட்ட இந்த மக்கள் தமது சாட்சியங் களை நேரடியாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் விசாரணிக்குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்கு ஏதுவான பொறிமுறைகளை உறுப்பு நாடுகள் முன் வைக்க வேண்டும் என நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். போரின்போதும் அதன் பின்னரும் வடக்கைப் போலவே கிழக்கும் பாதிக்கப்பட்ட போதிலும் இங்கு, இலங்கையின் வடபகுதி பற்றியே முக்கியத்துவம் கொடுத்து பேசப்படுகிறது.

உதாரணமாக 2009 முள்ளி வாய்க்காலில் நிகழ்த்தப்பட்ட கொடூர குற்றங்களுக்கு சமனான குற்றங்கள் 2007 இல் கிழக்கின் வாகரை யிலும் நிகழ்த்தப்பட்டது.

அத்தோடு வடக்கின் வலிகாமத்தில் நடைபெறும் நில அபகரிப்பு போலவே கிழக்கின் சம்பூரில் நிகழும் நில அபகரிப்பும் மிகவும் அபாயகரமானதாகும்.

எனவே,கிழக்கு மாகாணம் பற்றியும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணைக்குழு போதிய முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்று நாம் வேண்டிக்கொள்கிறோம்.

தமிழர்கள் ,அவர்களது தமிழர்கள் என்கிற தேசிய அடையாளத்தினாலேயே தொடர்ந்தும் இலக்கு வைக்கப்படுகிறார்கள் என்பதை , மனித உரிமைகள் ஆணியாளரின் வாய் மொழி மூல அறிக்கை குறிப்பி டத்தவறியமையை நாங்கள் கவலையுடன் கவனத்தில் கொள்கிறோம். குறிப்பாக மதச் சிறுபான்மையினர் இலக்கு வைக்கப்படுவதை கிறிஸ்தவர் களும் முஸ்லிம்களும் இலக்கு வைக்கப்படுவதாகப் பெயர் குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக் கின்ற அதேவேளை, தமிழர் கள் என குறிப்பிடுவதை தவிர்த்திருப்பது மிகவும் ஏமாற்றத்தை தருகிறது.

மனித உரிமைகள் ஆணையாளரது வாய்மொழு மூல அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதில் பெரும் பான்மையான சம்பவங்கள், தமிழர்களின் இலங்கைத்தீவில் தமிழ் தேசத்தின் அடைய[illegible]ளத்தை அழித்த[illegible] அவர்களை அடிமைப்படுத்தும் ஒரு கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலைப் பொறிமுறையின் ஒரு பகுதியே ஆகும்.

தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நியாயமாகவும் வெளிப்படையாகவும் புரிந்து கொள்ளல் இங்கு மிகவும் அடிப்படையானது. அந்த அடிப்படையில் விசாரணைகளைக் கொண்டு செல்லுமாறு மனித உரிமைகள் ஆணையாளர் அலுவகத்தை நாங்கள் வேண்டிக்கொள்கிறோம்-என்றார். (த)

### மாகாண

தனியார் பஸ் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்களை யாழ். நாவலர் வீதியிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் உள்ள சில சங்கங்களில் குழப்பங்கள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. யாழ்.மாவட்டத்தில் 15 சங்கங்கள் உள்ளன. யாழ்.மாவட்டத்தில் சங்கங்கள் ஒன்றிணைந்த இணையம் ஒன்று உள்ளது. ஆனால் அவற்றில் சில வழிப் போக்குவரத்துக்கான பஸ் சங்கங்கள் ஒற்றுமையின்மை காணப்படுகிறது. அதனால் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துச் சங்கங்களையும் ஒன்றிணைத்து யாழ். மாவட்ட பஸ் இணையம் என்று ஒன்று உருவாக்கப் படவுள்ளது. எதிர்வரும் 11 ஆம் திகதி அனைவரும் ஒன்றுகூடி அந்த இணையம் ஆரம்பிக் கப்படவுள்ளது.

அதன்பின்னர் யாழ். மாவட்ட இணையம் மற்றும் ஏனைய 4 மாவட்டங்களின் பஸ் சங்கங்களையும் ஒன்றிணைத்து வடக்கு மாகாண[illegible] பஸ் ஒன்றியம் [illegible] ஆரம்பிக்கப்படவுள்ளது. வடக்கில் தனியார் பஸ்களுக்கு உள்ள பிரச்சினைகள், சேவை வழங்கலில் உள்ள சிக்கல், பொதுமக்களின் முறைப்பாடுகள், வழித்தட அனுமதிகள், மாவட்டங்களுக்கிடையேயான-மாவட்டங்களுக்குள்ளேயான பிரச்சினைகள் அனைத்தையும் இந்த ஒன்றியம் மேற்கொள்ளும்.

இதுதவிர தனியார் பஸ் காரர்கள், நடத்துநர்கள் பயணிகளுடன் உரிய முறைப்படி நடந்து கொள்ளாமை, உரிய பண்புகளைக் கொண்டிராமை உள்ளிட்ட பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றை நேரடியாகவும் கண்டுள்ளேன். எதிர்காலத்தில் அவ்வாறானவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களது வழி அனுமதிப் பத்திரம் ரத்துச் செய்யப்படும். வழி அனுமதிப்பத்திரம் இல்லாத பலர் தமக்கு அதனை வழங்குமாறு விண்ணப்பித்துள்ளனர். பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் அவர்களின் வழி அனுமதிப்பத்திரங்களை ரத்துச் செய்து விண்ணப்பித்தவர்களுக்கு அதனை வழங்க முடியும்-என்றார்.

(த-4-ரி)

### ஐ.நாவின்

நீடித்துள்ள போதிலும் விசாரணைகள் இடம் பெறும் முறை, பாதிக்கப்பட்டவர்களுக் கான ஆலோசனை, மொழிபெயர்ப்பு, விசாரணைக்கு முன்னரும் விசார ணையின்போதும் பாதுகாப்புப் படை யினரால் துன்புறுத்தப்படுதல், மிரட்டப்படுதல் போன்றவை குறித்து கரிசனை கள் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

புதிதாக புதைகுழிகள் கண்டு பிடிக் கப்பட்டுள்ளபோதிலும் அவைகளை தோண்டும் மற்றும் விசாரிக்கும் நடை முறைகள் மெதுவாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை நாடா[illegible]ளுமன்றத்தில் சமர்[illegible]பிக்கப்பட்ட சாட்சிகளைப் பாது காக்கும் சட்டமூலம் குறித்து கரிசனை கள் காணப்படுவதாகவும் அவர் தெரி வித்தார்.

வாய் மூல அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு.

இலங்கையின் நீண்டகால நலன் களைக் கருத்தில் கொண்டு சர்வதேச விசாரணைக்குழுவுடனும், விசேட அறிக்கையாளர்களுடனும் ஒத்து ழைக்க வேண்டும். இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் தற்போது இடம்பெறுபவை குறித்து அடிப்படை யான மற்றும் பரந்துபட்ட பலாபலன் களைத் தரக்கூடிய பொறுப்புக் கூறும் செய்முறை அவசியமானது.

கடந்த காலத்தை ஏற்றுக்கொள்வதற்கும், தண்டனையிலிருந்து விலக் களிக்கப்படுதலை முடிவிற்குக் கொண்டு வருவதற்கும், சமூகங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் மற் றும் சட்டத்தின் ஆட்சியை நடை முறைப்படுத்துவதற்கும் பொறுப்புக் கூறுதல் அவசியமானது.

சிவில் அமைப்புகள், மனித உரிமை பணியாளர்கள், பாதிக்கப்பட்டவர்களின் அமைப்புகள் (ஐ.நாவுடன் சேர்ந்து செயற்படக்கூடியவர்கள்) ஆகியோருக்கு எதிரான மிரட்டல்கள், துன் புறுத் தல்கள், பழிவாங்கல் நடவடிக்கைகள் ஆகியன அரசாலும், அரசு சாராத செயற்பாட்டா ளர்களாலும் முன்னெடுக்கப்படுவது கடும் கண்டனத்துக்குரியது.

### வங்கியிலிருந்து

கில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

வீட்டுத் திட்டச் செயற்பாடுகளுக்காக வங்கியிலிருந்து மீளப் பெற்ற பணத்துடன் [illegible] சைக்கிளில் வீடு தி[illegible]ரும்பிய பெண் வீட்டு வாசலில் வந்திறங்கியபோது மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த இளைஞர்கள் பெண்ணிடம் இருந்த பணம் அடங்கிய கைப்பையை பறித்துக் கொண்டு தலைமறைவாகினர்.

குறித்த மோட்டார் சைக்கிளில் இலக்கத்தகடு இல்லாமல் இருந்ததாகவும், குறித்த பெண் உடன டியாக அவ்லக்குரல் எழுப்பியபோதிலும் உதவிக்குமக்கள் முன் வர முன்னர் அவர்கள் தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கைப்பையினுள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம், வங்கிக் கணக்கு புத்தகம், அடையாள அட்டை, தொலைபேசி என்பன இருந்ததாகத் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பணத்தைப் பறிகொடுத்த கணேசமூர்த்தி சுபாசினி என்பவர் கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (த-18)

### இலங்கை

படகையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நேற்று சென்னை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்ப டடுள்ளனர். (த-14)

### மின்சார

தம பொறியியலாளரின் கீழ் பணியாற்றும் மனித வலுத் தொழிலாளர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றவுள்ளனர். பிரதான கோரிக்கை உள்ளடங்கலாகத் தொழிற்சங்கம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளும் கலந்துரையாடப்படவுள்ளன.

ஜனாதிபதி வருகையால் மாநாடு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறாது எனத் தகவல் வெளியிடப்பட்டுள்ள நிலையில் திட்டமிட்டபடி மண்டபத்தின் எதாவது ஒரு மாடிக் கட்டடத்தில் மாநாடு நடைபெறும்-என்றார்.

(த-14-106)

### பனை

கள், சுவர் மாட்டிகள் போன்ற பயிற்சிகள் இந்த பயனா ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்சியை நிறைவு செய்யும் பயனாளிகளுக்குச் சபையால் பனம் பொருள் உற்பத்தி உபகரணங்கள் வழங்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

(த-17)

# அம்பாறையில் நிலவும் கடும் வறட்சியினால் 3500 நன்னீர் மீன்பிடிக் குடும்பங்கள் பாதிப்பு

## அரச உதவிகள் எதுவும் இதுவரை இல்லை

அம்பாறை, செப்.26

அம்பாறை மாவட்டத்தில் நிலவி வரும் கடும் வறட்சியால் நன்னீர் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வரும் 3 ஆயிரத்து 500 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆலையடிவேம்பு திருக்கோவில் பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கிய மாவட்டத்தில் மிகப் பெரிய களப் பான பெரியகளப்பில் நீர் வற்றியுள்ளதாலேயே மேற்படி மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் இது வரையில் வழங்கப்படவில்லை.

இலங்கையில் இரண்டாவது களப்பான பெரியகளப்பாகும். சுமார் 28 சதுர கிலோ மீற்றர் கொண்ட களப்பு அக்கரைப்பற்று தொடக்கம் திருக்கோவில் விநாயகபுரம் வரையிலான சுமார் 14 கிலோமீற்றர் நீளம் கொண்ட இந்தக் களப்பை சுற்றியுள்ள சின்னமுகத்துவாரம், தம்பட்டை, தம்பிலுவில், திருக்கோவில், விநாயகபுரம், மண்டானை, கள்ளியந்தீவு, கவாப்பிட்டி, மாகாசக்திபுரம், பனங் காடு, கோளாவில், தீவுக் காலை, அக்கரைப்பற்று போன்ற கிராமங்களில் உள்ள 3 ஆயிரத்து 500 குடும்பங்கள் நன்னீர் மீன்பிடித் தொழிலை வாழ்வாதார தொழிலாக மேற்கொண்டு வருகின்றன.

தற்போது மாவட்டத்தில் கடும் வெய்யில் நிலவுகிறது. இதன் காரணமாக ஏற்பட்ட வறட்சி நிலையால் இந்தக் களப்பு நீர் வெகுவாக வற்றி யுள்ளதுடன் களப்பின் பல பகுதிகளில் நிலம் வெடித்தும் காணப்படுகின்றது.

இந்த நிலையில் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் அரசாங்கமோ அரச சார்பற்ற நிறுவனங்களோ தமக்கு எந்த விதமான நிவாரணங்களையும் வழங்கவில்லை என பாதிக்கப்பட்ட நன்னீர் மீன்பிடியாளர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ-10)

## மட்டு. மாவட்ட தேசிய பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 250 மில்லியன்

ஏறாவூர், செப். 26

இந்த ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய 250 மில்லியன் ரூபா செலவிடப்படும் என மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள ஏறாவூர்- ஆறுமுகத்தான்குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தில் இடம்பெற்ற மாணவர் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் கல்வித் துறையை முன்னேற்றுவதற்காக பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளைக் கட்டி எழுப்புவதற்காக கடந்த 2008 ஆம் ஆண்டிற்குப் பின்னர் 500 மில்லியன் மாவட்டச் செயலகத்தால் செலவு செய்யப்பட்டிருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலே 125 ஐயாயிரம் மாணவர்கள் இருக்கிறார்கள். மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் மூன்றில் ஒரு மடங்கினர் மாணவர்களாக இருக்கிறார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தின் எதிர்காலம் இந்த மாணவர்களின் சிறந்த கல்வியில்தான் தங்கியுள்ளது. மாணவர்களுக்கு கல்வி போதிப்பதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் 6175 ஆசிரியர்கள் கடமையில் உள்ளனர்.

இந்த வருடம் தேசிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய 250 மில்லியன் ரூபா செலவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திலே அபிவிருத்தி செய்வதற்கென சில பாடசாலைகளை முன்னுரிமைப்படுத்தி தெரிவு செய்து வைத்துள்ளோம் எனத் தெரிவித்தார். (ஒ-10)



## பெண்கள், சிறுவர் உரிமை, பாதுகாப்பு குடும்பிமலையில் விழிப்புணர்வு நிகழ்வு

மட்டக்களப்பு, செப். 26

மட்டக்களப்பு மாவட்டம் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட குடும்பிமலை கிராமத்தில் உள்ள சிறுவர்கள் மற்றும் பெண்களின் உரிமை, பாதுகாப்பு போன்றவற்றை மேம்படுத்தும் வகையில் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி பிரிவினால் விழிப்புணர்வு நிகழ்வொன்று அண்மையில் நடத்தப்பட்டுள்ளது.

கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் மு.தனபாலசுந்தரத்தின் வழிகாட்டலின் பேரில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலையிலிருந்து இடைவிலகிய 10 மாணவர்கள் அடையாளப்படுத்தப்பட்டு 4 மாணவர்களை சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலும், 3 மாணவர்களை தொழிற்பயிற்சி நிலையத்திலும், இணைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் குடும்பிமலை கிராமத்தில் கிராம மட்ட சிறுவர் உரிமைகண்காணிப்புக் குழுக் கூட்டம், பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை கொண்ட குடும்பங்களைப் பதிவு செய்தல், இல்லதரிசிப்பு போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இது போன்ற செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு அடுத்த வருடத்துக்குள் இந்தப் பகுதியிலுள்ள பாடசாலை இடைவிலகல்களை பெரிய அளவில் குறைக்கலாம் எனவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ஒ-10)

## இராணுவ ஒத்திகைக் கண்காட்சி

இலங்கை முப்படைகளும் சீனா, பாகிஸ்த்தான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், பிறேசில் ஆகிய ஏழு நாடுகளும் இணைந்து நடத்திய கூட்டு இராணுவ ஒத்திகைக் கண்காட்சி நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் மட்டக்களப்பு புன்னைக்குடா கடற்கரையில் இடம்பெற்றது.

'நீலத் தரை வரைபடம்' எனப் பெயரிடப்பட்ட இந்தக் கண்காட்சியை பார்வையிட இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரத்னாயக்க, பிறேசில் நாட்டு பிரதித் தலைமைத் தூதர் ஜொஸ் ரொபேட்டோ பரகோபியக், இராணுவ நடவடிக்கைப் பணிப்பாளர் ஜெனரல் சுமேத பெரேரா, 22ஆவது இராணுவப் பயிற்சிப் பிரிவுப் பணிப்பாளர் பிரிகேடியர் றோஹித்த தர்மசிறி, காலாட் படை பிரிகேடியர் ராஜபக்ஷ, இணைந்த இராணுவப் ப்யிற்சிப் பணிப்பாளர் பிரிகேடியர் பிரசன்ன சில்வா, லொஜிஸ்டிக் கொமாண்டர் மேஜர் ஜெனரல் சிரந்த திஸநாயக்க உள்ளிட்ட முப்படைகளின் உயர் அதிகாரிகள் வருகைதந்திருந்தனர்.

எதிரியின் தளத்தை எவ்வாறு அழிப்பது உள்ளிட்ட பல விடயங்கள் ஒத்திகைக் கண்காட்சியில் நிகழ்த்திக் காட்டப்பட்டதுடன் 2007ஆம் ஆண்டு கிழக்கில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் உலங்கு வானூர்தி, மிக் ரக போர் விமானங்கள் மற்றும் கடற்படைக் கப்பல்கள் இணைந்து குண்டுகள் பொழிந்த ஒத்திகைக் காட்சியும் முதன்முதலாக காண்பிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பொது மக்கள் பலரும் கலந்துகொண்டு கண்காட்சியை பார்வையிட்டனர். (ஒ-10)

## வறுமைக் குறைப்பு குறித்த பயிற்சி

மட்டக்களப்பு, செப்.26

சம வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதனூடாக இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடியவர்களுக்கான நிலையான அபிவிருத்தியை நோக்கிய "வறுமைக் குறைப்பு" எனும் தொனிப் பொருளிலான பயிற்சிநெறி யொன்று புதன்கிழமை மட்டக்களப்பு கிறீன் கார்டன் விடுதியில் இடம்பெற்றது.



இந்தப் பயிற்சிக் கருத்தரங்கில் ஏறாவூர்ப்பற்று வேர்ள்ட் விஷன் பிராந்திய அபிவிருத்தித் திட்டப் பிரிவில் கடமையாற்றும் சமூக நல ஊக்குவிப்பாளர்கள் 21 பேர் கலந்து கொண்டனர். 'கமிட்' அமைப்பின் உள்வாங் கல் தொடர்பான திட்ட உத்தியோகத்தர் எஸ்.சக்தி தலைமையில் நடைபெற்ற இந்தப் யிற்சிக் கருத்தரங்கில் அடையாளம் காணப்பட்ட மாற்றுத் திறனாளிகளின் வாழ் வாதார செயற்பாடுகளை மேம்படுத்தும் வழி வகைகள் மற்றும் வலதுக் குறைவு ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் அதன் விளைவாக ஏற்படக் கூடிய சமூக பொருளாதார பின்னடைவுகள், மாற்றுத் திறனாளிகளையும் அவர்களுக்காக சேவை புரிபவர்களையும் உள்வாங்கல் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் 'ஹென்டிகப் இன்டர்நெசனல்' நிறுவனங்களின் நிதியுதவியுடன் 'கமிட்' அமைப்பு இத்தகைய பயிற்சிகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## மூன்றாளமடு கிராமத்துக்கு யோகேஸ் எம்.பி.



வவுணதீவு, செப். 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மூன்றாளமடு கிராம மக்களை கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப் பின்போது கிராம மக்களால் ஆலயம் வீடு, குடிதண்ணீர், மின்சாரம், வேலைவாய்ப்பு, கற்றல் உபகரணங்கள் போன்றவற்றின் தேவைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. மக்கள் தேவைகள், குறைகளை கேட்டறிந்த சீ.யோகேஸ்வரன் குறித்த பிரச்சினைகளை தீர்த்து வைப்பதாக உறுதியளித்தார். (ஒ-10)

## கணினி தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி நாட்டில் களவு,கொள்ளைகள் அதிகரிப்பு

கல்முனை, செப், 26

கல்முனை, சம்மாந்துறை மற்றும் சவளக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் இடம்பெறுகின்ற களவு, கொள்ளை, போலி நாணயத்தாள் தயாரிப்பு ஆகியவற்றை தடுப்பதற்கான வழிமுறைகளை ஆராயும் அரச, தனியார் வங்கிகளின் முகாமையாளர்கள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுடனான உயர் மட்டக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.டபிள்யு.ஏ.கபார் பேசும் போது தொழில்நுட்பத்துடன் கூடிய களவு, கொள்ளை நிகழ்வுகள் தற்போது நாட்டில் அதிகரித்துள்ளன.

இதில் அதிகமாக பாடசாலை மாணவர்கள் பொழுது போக்குக்காக ஈடுபடுவதோடு ஏனையவர்களும் ஈடுபடுகின்றனர். இதற்கு காரணம் மாணவர்கள் மத்தியில் இன்று கணினி தொழில்நுட்ப அறிவு அதிகரித்துக் காணப்படுவதாகும். எனவே எமது பிரதேசத்திலுள்ள வங்கிகள் தங்களது பாதுகாப்பை உயர் தொழில்நுட்பம் கொண்ட சீ.சீ.ரி.வி. கமராக்கள் மூலம் மேற் கொள்ள வேண்டும்.

அதேபோன்று போலி நாணயத்தாள் விடயத்திலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில்



கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பாடல் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எல்.ஏ. வாஹிட் மற்றும் கல்முனை, சம்மாந்துறை, சவளக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரச, தனியார் வங்கிகளின் முகாமையாளர்கள், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஒ-10)

# வெலிஓயா பிரதேச செயலர் பிரிவுக்கு நிதி ஒதுக்கீடு வடக்கு மாகாண சபை அமர்வில் நேற்று காரசாரம்

யாழ்ப்பாணம், செப். 26

வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு, முல்லைத்தீவு மாவட்டத்துடன் சட்டரீதியாக இணைக்கப்படாமலேயே, அந்தப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு, எமது மாகாணத்திற்குரிய பல ஆயிரம் கோடி பெறுமதியான நிதி செலவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்த பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன், அது தொடர்பிலான பல்வேறு ஆதாரங்களையும் சபையில் சமர்பித்தார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் பிரேரணையைச் சமர்பித்து உரையாற்றினார். இதன் போது அவர் பல்வேறு விடயங்களையும் சுட்டிக்காட்டினார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மேலதிகமாக வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு எமது மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த இணைப்பு பகிரங்கமாக எல்லை நிர்ணயம் செய்யப்பட்டோ வர்த்தமானி அறிவித்தல் ஊடாகவோ அல் லாமல், பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சின் ஒரு கடிதம் மூலமே இணைக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பல கோடிக்கணக்கான பணம் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவுக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை எமது மாவட்டத்தின் நிதியிலிருந்தே வழங்கப்பட்டுள்ளது. சட்டபூர்வமற்ற முறையில் இணைந்த பிரதேச செயலாளர் பிரிவுக்கு இந்த நிதியை ஒதுக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் வடக்கு மாகாணசபை நிதியிலிருந்து இனி வரும் காலங்களில் எந்தவொரு பணமும் வெலிஓயாவுக்குச் செல்லக் கூடாது.

மத்திய உள்ளூராட்சி அமைச்சர் அதாவுல்லா, சில மாதங்களுக்கு முன்னர் வெலிஓயா பிரதேச சபையை தனியான சபையாக பிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளைப் பணித்துள்ளார். எனவே முல் லைத்தீவு மாவட் டத்திலும் சிங் களப் பிரதேச சபையை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முல்லை மாவட்ட அரச அதிபர், எல்லை நிர்ணயக் குழுக் கூட்டத்தில் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவுக்கு ஆதரவு கிடைக்கவில்லை என்றும் இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை எனவும் தெளிவாக குறிப்பிட்டார். அப்படியானால், மாவட்ட மக்களுடைய ஆலோசனைகள், அபிப்பிராயங்களுக்கு மாறாக வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு முல்லைத் தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டமை தவறானது என்பது நிரூபணமாகின்றது.

2013 ஆம் ஆண்டு முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் வழங்கப்பட்ட 100 மில்லியன் முழுவதும் வெலிஓயா பிரதேச பாடசாலைகளுக்கே வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அங்குள்ள சம்பத்நுவர மகாவித்தியாலயம் தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது. இதனால் எமது மாவட்டத்தின் கோட்டாவில், எமது மாவட்டத்தைச் சேராதவர்களுக்கு இடம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற வடக்கு மாகாணசபைத் தேர்தல் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெறவில்லை. இந்த மக்கள் அநுராதபுரத்திலும், வவுனியாவிலுமே வாக்களித்திருந்தனர். 2014 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்பட்டியலில் முல்லைத்தீவு மாவட்டத்துடன் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு இணைக்கப்படவில்லை. வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கின்ற மக்கள் தொடர்ந்தும் அநுராதபுரத்துக்கே, தமது நிர்வாகத்தேவைகளுக்குச் செல்கின்றனர். அவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருவதில்லை.

வெலிஓயா பரிதேச செயலாளர் பிரிவில் உள்ள பாடசாலைகளை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளரே மேற் பார்வை செய்கின்றார். முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரே வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவிற்கும் பொறுப்பாக இருக்கின்றார். கரைத்துறைப்பற்று கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரே, வெலிஓயாவுக்கும் பதில் கடமையாற்றுகின்றார். கரைத்துறைப்பற்று பிரதேச செயலக காணி உத்தியோகத்தரே, வெலிஓயாவிலும் பணிபுரிகின்றனர்.

வடக்கு மாகாண சபைக்குட்பட்ட இந்த அதிகாரிகளுக்கு, முல்லைத்தீவுடன் இணைக்கப்படாத - வடக்கு மாகாணத்துடன் இணைக்கப்படாத பிரதேசத்துக்குச் சென்று கடமையாற்ற பணிப்புரை வழங்கியது யார் ?

வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவை முல்லைத்தீவு மாவட்டத்துடன் சட்டபூர்வமற்ற முறையில் இணைத்தமை, கொக்கிளாய் - புல்மோட்டை தரைவழிப் பாதையை துண்டாடும் ஓர் முயற்சியாகும். இதன் மூலம் சிங்கள் குடியேற்றத்தை திட்டமிட்டுச் செய்வதற்கு அரசினால் முன்னெடுக்கப்பட்ட முயற்சியாகும்.

எனவே இந்த விடயத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் விசேட கவனம் எடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண் டும் என்று அவர் தெரிவித்தார்.

(ற-5)

# முதலமைச்சர் வெளிநாடு செல்ல ஜனாதிபதியின் அனுமதி தேவை

யாழ்ப்பாணம், செப். 26

வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் தமது தனிப்பட்ட அல்லது உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்கின்ற போது தனக்கு அறியத்தர வேண்டும் என்றும் முதலமைச்சர் அவ்வாறு பயணம் மேற்கொள்கின்றபோது, ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வின் ஆரம்பத்தில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தில் அறிவிப்புக்கள் வாசிக்கப்பட்டது. இதன் போதே அவைத் தலைவர் ஆளுநரின் மேற்படி அறிவிப்பை வாசித்தார்.

ஜனாதிபதி செயலகத்தினால் சுற்றறிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்த சுற்றறிக்கைக்கு அமைவாகவே மாகாணசபை உறுப்பினர்களின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பில் இதனைத் தெரிவிக்கின்றேன். மாகாணசபை உறுப்பினர்கள், தமது தனிப்பட்ட அல்லது உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்கின்ற போது ஆளுநருக்கு 5 வேலை நாள்களுக்கு முன்னதாகத் தெரியப்படுத்த வேண்டும். அத்துடன் முதலமைச்சர் அவ்வாறு ஏதாவது பயணங்கள் மேற்கொள்கின்ற போது ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி கோவில்பற்று கறுவன்பாடு இரைப் பள்ளமடுவில் ஒரு பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 0478928 (49787)

## மரண அறிவித்தல்



### றீட்டா பிறெட்றிக்(ஆசிரியை)
### Rita Fredrick

இல.24, அச்சுக்கூட வீதி, யாழப்பாணத்தை சேர்ந்த றீட்டா பிறெட்டிக் அவர்கள் நேற்று (25.09.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்டோபர் ஞானப்பிரகாசம், அக்னஸ் லில்லி ஞானப்பிரகாசம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கெலன் அன்ரனி, காலஞ்சென்ற அன்டன் கிறிஸ்டி ஞானபிரகாசம், மெல்வின் ஞானப்பிரகாசம்(நில அளவையாளர்), ஜோர்ஜ் கிறிஸ்டி, ஜேக்கப்ஜோசவ்(பொறியியளாளர்- Botswana ) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருச்செல்வம் அல்பேட் அன்டனி(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), ஜெயசோதி ஞானப்பிரகாசம் (Australia),கமலா மெல்வின் , லாலினி ஜேக்கப் (Botswana)ஆகியோரின் அன்பு மைத்துனியும் சித்தா திலகரட்ணம், Dr.திலகா அலெக்ஸ் சான்டர்(UK),ரவிராஜ் யூட் ஆகியோரின் சிறிய தாயாரும், Dr.அருந்ததி சுரேஷ் (Australia), Dr.வசந்தகுமார், Dr.சுரேந்திரகுமார், நவீந்திரக்குமார்(விரிவுரையாளர்), துவாரகா அக்னஸ் நேசவர்மன் (HNBவங்கி), சங்கீதா நிரஞ்சன்(Botswana), சாந்தன்((Botswana) ஆகியோரின் அன்பு மாமியாரும் Dr.சிந்துஜா, நிமல்ராஜ்(பொறியியளாளர்), Dr.டினேஷ்(UK), அன்றூ(UK), ஸ்டீபன் (Australia), டேமியன்((Australia),கரன் லாவண்யா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை(27.09.2014) சனிக்கிழமை மு.ப 9.30 மணியளவில் இல.24, அச்சுக்கூட வீதி, யாழப்பாண அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் புனித மரியன்னை பேராலத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
R.திலகரட்ணம்(மருமகன்)

24, அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம். (52442)(08)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் துரைசிங்கம் யஜீதரன்



தோற்றம்
20.09.1983

மறைவு
06.10.2013

நினைவகலா நினைவுடனே இறைவனடி சேர்ந்து
இன்று ஓராண்டு கலைந்ததுவோ.
நீழலாக எம்மனதில்என்றுமே வாழ்கின்றீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை நாம் இறைஞ்சுகின்றோம்

இன்று (26.09.2014) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

துரைசிங்கம் குடும்பத்தினர்,
மனைவி, பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
கனகசபை ஒழுங்கை, கீரிமலை வீதி,
காங்கேசன்துறை.

தற்காலிக முகவரி:
அம்பத்தை வீதி,மல்லாகம் தெற்கு, மல்லாகம்.



## வாணிவிழா அழைப்பு

காலம் : இன்று (26.09.2014) வெள்ளிக்கிழமை

நேரம் : மாலை 3.00 மணி

இடம் : சிவபூமி பாடசாலை, கோண்டாவில்.

**மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்**



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சிவபூமி குடும்பம்
T.P: 021 222 7938



## மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்க கூட்டம் - 28.09.2014

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க கூட்டம் 28.09.2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அதிபர் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் சகல பழைய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அதிபர்
மு/உடையார்கட்டு ம.வி.

(52438) (10.6.3)

## இதய அஞ்சலி



எங்கள் தேவஸ்தானத்தில் மங்கள வாத்தியக் கலைஞராக நீண்டகாலம் அரும் பணியாற்றிய அளவையூர்

**கிருஸ்ணசாமி சிவபாதரத்தினம்**

அவர்களின் பிரிவு குறித்து இதய அஞ்சலியை சமர்ப்பிக்கிறோம் அன்னாரின் ஆத்மா சாந்தி பெறத் துர்க்கா தேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(C1596?)

## ஈரவிழிகளுடன் முதலாம் ஆண்டு நினைவு



### அமரர் கந்தன் ஸ்ரீஸ்கந்தராசா

மலர்வு
08.11.1951

உதிர்வு
06.10.2013

அன்பின் பிறப்பிடமே! பண்பின் உறைவிடமே!
உங்கள் நினைவுகளை மறக்கடித்து
எங்கள் நினைவுகளை மீட்டிப்பார்க்க
முயற்சி செய்கின்றோம் - அந்த
நினைவுகளிலும் - அப்பா
நீங்கள் தானே கண் சிமிட்டுகிறீர்கள்
மனம் தேறுதல் பெறவே ஆறுதல் தேடி
உம்மிடம் ஓடி வருவோம் - நீர் எங்கே..
எம்மைப் பிரிந்து விட்ட அன்புத் தந்தையோ!
மீண்டும் எம்மிடம் வரும் வரை
என்றுமே உங்கள் நினைவுகளை சுமந்த படி......

சிங்கைநகர்,
புலோலி.

மனைவி,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

(F15984)(12.3.0)

## தொடர்ச்சிகள்

### இலங்கையின்

குழப்பங்களிலிருந்து ஒழுங்கையும், சச்சரவுகளிலிருந்து ஒத்திசைவையும் பெறுவதற்கே, சகல மனித முயற்சிகளும் இருக்க வேண்டும் எனத் தெரிவித்த கௌதம புத்தரின் வார்த்தைகளிலிருந்து நாங்கள் புத்துணர்ச்சி யைப் பெற்றுக் கொண்டுள்ளோம். இதற்கமைய தீய எண்ணங்களையுடைய விமர்சனங்களினால் பாதிப்படையாதவாறு நல்லிணக்கம், தேசத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை இலங்கை அரசு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கும்"- என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 69 ஆவது பொதுச் சபைக் கூட்டம் நியூயோர்க்கில் இடம்பெற்று வருகின்றது. இதில் ஏழாவது தடவையாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றினார்.

**மனித உரிமை ஒரு கருவி**

சம்பந்தப்பட்ட நாடுகளிலுள்ள பிரச்சினைகளின் சிக்கல் தன்மையைப் புரிதல் இல்லாமல், உள்நோக்கம் கொண்ட நிகழ்ச்சி நிரல்களை நடைமுறைப்படுத்துவதற்கான கருவியாக மனித உரிமைகள் பயன்படுத்தப்படுகின்றன. எங்கள் அனைவராலும் மனித உரிமைகள் நன்னெறி - நன்னடத்தைக் கோட்பாடாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டுமே தவிர, அரசியல் கருவியாக அல்ல.

ஒவ்வொரு நாடுகளினதும் சமூக, கலாசாரப் பாரம்பரியங்களைப் போதியளவில் கருத்திற் கொள்ளாமல் மேற்கொள்ளப்படும் வெளிப்புறத் தலையீடானது, தவிர்க்க முடியாமல் நிலைகுலைவடைதலிலேயே நிறைவடையும். உலகின் பல்வேறு பகுதிகள் இன்று இதற்கு போதிய ஆதாரமாக உள்ளன.

மீள்புனரமைப்பு, புனர்வாழ்வு, நல்லிணக்கம் ஆகியவற்றில் இலங்கையானது 5 வருடங்கள் என்ற சிறிய காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. இது தொடர்பில் மிகக் குறைவான கவனத்தைச் செலுத்தும் சிலர், தவறாக புனைந்த நிகழ்ச்சி நிரல்களினால் துரதிர்ஷ்டவசமாக, இலங்கை போரின் பின்னர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்டுள்ளது.

கணிசமான இந்த அடைவுகளைப் புறக்கணித்துக் கொண்டு எனது நாடு இன்று இலக்காகியுள்ளதில் சமநிலையும், விகிதாசாரமும் குன்றிய தன்மை வெளிப்படையானது. மனிதாபிமான 'அவசரநிலைமை கொண்ட குழப்பமிகுந்த நிலைமைகள் காணப்படும் ஏனைய பகுதிகளுக்கான அணுகுமுறைக்கு இது முற்றிலும் முரணானதாகும்.

**எதிர்கின்றோம்**

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கெதிரான ஒரு தலைப்பட்சமான பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை ஆழ்ந்த கரிசனத்தை வெளிப்படுத்துவதோடு, கியூபாவுக்கெதிரான நீதியற்ற பொருள்தார, வர்த்தக, நிதித் தடையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஐ.நா பொதுச்சபைக்கான கோரிக்கையின் தொடர்ச்சியான ஆதரவாளராக இலங்கை இருந்து வந்துள்ளது. இந்த வகையான ஒருதலைப்பட்சமான தடைகள் நாட்டின் அப்பாவிப் பொதுமக்களைப் பாதிக்கும் என்பதோடு, அவை நெறி முறையற்றவை.

**அபிவிருத்தி பாதையில் இலங்கை**

பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கையானது அநேகமாக புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளை அடைந்துள்ளது. 2013 ஆம் ஆண்டு மனித அபிவிருத்திச் சுட்டியில் ஏனைய தெற்காசிய நாடுகளை முந்திக் கொண்டு தரவரிசைப்படுத்தப்படுவதில் இலங்கை வெற்றியடைந்துள்ளது.

போரின் முடிவைத் தொடர்ந்து ஓரிரு வாரங்களில், புதிய சமாதான யுகமொன்று உதித்திருந்த போது, ஐ.நா செயலாளர் நாயகம் இலங்கைக்கு வந்திருந்தார். அதனை இந்தத் தருணத்தில் நினைவூட்டுகின்றேன். எனது நாட்டுக்கும், ஐ.நா அமைப்புக்கும் இடையிலான நெருக்கமான கூட்டுறவினையும், எதிர்காலத்தில் இணைந்து பணிபுரிவதற்கான எங்கள் அர்ப்பணிப்பினையும் வெளிப்படுத்துவதாக இது அமைந்தது.

இலங்கையிலுள்ள அனைத்து மக்களினதும் நன்மைக்கு ஏற்றவாறு திருப்திகரமான அபிவிருத்திப் பாதையில் நாங்கள் பயணிக்கின்றோம். இதை நிறைவேற்றும் போது, 'அனைவரை நோக்கியும் நட்பு, எவரையும் நோக்கிப் பகைமை இல்லை' என்ற எங்களது பாரம்பரிய வெளிநாட்டுக் கொள்கைக்கேற்றவாறு நாங்கள் செயற்படுகிறோம்.

எங்கள் மீது தேவையற்ற அழுத்தங்களை மேற்கொள்வதற்குப் பதிலாக, எங்களது உள்ளூர் செயன்முறையான நல்லிணக்கம், பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றிற்கு சர்வதேச சமூகம் பரஸ்பர உணர்வையும், ஆதரவையும் வழங்குமென நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

குழப்பங்களிலிருந்து ஒழுங்கையும், சச்சரவுகளிலிருந்து ஒத்திசைவையும் நிறுவுவதற்கே அனைத்து மனித முயற்சிகளும் காணப்பட வேண்டும் எனத் தெரிவித்த கௌதம புத்தரின் வார்த்தைகளிலிருந்து நாங்கள் புத்துணர்ச்சியைப் பெற்றுக்கொண்டுள்ளோம். இந்த வார்த்தைகளுக்கமைவாக, தீய எண்ணங்களையுடைய விமர்சனங்களிலிருந்து பாதிப்படையாதவாறு நல்லிணக்கம், தேசத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை அர்ப்பணிப்புடன் இலங்கை அரசு முன்னெடுக்கும்"- என்றார். (ந-5)

### வடக்கு

போன்றதொரு குற்றச்சாட்டு ஆளுங்கட்சி உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் மீளவும் அதே குற்றச்சாட்டு நேற்றைய தினம் முன்வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வின் கேள்வி நேரத்தில், ஆளுங்கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வடக்கு அமைச்சரவையில் எடுக்கப்படும் முடிவுகள் உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தப்படுவதில்லை. அது தொடர்பில் அவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

கொழும்பு அரசின் அமைச்சரவையில் எடுக்கப்படும் முடிவுகளே, அமைச்சரவைப் பேச்சாளர் ஒருவர் மூலமாக ஊடகங்களுக்கும் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்தப்படுகின்றது. எமது மக்களுக்கு வெளிப்படைத்தன்மையுடன் நாம் பணியாற்ற வேண்டும்.

எனவே வடக்கு மாகாண அமைச்சரவையில் எடுக்கப்படும் முடிவுகள் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். இதன் போது கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், இது தொடர்பில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு கடிதம் எழுதியுள்ளதாக குறிப்பிட்டார். (5)

### பயங்கரவாத

தத் தடைச் சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டவர்களை சட்டமா அதிபரே பிணையில் விடுவிக்க பரிந்துரை செய்ய முடியும். அதனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யபட்ட பலர், பல ஆண்டுகளாக சிறையில் வாடுகின்றனர்.

தற்போது விடுதலைப் புலிகள் இல்லை. அதனால் கைது செய்யப்பட்டுள்ளவர்களை பிணையில் விடுவிக்க முடியும். முன்னர் ஜே.வி.பியைச் சேர்ந்த பலர் இவ்வாறு கைது செய்யப்பட்ட போதும், வழக்குத் தொடுக்கப்பட்டவர்களும், வழக்குத் தொடரப்படாது சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டவர்களும் சரி, ஜே.வி.பி. இயங்கிக் கொண்டிருக்கும்போதே பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

அதேபோன்று தற்போது, கைது செய்யப்பட்டு பல ஆண்டுகளாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்று சட்டத்தரணிகள் கூட்டாக சட்டமா அதிபரிடம் கோரினர்.

சட்டத்தரணிகளின் கோரிக்கையைக் கவனமாகச் செவிமடுத்த சட்டமா அதிபர், அது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தார். (ந-4)

### போக்குவரத்து

கொழும்புக்கு சேவையில் ஈடுபடும் 56 பஸ்களுக்கு வழித்தட அனுமதி உள்ளது என்று யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கூறியுள்ளார். ஆனால் 22 பஸ்களே சேவையில் ஈடுபடுகின்றன. அப்படியானால் மிகுதி பஸ்கள் எங்கே? என்று தெரியவில்லை. அது தொடர்பில் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

ஏற்கனவே வழித்தட அனுமதி பெற்றுள்ளவர்களும், பஸ் எதுவுமே இல்லாதவர்களும்கூட வழி அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்துள்ளனர் என்று கூறப்படுகிறது. அவற்றுக்கு மாற்று வழி தேவைப்படுகிறது. யாழ். கொழும்பு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு வழித்தட அனுமதியைப் பெறுவதில் வடக்கு மாகாணத்திலேயே இந்தப் பிரச்சினை உள்ளது.

எனவே தான் கொழும்பிலிருந்து வடக்குக்குள் நுழையும் பஸ்களின் எண்ணிக்கைக்குச் சமமாக வடக்கிலிருந்து கொழும்புக்கு சேவையில் ஈடுபடும். பஸ்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும். அது தொடர்பில் மத்திய போக்குவரத்து அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளேன். யாழ். கொழும்பு சேவையில் ஈடுபடும் வழித்தட அனுமதியற்ற பஸ்களுக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ந-4)

### வடக்கு

பட்ட பலர் இன்னமும் வீட்டுத் திட்டத்தை பெற முடியாத நிலையில் உள்ளனர். எனவே வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு மேலும் 50 ஆயிரம் வீடுகள் மாகாணசபையின் மேற்பார்வையில் நிர்மாணிப்பதற்கு இந்திய மத்திய அரசு உதவி செய்ய வேண்டும் என்ற பிரேரணை முன்மொழியப்பட்டது. இதனை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் வரவேற்றார்.

அதே போன்று வடக்கிலுள்ள வளங்களை இனங்கண்டு, அதனூடாக செய்யக் கூடிய தொழிற் முயற்சிகளை அடையாளப்படுத்துவதற்கு தாயகத்திலும், புலத்திலும் உள்ள புத்திஜீவிகள் உதவ வேண்டும் எனக் கோரும் பிரேரணையும், உள்ளூராட்சிமன்ற சட்ட திருத்தத்தில், உள்ளூராட்சி சபையின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் தவிசாளரை மாற்றலாம் என்ற பிரேரணையும் அவைத் தலைவரால் முன்மொழியப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆளுங்கட்சி உறுப்பினர் அஸ்மின், இந்திய வீட்டுத்திட்டத்தினுள், யாழ்ப்பாணத்தில் குடியேறியுள்ள முஸ்லிம் மக்களையும் உள்வாங்க வேண்டும் என்று முன்வைத்த பிரேரணையை பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் வழிமொழிந்தார்.

விவசாய அமைச்சரால், கார்த்திகை மாதத்தை மரம் நடுகை மாதமாக பிரகடனப்படுத்தக் கோரும் பிரேரணையும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவுக்கு வடக்கு மாகாண நிதி வழங்கக் கூடாது என்ற பிரேரணையும் ஏகமனதாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. (ந-5)

### சட்ட

தென்னக்கோன் சிரேஷ்ட சட்டத்தரணி நவரட்ண மாரசிங்க ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். அங்கு வைத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது,

"சட்டமா அதிபர் திணைக்களத்தில் தமிழ் அரச சட்டத்தரணிகளுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. வெற்றிடம் நிலவுகிறது. அவர்களது பற்றாக்குறை காரணமாகவே வழக்குகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதில் தாமதம் நிலவுகிறது. அதனாலேயே நீதிமன்றங்களில் உள்ள வழக்குகள் தொடர்பில் அனுப்பப்படும் வழக்கு ஆவணங்கள் தொடர்பாக ஆராய்ந்து பதில் அனுப்பத் தாமதமாகின்றன. அந்த வெற்றிடத்துக்கு விரும்பும் சட்டத்தரணிகள் விண்ணப்பிக்க முடியும். அந்த வெற்றிடங்களை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது" என்று தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் பின்னர், சட்டமா அதிபர் யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (ந-4)

### காணி

னர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு மாகாணத்தில் எபோலா வைரஸ் தொற்றுப் போல இங்கு காணிகள் சுவீகரிக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவித்தார். வடக்கு மாகாணத்தில் ஒவ்வொரு நாளும் இராணுவ முகாம்களுக்காக நில அளவை செய்யப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டதுடன், இது தொடர்பில் முழு நாள் விவாதம் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அதனை மற்றொரு ஆளுங்கட்சியின் உறுப்பினர் ரி.லிங்கநாதனும் ஆதரித்துப் பேசினார்.

வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இராணுவத்தினர் வெளியில் இருந்து வந்தவர்கள். அவர்கள் இங்கே நிரந்தரமாக தங்க முடியாது. அவர்களுக்கு காணி வழங்க முடியாது என்று குறிப்பிட்டார்.

ஏனைய ஆளுங்கட்சி உறுப்பினர்களும், காணிப் பிரச்சினை தொடர்பில் தனியாக ஒரு நாள் விவாதம் நடத்துவதை ஏற்றுக் கொண்டனர். அதனையடுத்து அவைத் தலைவர், எதிர்வரும் 9 ஆம் திகதி காணி அபகரிப்பு தொடர்பில் விசேட அமர்வு நடைபெறும் என்று அறிவித்தார். (ந-5)

### கார்த்திகை

இந்தப் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றிய வடக்கு மாகாணசபை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், அண்மைக் காலத்தில் நாட்டில் நிலவி வருகின்ற கடுமையான வறட்சி மரநடுகையின் அவசியத்தை எமக்கு வலியுறுத்தி நிற்கிறது. மழையின் வருகைக்கு மரங்கள் அவசியம். போராட்ட காலத்தில் பாதுகாக்கப்பட்ட வடக்கின் காடுகள்கூட இன்று தோல் இருக்கச் சுளை பிடுங்கும் கதையாகப் படைப்பலம்மிக்க அதிகார வர்க்கத்தால் கபளீகரம் செய்யப்படுகிறது.

இலங்கையின் வரண்ட வலயமான வடக்கில் காடழிப்பின் காரணமாகவே வெம்மையின் கொடுமையை தற்போது நாம் கூடுதலாக அனுபவிக்க வேண்டியுள்ளது. வடக்கில் மரநடுகையைப் பெருமளவில் முன்னெடுப்பதற்கு தன்பெயரிலேயே 'கார்' என்று மழையின் பெயரைக் கொண்ட கார்த்திகை மாதமே மிகப் பொருத்தமான மாதமாகும். வடக்கில் மழைவீழ்ச்சி அதிகமாக இந்த மாதத்திலேயே காணப்படுகிறது.

தமிழர்கள் தம் வீடுகள் தோறும் விளக்கேற்றி வழிபடும் திருநாளையும் தன்னகத்தே கொண்டுள்ளதுடன், தமிழர்களின் புனிதமான மாதமாகவும் கார்த்திகை கருதப்படுகிறது. இந்தக் காரணங்களால், வடக்கின் மரநடுகை மாதமாகக் கார்த்திகை மாதத்தை, அதாவது நவம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியை அங்கீகரிக்குமாறு கோரினார்.

இதனை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டு அங்கீகரித்தது. (ந-5)

### புலி

அரசியலமைப்புக்கு முரணானதுதான். இதனை மீளவும் அனுப்பினால் அங்கீகரிக்க மாட்டேன். ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவரூடாக உயர் நீதிமன்றத்துக்கு எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதன்போது அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், முதலமைச்சர் நிதியச் சட்டம் தற்போதுள்ளவாறு இல்லாமல் அதனை மாற்றியமைத்து அனுப்ப வேண்டும் என்று குறிப்பிட்டார். வடக்கு மாகாண முதலமைச்சர் அபிவிருத்தி நிவாரண கணக்கு என்று மாற்றியமைத்து அனுப்புதல் நல்லது என்று இது தொடர்பில் சபையின் முடிவைக் கேட்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அவைத் தலைவர் குறிப்பிட்டதை வரவேற்பதாகத் தெரிவித்தார். இதில் முரண்படுவதால் எங்களுக்கு நன்மையில்லை. கிழக்கு மாகாணத்திலிருந்து ஜனாதிபதிக்குச் சென்ற நிறைய நியதிச் சட்டங்கள் உயர் நீதிமன்றத்துக்குச் செல்லாமல் இருக்கின்றன. அதற்கு எதிராக, ஜனாதிபதிக்கு எதிராக வழக்கும் தொடுக்க முடியாது.

எனவே இதில் முரண்படுவதிலும் விட எமக்கு இன்னமும் நிறைய நியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது. புலி பதுங்குவது காரணமாகத்தான். அதே போன்று இந்தத் தருணத்தில் பதுங்குவதுதான் சரி என்று குறிப்பிட்டார்.

இதன் போது ஆளுங்கட்சி உறுப்பினர் சிவாஜிலிங்கம், நாம் பின்வாங்கி பின்வாங்கி சுவர் வரையில் வந்துவிட்டோம். இனியும் விட்டுக்கொடுக்க முடியாது என்று தெரிவித்ததுடன், ஆளுநரை அரசியலமைப்பில் சொல்லப்பட்டவாறே, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வந்து மாற்றுவோம் என்று தெரிவித்தார். (ந-5)

### வலி.கிழக்கு

வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் எந்த விதமான தீர்மானங்களும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து மறு திகதி குறிப்பிடாமல் சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த வருடம் வரவு - செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோல்வி அடைந்தது. ஐந்து மாதங்களுக்கு மேல் சபையின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் இருந்தது. புதிய தவிசாளர் நியமிக்கப்பட்டு இந்த வருடம் ஜூன் மாதத்துக்குப் பின்னர் சபைக் கூட்டங்கள் இயல்பு நிலையில் நடைபெற்ற போதிலும் மீண்டும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

வருட இறுதியில் அபிவிருத்தித் திட்டங்களைப் பூர்த்தி செய்வது மற்றும் அடுத்த வருடத்துக்கான வேலைத் திட்டங்களுக்குச் சபை அங்கீகாரத்தைப் பெறுவது போன்ற அவசியமான வேலைகள் உள்ள நிலையில் சபைக் கூட்டங்களை நடத்த முடியாமல் இருப்பது வலி.கிழக்குப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி விடயங்களை முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன் எனது கருத்துக்களை அக்கறையோடு செவிமடுத்த முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளார் - என்றார். (த-11)

கொழும்புச் செய்திகள்

# இறப்புப் பணிக்கொடையை உடனடியாக வழங்க ஏற்பாடு

## அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினர்களுக்கு

தென்மராட்சி, செப்.26
அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினர்களின் இறுதிக்கிரியைகளுக்கான இறப்புப் பணிக்கொடையை உடனடியாக உரித்தாளிகளுக்கு செலுத்துவதற்கு தாய்ச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.
இறப்புபணிக்கொடையைபெறுவதற்கான விண்ணப்பப் பத்திரத்துடன் இறப்புச்சான்றிதழ் கிராம அலுவலரின் கடிதம் ஆகியவற்றை பிரதேச செயலர் பிரிவு சங்க செயலரிடம் சமர்ப்பித்து மறுதினம் உரிய கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம்.
இந்த மாதத்தில் இருந்து இது நடைமுறைக்கு வந்துள்ளது.
இதற்கு வசதியாக தாய்ச் சங்கம் இறப்புப் பணிக் கொடைக்கான வைப்பு நிதியை மாவட்ட சங்கங்களின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து அந்தத் தொகையை வேறு தேவைகளுக்கு பெற்றுக்கொள்ள முடியாத வகையில் இறப்புப் பணிக்கொடைக்கு மட்டும் பயன்படுத்தவென ஏற்பாடுகளை செய்துள்ளது. இது தொடர்பாக தாய்ச் சங்கத்தின் செயலாளர் எல்.பி.ராஜநாயக்க விரிவான சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.
இதுவரைகாலமும் உறுப்பினர்களின் இறப்புப் பணிக் கொடை உட்பட சகல கொடுப்பனவுகளும் பிரதேச செயலர் பிரிவு சங்கங்கள் ஊடாக கொழும்பில் உள்ள தாய்ச் சங்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்தே கொடுப்பனவுக்கான காசோலைகள் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தன.
இந்தமாதத்தில் இருந்து நடைமுறைக்கு வந்துள்ள புதிய நடைமுறையின் பிர காரம் மரணப் பணிக்கொடை மாவட்ட ரீதியில் மாவட்ட சங்கத்தால் வழங்கப்படுகின்றன. கொடுப்பனவு கிடைப்பதில் உள்ள கால தாமதத்தை கருத்தில் கொண்டே புதிய நடைமுறை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
(வ-11)

## விபத்துக்கள்

### சுவர் இடிந்து விழுந்ததில் ஒருவர் காலில் படுகாயம்

சுன்னாகம் ஐயனார் கோயிலடியில் உள்ள பழைய வீடொன்றை இடித்துஅகற்ற முற்பட்டவேளையில் சுவர் இடிந்து வீழ்ந்ததில் காலில் படுகாயங்களுடன் தெல்லிப்பழை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் உடனடியாக மேலதிக சிகிச்சைக்காகயாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று பகல் இடம் பெற்றுள்ளது.
இந்த விபத்தில் படுகாய முற்றவர் சுன்னாகத்தைச் சேர்ந்த 42 வயதான க.சிவலிங்கம் என்பவராவார்.
(வ-86)

### கந்தளாயில் வாகன விபத்து ஒருவர் சாவு: ஒருவர் காயம்

திருமலை, செப்.26
கந்தளாய் 91ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். கடற்படையினருக்குச் சொந்தமான பஸ்ஸும், ஓட்டோ ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது. திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கடற்படையின் பஸ் ஒன்றும், எதிரே பயணித்த ஓட்டோவும் மோதியே விபத்துக்குள்ளாகின. விபத்தில் ஓட்டோவில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார். விபத்தில் காயமடைந்தவர்கள் கந்தளாய் மருத்துவமனையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
(வ)

### ஏறாவூர் வீதி விபத்தில் முதியவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, செப்.26
மட்டக்களப்பு–கொழும்பு நெடுஞ்சாலையில் ஏறாவூர் நகரில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்து ஏறாவூர் ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
நேற்று பி.ப ஒரு மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



ஏறாவூரிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பிக்கப் வாகனம் திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்து பாதசாரி மீதும் வீதியருகே இருந்த தொலைபேசிக் கம்பம் மற்றும் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஆகியவற்றின் மீதும்மோதி சேதமேற்படுத்தியுள்ளது.
விபத்தில் பாதசாரியான ஏறாவூர்கிராம நீதிமன்ற வீதியைச் சேர்ந்த எம்.ஹயாத்து முஹம்மது (வயது- 76) என்பவர் படுகாயமடைந்த நிலையில் ஏறாவூர் ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை ஏறாவூர் மோட்டார் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(வ-10)

## குற்றங்களும் கைதுகளும்

அக்கரைப்பற்று

### சிறுமியைக் காதலித்து பாலியல் துஷ்பிரயோகம் செய்தவருக்கு மறியல்

அக்கரைப்பற்று தீவுக்காலை பிரதேசத்தில் 15 வயதுச் சிறுமி ஒருத்தியைப் பாலியல் துஷ்பிரயோகம் 17 வயது காதலனை 14 தினங்கள் விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதியும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான எச்.எம்.முஹமட் பஸீல் உத்தரவிட்டுள்ளார்.
அக்கரைப்பற்று கோளாவில் முதலாம் பிரிவு தீவுக்காலை கிராமத்தைச் சேர்ந்த 15 வயதுடைய குறித்த சிறுமியின் பெற்றோர் சுனாமி இடரின்போது உயிரிழந்த நிலையில் பாட்டி யின் கவனிப்பில் வாழ்ந்துவந்த குறித்த சிறுமிக்கு அதேகிராமத்தைச் சேர்ந்த 17 வயது சிறுவனுடன் காதல் ஏற்பட்டுள்ளது.
அதனை அடுத்து கடந்த மாதம் அருகிலுள்ள ஆலயத்தில் இடம்பெற்ற உற்சவ தினத்தன்று இரவு ஆலயத்துக்கு இருவரும் சென்றுள்ளனர். அந்தப்பகுதியில் காதலியான சிறுமியை ஆசைவார்த்தைகாட்டி பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்குறித்த இளைஞன். அதனைத் தொடர்ந்து குறித்த சிறுமியை மட்டக்களப்பு பன்குடாவெளி பிரதேசத்துக்கு அழைத்துச் சென்று மூன்று தினங்களாக பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.
இது குறித்து சிறுமியின் பாட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுத்துள்ளார். பொலிஸார் 17 வயதுச் சிறுவனை கைது செய்ததுடன் சிறுமியை அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் சேர்த்தனர். இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சிறுவனை செவ்வாய்க்கிழமை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது இளைஞனை 14 தினங்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (வ–10)

தென்மராட்சி

### தாக்குதல்களில் மூவர் காயம்

வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களால் காயமடைந்த 2 குடும்பப் பெண்கள் உட்பட மூவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சரசாலை மத்திய பகுதியில் அயல் வீட்டுக்காரருடன் திங்கட்கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் காயமடைந்த இரு பெண்களும் செவ்வாய்க் கிழமை வீதியில் வந்த போது இடை வழியில் மறித்த கும்பலால் தாக்கப்பட்ட புத்தூர் நிலாவரையைச் சேர்ந்த நபர் ஒருவருமே இவ்விதம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள் ஆவர். சரசாலை மத்தியைச் சேர்ந்த யசோதரன் சிந்துஜா (வயது–29) மகேந்திரன் நந்தினி (வயது–29) புத்தூர் நிலாவரையைச் சேர்ந்த முருக தாஸ் கஜேந்திரன் (வயது–28) ஆகிய மூவருமே அவர்களாவர். (வ–9)

தென்மராட்சி

### பொது இடத்தில் மது அருந்தியவர் 80 மணிநேர சமூகப்பணியில்

பொது இடத்தில் வைத்து பொது மக்களுக்கு இடைஞ்சல் விளைவிக்கும் வகையில் மது அருந்திய மூவரை 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் உத்தரவிடப்பட்டது. சாவகச்சேரி பொலிஸாரால் சரசாலையைச் சேர்ந்த ஒருவருக்கும் திருநெல்வேலியைச் சேர்ந்த இருவருக் கும் எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்குகளை நேற்று முன்தினம் தனித்தனி யாக விசாரித்த நீதிவான் மூவ ருக்கும் தலா 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு உத்தரவிட்டார். இதேவேளை– கசிப்பு வைத்திருந்ததாக கொடிகாமம் வாசிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கும் 80 மணித்தியாலங்கள் சமூகப்பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதா யஞ்சார் பிரிவில் ஒப்படைக் குமாறு உத்தரவிட்டார். (வ–9)

### அனுமதியின்றி வீட்டில் கள் வைத்திருந்தவருக்கு அபராதம்

அனுமதிப்பத்திரமின்றி வீடுகளில் கள் வைத்திருந்திருந்த 31 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் மதுவரி நிலையத்தினரால் குறித்த 31 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன்தினம் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
வழக்குகள் விசாரிக்கப்பட்டபோது எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 31 பேருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (வ–9)

அம்பாறை

### சமுர்த்தி வங்கியில் மோசடி; நால்வருக்கு விளக்கமறியல்

அம்பாறை மத்தியமுகாம் சமுர்த்தி வங்கியில் வாடிக்கையாளர் ஒருவரின் பெயரில் கையொப்பமிட்டு வங்கியில் கடன்பெற்ற மோசடி தொடர்பாக வங்கி முகாமையாளர், உட்பட வங்கியில் கடமையாற்றியவரும் 4 பேரை 14 தினங்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி அந்தோனி ஜூட்சன் உத்தரவிட்டுள்ளார். சம்பவம் குறித்து தெரியவருவதாவது:
மத்தியமுகாம் சமுர்த்தி வங்கியில் வாடிக்கையாளராக இருந்துவந்துள்ள ஒருவரது பெயரில் சான்றிதழ்கள் மற்றும் போலி கையொப்பமிட்டு அவரின் பெயரில் 75 ஆயிரம் ரூபா மோசடியான முறையில் கடன் பெறப்பட்டுள்ளது.



அந்தக் கடன் மீளச் செலுத்தாததை அடுத்து அதிகாரி கள் மேற்கொண்ட விசாரணையில் இந்த மோசடிச் சம்பவம் தெரியவந்துள்ளது. அதனை அடுத்து வாடிக்கையாளர் தான் கடன் பெறவில்லை தனது பெயரில் மோசடியாக கடன் பெறப்பட்டுள்ளதாகவும் மத்தியமுகாம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த நிலையில் மோசடி தொடர்பாக அம்பாறை விசேட குற்றவியல் பொலிஸார் மேற் கொண்ட விசாரணையை அடுத்து புதன்கிழமை காலை மத்தியமுகாம் சமுர்த்தி வங்கி முகாமையாளர், பதில் முகாமையாளர், காசாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய 4 பேரையும் அம்பாறை விசேட குற்றவியல் பொலிஸார் கைது செய்தனர். இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை புதன்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியபோது இவர்களை 14 தினங்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இதேவேளை– அண்மையில் இந்த வங்கிச் சங்கத்தில் கடமையாற்றிவந்த உத்தி யோகத்தர் ஒருவர் பணவைப்பு புத்தகத்தில் மோசடி செய்தமை தொடர்பாகக் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(வ–10)

# மட்டு. வாவியில் பிடிக்கப்படும் மீன்களை பயன்படுத்த முடியும்

மட்டக்களப்பு, செப்.26
மட்டக்களப்பு வாவியில் பிடிக்கப்படும்மீன்களைபயன்படுத்துவதில் எவ்வித பிரச்சினைகளும் தற்போதைக்கு இல்லை என்று காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அறிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் காத்தான்குடி பள்ளிவாசல்களிலுள்ள ஒலிபெருக்கிகள் மூலமாக காத்தான் குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் நேற்று முன்தினம் புதன்கிழமை அறிவித்தார்.
காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் யு.எல்.நசிர்தீனின் கையொப்பத்துடன் விடுக்கப்பட்டுள்ள அந்த அறிவித்தலில்,
'மட்டக்களப்பு வாவியில் பிடிக்கப்படும் மீன்களை உணவுக்காகக் கொள்வனவு செய்ய வேண்டாம் என்று மட்டக்களப்பு போதனா மருத்துவமனையால் அறிவிக்கப்பட்டுள்ளது என்று பொது மக்கள் மத்தியில் ஒரு செய்தி அண்மைக் காலமாக பரப்பப்பட்டுள்ளது.
இந்தநிலையில், காத்தான்குடி வாவிக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களால் இது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட புகார் குறித்து காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரியின் தலைமையில் கலந்துரையாடப்பட்டது.
இதுகுறித்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனை அதிகாரிகளுடனும் குறிப்பாக புற்றுநோயியல் வைத்திய நிபுணர்களுடனும் மட்டக்களப்பு சூழல் சுற்றாடல் அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு வினவியபோது இதில் எதுவித உண்மைத்தன்மையுமில்லை என்பது தெரியவந்துள்ளது.
எனவே, பொதுமக்கள் வழமை போன்று மட்டக்களப்பு வாவியில் பிடிக்கப்படும் மீன்களை உணவுக்காக கொள்வனவு செய்வதில் தற்போதைக்கு எவ்வித பிரச்சினைகளுமில்லை' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# தஞ்சம்கோரி ஆஸி. செல்வோர் இனிமேல் கம்போடியாவுக்கு

படகுமூலம் தஞ்சம் கோரி ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் அகதிகளை கம்போடியாவுக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பில் கம்போடிய அரசுடன்தான் ஒப்பந்தம் செய்து கொண்டதை ஆஸ்திரேலியா உறுதி செய்துள்ளது.
படகுகள் மூலம் விசா இல்லாமல் வந்தவர்களையும் நௌரு, மனுஸ், பப்புவா நியூகினியா தீவுகளில் உள்ளவர்களையும்கம்போடியாவுக்கு அனுப்புவதற்கான ஒப்பந்தம் செய்துள்ளதாக ஆஸ்திரேலியா குடிவரவு குடியகல்வு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.
இந்த நடவடிக்கை மிக விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நடவடிக்கைக்கு எதிர்க்கட்சிகள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. ஆனால் கிலாரட் பதவியில் இருந்தபோது புகலிடம் கோரியவர்களை மலேசியா அனுப்பியது போன்ற நடைமுறைதான் இதுவும் என்று மொரிசன் விளக்கியுள்ளார்.
இதேவேளை- இந்த நடவடிக்கையானது மனித உரிமை மீறலாகும் என மனிதஉரிமைஅமைப்பொன்று குற்றம் சுமத்தியுள்ளது. கம்போடியாவில் அகதிகள் வாழ்வதற்கான சரியான சூழலும் இல்லை என அந்த மனிதஉரிமைஅமைப்புசுட்டிக் காட்டியுள்ளது. (வ)

# மயக்க மருந்து தெளித்து பெண்ணின் கூந்தல் அறுப்பு

*தொண்டமானாறில் சம்பவம்*

யாழ்ப்பாணம், செப்.26

நள்ளிரவு நேரம் வீட்டு யன்னலைப் பிரித்து உள் நுழைந்தவர்கள் வீட்டில் இருந்த 33 வயதுடைய பெண்ணுக்கு மயக்கமருந்து தெளித்து விட்டு அவரின் கூந்தலை அறுத்துச் சென்ற விசித்திரச் சம்பவம் தொண்டமானாறு பகுதியில் இடம்பெற்றது. குறித்த பெண் இது குறித்து நேற்று முன்தினம் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த பெண்ணின் கணவன் வெளிநாட்டில் உள்ளார். குறித்த பெண்ணும் அவரது இரு குழந்தைகளும் அந்த வீட்டில் இருந்துள்ளனர். அவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவேளை யன்னலைப் பிரித்து உள் நுழைந்தவர்கள் மயக்க மருந்தை தெளி கருவி மூலம் தெளித்து விட்டு இந்தச் செயலைப் புரிந்துள்ளனர்.

இதன்போது அருகில் படுத்திருந்த குழந்தையின் கையிலும் சிறிய வெட்டுக் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-109)

# மோட்டார் சைக்கிளில் கடத்தப்பட்ட சிறுமி நாகர்கோவில் பகுதியில் வைத்து விடுதலை

வடமராட்சி வல்வெட்டித்துறை பகுதியில் தனியார் வகுப்பு முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த 12 வயதுச் சிறுமி மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டு நாகர்கோவில் பகுதியில் கைவிடப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை தெணியம்பை பகுதிக்கு சமீபமாகச் சிறுமியை வழி மறித்தவர்கள் அவரை அச்சுறுத்திக் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் நாகர்கோவில் ஆலயத்துக்கு சமீபமாக ஆள்கள் வசிக்கும் பகுதியில் சிறுமி அநாதரவாக நின்றதை அவதானித்த அந்தப் பகுதி மக்கள் உடனடியாக அந்தப் பகுதிக்கு பொறுப்பான கிராமசேவகருக்கு தகவல் வழங்கினர். அந்தப் பகுதிக்குச் சென்ற கிராமசேவகர் சிறுமியை விசாரித்த போது தன்னை இருவர் கடத்திச் சென்றதாகவும், பின்னர் அவர்கள் தன்னை இந்தப்பகுதியில் இறக்கி விட்டுச் சென்றதாகவும் கூறியுள்ளார்.

குறித்த பகுதி கிராமசேவகரான சிவகுமார் இது தொடர்பில் உடனடியாக வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சிறுமியிடம் விசாரணை நடத்தியதோடு சிறுமியை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு வந்தனர். இதன் பின்னர் நேரம் நள்ளிரவை தாண்டியிருந்ததால் சிறுமி பொலிஸ் நிலைய மகளிர் பாதுகாப்பு நிலையத்தில் தங்க வைக்கப்பட்டார் என வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

தன்னைக் கடத்தியவர்களில் ஒருவரை அடையாளம் காட்ட முடியும் எனவும் சிறுமி தெரிவித்ததாக பொலிஸார் கூறினர்.

இதேவேளை, சிறுமியைக் கடத்தியவர்களை தாம் வலை வீசித் தேடி வருவதாகவும், சிறுமி கூறிய சந்தேகநபரான ரகு என்பவரோ அல்லது அவருடன் சிறுமியை கடத்தியதாகக் கூறப்படும் சந்தேகநபரோ நேற்று மதியம் வரை கைது செய்யப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், சிறுமியை சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் முன்னிலைப்படுத்தி வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் பொலிஸார் கூறினர்.

இதேவேளை குறித்த சிறுமி தனது அத்தையின் பராமரிப்பிலேயே வாழ்வதாகவும் அவர்களால் நேற்றுமுன்தினம் பிற்பகல் சிறுமியை காணவில்லை என வல்வெட்டித்துறைப்பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்டதாகவும் பொலிஸார் மேலும்தெரிவித்தனர்.(த-109-101)

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

- SLAS மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு சனி 1.00 மணி - 5.00 மணி வரை, ஞாயிறு 9.00 மணி - 3.00 மணி வரை
- அபிவிருத்தி உத்தியோகத்தர் வினைத்திறன் பரீட்சைக்கு ஒவ்வொரு ஞாயிறும் 9.00 மணி
- அரச முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்கு ஒவ்வொரு ஞாயிறும் பி.ப.1.30 – 4.30 மணி வரை (613864)(12.3.6)

யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு, (யாழ்.ஆஸ்பத்திரி வீதி, (கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)

**கணக்கீடு**

A/L 2015 ஆரம்பம்
வருமானச் செலவுக் கணக்கு
சனி 1.00 pm
Paper திங்கள் 6.00 am
A/L 2016 ஆரம்பம்
வங்கிக் கணக்கிணக்கக் கூற்று
பிரிவு I சனி 12.00 am
பிரிவு II திங்கள் 3.30 pm (53419)(12.3.6)
S. தவா
Sham Rock,
ஈச்சமோட்டை.

**-ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna
கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். பிரெஞ் ஆசிரியரிடம் சரியான உச்சரிப்போடு படிக்க, CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம் இன்றே பதிவுசெய்யுங்கள்
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**தேவை**

யாழ்.ஆரியகுளத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்துக்கு Receptionist (பெண்) தேவை. தகைமை : A/L 3 சித்தி மற்றும் English, Computer அறிவு விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளோர் இன்று (26.09.2014) வெள்ளி 3pmஇற்கு CV யுடன் நேரில் வரவும். (52584)(7.8.3)
இல. 40, பலாலி வீதி, ஆரியகுளம். : T.P : 077 978 9456

**கணக்கீடு**

A/L 2015
ஆரம்பம்
வருமானச் செலவுக் கணக்கு
பிரிவு I சனி 6.00 am
பிரிவு II சனி 3.00 pm
A/L 2015
Paper
பிரிவு I சனி 7.00am
பிரிவு II சனி 4.00pm
A/L 2016
ஆரம்பம்
தொங்கல் கணக்கு
பிரிவு I சனி 8.00am
கணக்கீட்டுச் சமன்பாடு
ஆரம்பம் (53418)(12.3.6)
பிரிவு II சனி 5.00pm
S. தவா
Universal
கந்தர்மடம்.

**தென்னிந்திய திருத்தல யாத்திரை**



தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கு ஊடான திருத்தல யாத்திரை

ஆரம்பம் 20.10.2014 -04.11.2014 வரை

நாள்கள்-15 யாத்திரீகர்கள்-10

உச்சிப்பிள்ளையார், 9 நவக்கிரக ஆலயங்கள், பஞ்சப்பூதத் திருத்தலங்கள் 5, மேல்மருவத்தூர், ஆறுபடைவீடுகள், திருப்பதி, பொற்கோவில், மருதமலை உட்பட 60இற்கும் மேற்பட்ட ஆலயங்களை தரிசிப்பதுடன், மரீனாபீச், M.G.R, அண்ணா நினைவாலயங்கள், பாண்டிச்சேரிப்பீச், பூம்புகாரும் காணலாம். மேலும் யாத்திரை சென்று திரும்பும் வரை நாங்களே உடன் இருப்போம்.

பெற்றுக்கொண்டநுபாவிற்கு எமது சேவை

இருவழி விமான ரிக்கட், எயர்போட் போக, வர வாகன வசதி, மூன்று வேளை உயர்தர சைவ உணவு, ஒரு நாளைக்கு 1 லீற்றர் மினரல் வோட்டர், 4 மணிக்கு கோப்பி, ரீ, யாத்திரை முடியும் வரை A.C வாகன வசதி, 2 பேருக்கு கட்டில் மெத்தை குளியலறை இணைந்த அறைகளில் தங்க வைக்கப்படுவீர்கள்.

இது தவிர எமது தனிப்பட்ட அன்பளிப்பாக ஆலயங்களில் குறூப்பாக எடுக்கும் 60 புகைப்படங்கள் வழங்கப்படுவதுடன், எயர்போட் செல்ல கொழும்பு வரவும், திரும்ப யாழ்ப்பாணம் செல்லவும் வாகன வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.

எங்குமில்லாத குறைந்த கட்டணம் 95,000/=

விவரங்களுக்கு:
கலாநிதி.T.ஸ்ரீரெங்கநாதன்
59.3/6, செட்டியார்தெரு, கொழும்பு-11.
T.P: 0777 680 102, 011 3030 806
வாழ்க வளமுடன்

**வேலைவாய்ப்பு**



விரையுங்கள்!
துபாயில் தொழில்
400 டக்ஸி ஓட்டுநர் வெற்றிடங்கள்

அபுதாபியின் முன்னணியில் உள்ள கார், டக்சி சாரதிகளுக்கான கம்பனியில் வேலைவாய்ப்பு இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

இடம் : துரையப்பா அரங்கிற்கு முன் (பழைய மாநகர சபை கட்டட வளாகம்)
காலம் : 28.09.2014 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.30 மணி

தகைமை
- இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம் - குறைந்தது 2 வருடங்கள் (3 வருடங்கள் விரும்பத்தக்கது.)
- வயதெல்லை: 23-47 வரை
- UAE மற்றும் வளைகுடா சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

தொழில் வகை
- அடிப்படைச் சம்பளம் மாதம் 30,000/= (இலங்கை ரூபா.) மற்றும் தரகுப் பணமும் வழங்கப்படும். (130,000/= தொடக்கம் 200,000/= வரை உழைக்கலாம்.)

நிபந்தனைகள்
- தங்குமிடம், போக்குவரத்து வழங்கப்படும்.
- அடிப்படைச் சம்பளம் 800 திர்ஹாம் + தரகுப் பணம்.
- இரண்டு வருட ஒப்பந்த காலம்
- மருத்துவம் தொழிலாளர் சட்டத்திற்கமைய.

ஆவணங்கள்
- பாஸ்போட் /பிரதி உட்பட
- சாரதி அனுமதிப் பத்திரம் /பிரதி உட்பட
- சுயவிரவம்
- 10 பாஸ்போட் அளவிலான படங்கள்.

*வங்கிக் கடன் வசதி 118,0000 வரை வழங்கப்படும்.



உடன் பதிவுகளுக்கு:
Lanka Voice Adve (Jaffna) : 077 952 7575
Lanka Voice Adve (Vavuniya, Mannar) :076 669 7789
SECURE MANPOWER RECRUITMENT (PVT) LTD. பதிவு இல. LL-2813
No.8B,Vajira Road, Bambalapitiya, Colombo - 04,Srilanka

**வேலைவாய்ப்பு**

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் பின்வரும் இடங்களுக்கு தேவைப்படுகின்றனர்.

- யாழ்ப்பாணம்
- பருத்தித்துறை
- கிளிநொச்சி
- வவுனியா
- மன்னார்



தகைமை : A/L சித்தி
அனுபவம் : சந்தைப்படுத்தல் துறையில் முன்அனுபவம் உள்ளவர்கள் மற்றும் அனுபவம் பெற விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம்.
வயது : 20-28
சம்பளம் : அனுபவம், தகைமை மற்றும் முன்னேற்ற அடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படும்.

சுயவிவரக்கோவையை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது தபால் முகவரிக்கோ 30.09.2014 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

விள.இல.: 5013
மே/பா. உதயன், இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Email: jaffnavacancy@gmail.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.